ர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

# புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

| மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஞு தை-மீ 22-உ (4—2—1934) | மலர் 11. |
|---|---|---|

காந்தியத்தை ஒழிப்பது வர்ணாச்சிராமத்தை ஒழிப்பதாகும்.

காந்தியார் பணக்காரத் தரகர்.

காந்தியார் பார்ப்பனரின் கையாள்.

## ஏன் சுயமரியாதை இயக்கத்தில் சேரவேண்டும்?

1. அது ஒன்றேதான் மக்கள் சமூகவாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக்கூடாது என்ற சமதர்மத்துக்கு போராடுகின்றது.

2. அது ஒன்றேதான் மனிதசமூகம் பொருளாதாரத்தன்மையில் ஒருவருக்கொருவர் பணக்காரன் ஏழை என்கின்ற வித்தியாசம் இல்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லோருக்கும் சரிசமமாய் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

3. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சரிசமத்துவம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

4. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஜாதி, மதம், வருணம், தேசம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக தோழமை வேண்டும் என்ற சமதர்மத்திற்குப் போராடுகின்றது.

5. அது ஒன்றேதான் உலகில் உழைப்பாளி, முதலாளி என்பது போன்ற பிரிவினையே இல்லாமல் சகல தேவைகளுக்கும், சகல மனிதர்களும் சரிசமமாகப் பாடுபட்டு அவற்றின் பயனை எல்லோரும் சரிசமமாக அனுபவிக்க வேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

6. அது ஒன்றேதான் ஒவ்வொரு மனிதனும் எவற்றிற்கும் எவ்விதத்திலும் அடிமையாகாமல் அவனவன் அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் ஆகியவைகளுக்கு இணங்கி நடக்க சர்வ சுதந்திரம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப்போராடுகின்றது.

"ஹரிஜன" சேவை வர்ணாச்சிரமத்தின் சேமவேலியும்.

'கதர்' பொருளாதாரம் பாட்டாளிக்கு முட்டுக்கட்டை.

தேசீயம் என்பது முதலாளிகளின் ஆட்சி.

## கத்தோலிக்கர்களின் வண்கூச்சல்.

இந்நூலில் கத்தோலிக்க மதப்பிரசாரத்தின் மடமையையும், மேனுட்டில் கத்தோலிக் மதத்தின் ஆபத்தான நிலையையும் அமெரிக்க நாஸ்திக அபிவிருத்தி சங்கத்தார போப்பிற்கு எழுதியுள்ள ஓர் கடிதமும் போப்வி த்த அறிக்கையும் ஆராய்ந்து எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை 0—0—6,

நூறு புத்தகக்களுக்குக் குறையாது ஆர்டர் செய்தால் தபாற் செலவுடன் ரூ. 1—8—0. 500க்கு தபால் செலவுடன் ரூ. 5—0—0,

விலாசம்:—

குடி அரசுப்பதிப்பகம், ஈரோடு.

## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலிய வைகளை நீக்கும்.

ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.



உயர்ந்த முறையில் தயாரித்த வை. பரம்பரை வைத்திய சந்ததியிலுதித்தவரென்றும், சமஸ்தானவைத்திய நிபுணரென்றும் பழனியில் கியாதி வாய்ந்திருப்பதை நீங்கள் அறியீர்களா? எமது மருந்துகளில் ஒப்புயர்வற்றது.

## மகா வீரிய

## தங்கபஸ்பம்.

வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், குன்மம், சூலை முதலிய சகல கொடிய வியாதிகளும் நீங்கும்.

அழிந்துபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வசக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒருமுறை உபயோகித்துப்பாருங்கள்.

24-நாள் பஸ்பம் விலை ரூ. 10.

### சர்வபடை நிவாரணி.

சகல மேகபடை, ஊரல், படர்தாமரை இவைகள் ஒரே நாளில் உதிர்ந்துவிடும். புட்டி 1க்கு 0—8—0.

அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

## விவாக விடுதலை.

(இந்து மனைவியருக்கு இன்றியமையாதது)

ஆசிரியர்:

கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.

ஆராய்ச்சி நிரம்பிய இந்த அரிய நூல் ஒவ்வொரு மாதர் கையிலும், சீர்திருத்தக்காரர் சமதர்மி கையிலும் இன்றியமையாமல் இருக்க வேண்டியது. "'விவாக விடுதலை' என்னும் வேரின்றி மாதர் சுதந்தரம் என்னும் மரம் இல்லை" என்பது எவ்வாறென அறிய விரும்பின் இந்நூலை இன்றே படித்தல் வேண்டும்.

விலை அணா 4.

கிடைக்கும் இடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

# 11-2-34 ஞாயிறன்று சுயமரியாதை தினம்.

## தமிழ்நாடெங்கும் பொதுக்கூட்டங்கள்.

[தோழர். எஸ். வி. லிங்கம்]

நமது தலைவர்கள் சிறைக்கூடம் சென்று விட்டார்கள். இன்னம் நூற்று எண்பது தினம் கழித்துத் தான் இராமசாமி அவர்களை நாம் பார்க்கக்கூடும். நமது தலைவர்கள் சிறைபட்ட தினமிருந்து இன்றுவரை நமதியக்கத்தோழர்களும், இயக்கத்துக்கு மாறுபட்ட—ஆனால் நண்பர்களாகவுள்ள பலரும் எழுதிய கடிதங்கள் கட்டாகக் கட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஆறு மாதம் சென்று வெளிவரும் போது தான் அக்கட்டிலுள்ள—நூற்றுக்கணக்கான — உணர்ச்சி ததும்பிய—இயக்கத்தைப் பாதுகாத்து வளர்க்கவேண்டியவீரம் நிறைந்த சொற்களையுடைய வார்த்தைகளை—தாங்கள் இயக்க வளர்ச்சிக்குச் செய்யப்போவதாக உறுதிமொழி கூறும் சிறிய, அழகிய, தொடர்மொழிக்கடிதங்களை நமது தலைவர் பார்க்கப்போகிறார். ஆதலால் இயக்கத்தலைவரிடம் நட்புடையோராயினும்—மாறுதல் கருதி பேதமுடைய கனவான்களுக்கும், இயக்கத்தோழர்களுக்கும் இச்சிறு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

மாறுபட்ட நண்பர்களே! உங்கள் அநுதாபங்களை — தைரியமொழிகளை தலைவரிடம் கூறினோம். தான் சிறை செல்வதே இவர்கள் காட்டிய அன்புக்கு பிரதி உத்திரமாக சொல்லும் அன்பு என்று அர்த்தப்பட சொல்லித்தலைவர் சிறை சென்றார். நீங்கள் எங்கள் இயக்கத்திலுள்ள கொள்கைகள்---சிலவற்றில் மாறுபட்டிருக்கலாம். உங்கள் அரசியல் அறிவின் முதிர்ச்சியில் நாங்கள் கடையானவர்கள் என்று கூட நம்பலாம். ஆனால் எங்கள் தலைவர் கடைசியாக சிறையை—சிறை கஷ்டத்தை வருவித்துக்கொண்டது உங்கள் போன்றோரின் கூட்டுறவுக்காகத்தான் என்பதை நினைத்துப்பார்த்து, இனியேனும் எங்களுடன் பூரணமாக ஒத்துழைக்காவிடினும், கொஞ்சம் அநுதாபத்துடனாவது இருங்களென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஃ ஃ

சுயமரியாதைக்காரர்களே!

இது ஓர் சோதனைக் காலம். பரிட்சை நாள் உங்களுக்கு கிட்டியிருக்கிறது. உங்களில் சிலர் நினைப்பது போல சிறைச்சாலை பிரவேச வேலைத்திட்டம் எதும் இன்று இல்லை. அது நம்முடைய கொள்கையும் அல்ல. ஆனால் நீங்கள் நீண்டகாலமாய்—பத்து வருடமாய்-மூவாயிரத்து அறுநூறு நாளாய் தினம் எண்ணி வந்ததைப் பேசிவந்ததை, எழுதி வந்ததை செய்கையில் காட்ட ஓர் நல்ல சந்தர்ப்பம் இன்று கிட்டியிருக்கிறது. நமது தலைவரை சிறைக்கனுப்பியது சர்க்காராகும். தெரியாத்தனமாக சர்க்கார் எதும் செய்வதில்லை. பொது மக்களுக்கு நன்மை எது எதுவோ அதை செய்வதற்காகவே—சர்க்காரை நாம் வைதிருக்கிறோம். அவர்களுக்குத்தான் தெரியும் நம்மை எப்படி வைத்திருப்பது என்பதும். அந்த நீதியிலே தான் தலைவர்கள் ஓய்வு பெற சிறைச்சாலைக்குப்போயிருக்கிறார்கள். இது ஓர் சாதாரண விஷயமேதவிர, பூகம்பம் போன்றோ, எரிமலை போன்றோ, மற்றவர்கள் எடுத்துப்பேசக்கூடிய ஓர் சோம்பேரி பேச்சுக்குகூட ஆகாத காரியமாகும். இன்னம் ஒருபடி மேலே சென்று சொல்லவேண்டுமானால் பூகம்பமும், எரிமலையும், உண்டாகி விட்டதாலும் ஒன்றும் குடி முழுகிப்போய் விடவில்லை என்பதே சுயமரியாதைக்காரர் சொல்லக்கூடியதாகும். ஏனெனில் இயற்கையில் பல கிரகங்களின் தன்மை இயங்கும் முறையை ஒட்டியே பூமியதிர்சசி உண்டாகிறது. இதை அக்காலத்தைப்போல் ஏகோவாவின் கோபமென்றோ, மகாவிஷ்ணுவின் வருத்தமென்றோ, பரமசிவனின் சீற்றமென்றோ இன்று யாரும் சொல்லவில்லை. இது பகுத்தறிவு காலம். பூமி அதிர்ச்சி என்றதும், மேன்மை தங்கிய வைசிராய் பிரபுவும், தேச பக்தர் ராஜேந்திர பிரசாத்தும்—பூகம்பம் உண்டான இடத்துக்கு ஓடி, தவித்த மக்களுக்கு உதவி செய்ததுடன் இவ்வுதவி வேண்டிய மக்களுக்கு இந்நாட்டார் முழுதும் உதவி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார்களே தவிர கடவுள் கோபத்தால் பூகம்பம் வந்தது, ஆதலால் கடவுளை எல்லா மக்களுக்கும் பிரார்த்தனை செய்யுங்கள் என்று அவர்கள் கூறவுமில்லை. அவர்கள் சொன்னால் அதை நீங்கள் நம்பவும் மாட்டீர்கள்.

ஆதலால் தலைவர் சிறை சென்றதைப் பாராட்டுவதில், அல்லது சர்க்காரைப்பாராட்டுவதில், அல்லது கண்டிப்பதில் வீணாக்கும் நேரத்தை உங்கள் கடமையைச் செய்வதில் உபயோகியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஃ ஃ

பூகம்ப அதிர்ச்சியால் கஷ்டப்படும் மக்களுக்கு நம்முடைய அநுதாபமோ, ஆசியோ போய் எதும் நன்மை செய்யாது. அவர்களுக்கு அவர் வேண்டியது வயிற்றுக்குச் சோறு, திடீரென்று எதிர்பாராத விதமாய் அவர்களின் குடும்பத்தார் மண்ணுக்குள் மறைந்து விட்டார்களே! அந்த திகிலுக்கு ஓர் ஆறுதல். அந்த ஆறுதலும் வெறும் வார்த்தையளவில் அல்ல. அவர்களுக்கு நாம் செய்கையில் காட்டப்போகும்—உடுக்க உடை, தங்க இடம், சிறு குடலும், பெருங்குடலும் சண்டையிடாது ஒற்றுமையாயிருக்க உணவு ஆகியவை கிடைப்பதற்கான பொருளாதார ஆறுதலாக இருக்கவேண்டும். இதைத்தான் அவர்கள் விரும்புவதும், நீங்கள் செய்யப்போவதும். அதைப் போலவேதான் தலைவர்கள் சிறைபட்டதினால் நீங்கள் உணரும் உண்மையை அதற்காகக் காட்டும் அநுதாபத்தைச் செய்கையில் காட்டுமாறு கோருகிறேன்.

ஃ ஃ

பூமி அதிர்ச்சியினால் மாண்ட பதினாயிரக்கணக்கான மக்களினால்! இந்திய நாடும், அவ்வாபத்து நேர்ந்த மாகாணமும் அடைந்த நஷ்டம் அளவிட முடியாததாகும். மக்கள் வாழ்க்கையில் முழுநேரமும் பாடுபட்டு, பட்டபாட்டின் பலனாக பங்களாக்களாகவும், பட்டுப் புடவைகளாகவும், ஆகாயமளாவிய மில்லுகளாகவும், மில்லுகளுடன் போட்டியிட்டுக் கட்டப்பட்ட மாடமாளிகைகளாகவும் அம்மாளிகைகளுக்கு ஏற்றவாறு போடப்பட்ட வீதிகளாகவும், ரோட்டுகளாகவும்: ஏற்பட்டிருந்த சகல சம்பத்துகளும் நாசமாயிற்று. இவைகளை உண்டுபண்ணி கொடுத்த மக்களும், அதே அதிர்ச்சியினால் மடிந்தார்கள். ஆதலால் நாமும் அவ்விதமான தப்பை நமது வாழ்க்கையில் செய்யாமல் இருப்போமாக. மீண்டும் பூகம்பத்தால் நாசமடையக்கூடியதுகளை நாம் உண்டாக்கவேண்டாம். பூகம்பம்நேரிட்டாலும், எரிமலை தோன்றினாலும், வேறென்ன நேரிட்டாலும் அவைகளால் பாதிக்கப்படாமல் இருக்கும் முறையில் நமது சமூகத்தை திருத்தியமைப்போமாக. இதைச்செய்ய வேண்டுமென்று சொல்லித்தான் உங்கள் தலைவர் சிறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் சிறை செல்லவேண்டுமென்று அவர்கள் கோரவில்லை. பூகம்பம் வராமலே! பூகம்பத்தால் பாழ்பட்ட, மாளிகைகள், மில்லுகள், இவைகளின் உற்பத்திக்கு காரணமாயுள்ள மக்களின் அரை வயிற்றுக் கஞ்சிக்கு, மானம் மறைய உடைக்கு எதாவது வழி ஏற்படுமாறு பாடுபடுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். இம்முயற்சிக்கு மனித இருதயம் படைத்த உங்கள் ஒத்துழைப்பு—ஆதரவு—செய்கையில் வெளிப்பட வேண்டும்.

ஃ ஃ

மதத்துக்காக வீண செலவிடாதீர்கள், மதத்தின் பேரால் அடிமைகளாகாதீர்கள், மதமும், கடவுளும், இவ்வுலகில்உங்களுக்குஉதவும் செய்யாது என்று இந்நாட்டில்மட்டுமல்ல, உலகம் முழுதும் உள்ள அறிவாளிகள் அத்தனை பேரும் பேசுகிறார்கள். இதைத்தான் நமது தலைவரும் உங்களிடம் பத்து வருடமாகச் சொன்னார்—எழுதினார். பீகாரிலும், நேபாளத்திலும் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தனது சரித்திர பூர்வமாக பிரக்யாதி பெற்ற மாடமாளிகையையும், சொந்த பெண்களையும், குடும்பத்தையும், பூஸ்திதியையும் இழந்த நேபாள மன்னர் இருக்கிறாரே அவரைவிடச் சிறந்த மதபக்தரை நீங்கள் காணமுடியுமா? அவரின் மதப் பிடிவாதமல்லவா! அந்நாட்டு மாட்டுப் பாலை கீழ்ஜாதிக்காரர்கள் குடிக்கக்கூடாது என்றும், அந்த ராஜ்யத்தில் இன்னின்ன இடங்களில் அன்னியர் கால் படக்கூடாதென்றும் அறிக்கை போடும்படி செய்ததே. அத்தகைய மதபக்திமானின் பூஸ்திதிகளை, பெண்களை, அரண்மனையை அம் மன்னனின் மதம் காப்பாற்றவில்லையே!

ஃ ஃ

நமது பெரியார் காந்தி பாபு கூறுகிறார், சீதையும், ராமனும் பிறந்துவளர்ந்த புண்ணிய பூமியென்று ராமயணக் கதைக்காரன் எழுதிவைத்தபடியே. ராமனும், சீதையும் அக்காலத்தில் பூகம்பத்தால்தான் பூமி வெடித்து உள்ளே போனார்கள். அதைப்போலவேதான் இன்றைய ராமர்கள், சீதைகள் இவர்களில் சிலரும், ராவணர்களிலும், விபீஷணர்களிலும் நூற்றுக்கணக்கானவர்களும் அநுமார்களில் பதினாயிரக் கணக்கானவர்களும் பூமி வெடித்து உள்ளேபோய்விட்டார்கள். இது நமது காந்தியாருக்குத் தோன்றவில்லை. இதுபோன்ற பொய்க் கதைகளைச் சொல்லி மக்களின் மடமையைப் பெருக்கி அவர்கள் கஷ்டத்தை அவர்கள் உணராது இருக்கும்படி மதநம்பிக்கையை யூட்டாதீர்கள் என்று சொல்லிவந்த நமது தோழரே இன்று சிறையில் வதிகிறார்.

ஃ ஃ

ஹிந்துமதத்தின் வைதீகர்கள் பாபம்தான், எட்டுக்கோடி மக்களின் சாபந்தான்- பீகார், ஒரிசா மாகாண

தொடர்ச்சி 18-ம்பக்கம் பார்க்க.

# கோவில்பட்டி தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

## தோழர் எஸ். நீலாவதி திறப்புவிழா சொற்பொழிவு..

## உற்சாகமான வரவேற்பு.

கோவில்பட்டி தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு கீழஈராலில் 27-1-34உ அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. குறிப்பிட்டபடி மேற்படி தினம் காலை மகாநாடு துவக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தும் 3, 4 தினங்களாகப் பெய்த கடும்மழை காரணமாக வெளியூரிலிருந்து வரவேண்டிய தோழர்கள் தாமதித்தே வரநேரிட்டது. திருச்சியிலிருந்து தோழர் எஸ். நீலாவதி-ராமசுப்பிரமணியம் அவர்களும், புதுக்கோட்டையிலிருந்து தோழர் கே. முத்துசாமிவல்லத்தரசு அவர்களும் ஈரோட்டிலிருந்து தோழர்கள் ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம் அவர்களும் காலை 6-மணிக்கே கோவில்பட்டி வந்திருந்தும், மழை காரணமாக காரில் 11-மணிக்கே 14-மைல் தூரமுள்ள கீழஈரால் வந்து சேர முடிந்தது. கீழஈராலுக்கு இரண்டு பர்லாங்கு தூர முன்பாக மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியாரும் பொதுஜனங்களும், மாணவர்களும், பெண்களும் சுமார் 300-பேர்களும் கூடியிருந்து வரவேற்று மாலைசூட்டி மேளவாத்தியங்களுடன் மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். வழிநெடுக ஏராளமான பெண்களும், ஆடவர்களும் ஊர்வலத்தில் வந்து கலந்துகொண்டார்கள். காகிதக் கொடிகள் தெருக்கள்தோறும் கட்டப்பெற்றிருந்தன. இராஜா எலிமெண்டரி ஸ்கூல் மாணவர்கள் ஸ்கவுட்உடையுடன் 20- மாணவர்கள் அணிவகுத்து முன்சென்றார்கள். ஊர்வலம் மகாநாட்டுப் பந்தலை அணுகியதும் தலைவர்களை வரவேற்குமுகத்தான் ஸ்கவுட் மாணவர்கள் பாடினார்கள். பின்பு தலைவர்கள் சிறிதுநேரம் பக்கத்திலுள்ள இராஜா எலிமெண்டரி ஸ்கூலில் சிரமப் பரிகாரம் செய்துகொண்டதும் சரியாக 12-மணிக்கு மகாநாடு துவக்கப்பட்டது. மகாநாட்டுப் பந்தல் சுமார் 2000-பேர்கள் உட்காரும்படி அமைக்கப்பெற்றிருந்தது. வரவேற்புக்கமிட்டியாருக்கும், தலைவர்களுக்கும் ஓர் மேடை இடப்பெற்றிருந்தது. மாணவர்களுக்காகவும், பெண்களுக்காகவும் தனித்தனியே இடம் வகுக்கப்பட்டிருந்தது பந்தல் செடிகளாலும், காகிதக் கொடிகளாலும் துணிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பந்தல் தூண்கள் ஒவ்வொன்றிலும் அழகிய எழுத்துக்களால் அச்சிடப்பட்ட சுமார் 100.போர்டுகள் வரை கட்டப்பட்டிருந்தன. அவைகளில் "தரைமீது தெய்வங்களை தரகர் வைத்துப் பொருள்பறித்தால் அரை வயிற்று ஏழைமக்கள் அடையுங்கதி அடிமையன்றோ! "பணக்காரனும் புரோகிதனும் பாமரமக்களின் பரமவிரோதி" "பாலுக்குப் பாலகன் பசித்து அழுதிட பாழான கற்களுக்குப்பாலபிஷேகமேன்?"

"மனிதனுய் வாழ மதத்தை ஒழி" "பார்ப்பனர் சூழ்ச்சியில் படாது பிழை" "எல்லாம் அவன் செயல்என்றால் உலகில் கொல்லுதல், திருடுதல் குற்றமாகுமா?" "கடவுள், மதம் சாத்திரம் அடிமைப் புத்திக்கு ஆணிவேர்" என்று இன்னும் பல பகுத்தறிவு வாக்கியங்கள் நிரம்பியிருந்தன.

மகாநாட்டிற்கு வந்திருந்தோர்கள் தோழர்கள் கே. முத்துச்சாமி வல்லத்தரசு, பி. ஏ., பி. எல். எம். எல். சி. எஸ். நீலாவதி-ராமசுப்பிரமணியம், ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம், கோவில்பட்டி மாஜி யூனியன், சேர்மன் திருப்பதி நாடார், செ. சி. தி. ராமசாமி நாடார் குருவிக்குளம் கிருஷ்ணபிள்ளை, டி. எம். மணி பி. ஏ.. கே. வெங்கிடுகிருஷ்ணன் (ஹெட்மாஸ்டர்) எட்டயாபுரம் முத்துச்சாமி, வேய்பலோடை கே. சாமிமலையன், குளத்தூர் சதாசிவன், பெத்தையா,. தூத்துக்குடி வைகுண்டம், அமிர்தராஜ், ஏ. டி. சின்னசாமி, கீழஈரால் கரு. நா. மு- வெ. பொன்னுசாமி, டி. வி. டி. தங்கவடிவேல், தங்கவேல், முருகநாடார், சண்முகம், ஆர். நடராஜன், கர்னம் கே. சிவசாமிநாதன், நடுவிற்பட்டி பி. எஸ். பொன்னம்பலம், தம்பாபிள்ளை ஊருணி யாக்கோப், பேரிலோகம்பட்டி ராமசாமி. புதியம்புத்தூர் வேதமுத்து, துரைசாமிபுரம் டி. எம். தங்கையா, மேலஈரால் கி. மு. சுப்பாக்குட்டி, வேல்வெள்ளசாமி,வேல். எஸ். சின்னசாமி, தானியேல், மிசஸ் வெள்ளச்சாமி, மிசஸ் தானியேல் மிசஸ் கிரே, மிசஸ், சின்னசாமி, மிசஸ் பொன்னுசாமி ஆகிய இன்னும் பல ஆணகளும், பெண்களும், சுமார் 1500-பேர்களுக்கு அதிகமாகப் பந்தலில் கூடியிருந்தனர் ஆரம்பத்தில் 2, 3 தோழர்கள் சமதர்மக் கீதங்கள் மிக இனிமையாகப் பாடினார்கள். பின்பு வரவேற்புக் கழகத் தலைவரால் தோழர் எஸ். நீலாவதி அவர்களை மகாநாட்டைத். திறந்து வைக்குமாறு கேட்டுக்கொண்டு மற்றொரு தோழரால் ஆமோதிக்கப்பட்டதும் தோழர் எஸ். நீலாவதி அவர்கள எழுந்து பேசிய தன் சாரம் பின்வருமாறு:.

தோழர்களே!

இந்த மகாநாட்டைத் திறந்துவைக்குமாறு நீங்கள் எனக்கு இட்ட கட்டளையை ஏற்று சிறிதுநேரத்தில் விஷயத்தைப் பேச விரும்புகிறேன். ஏனெனில் எனக்கு 4-தினங்களாக ஏற்பட்ட சுரத்தினால் நேற்று திருச்சியைவிட்டு புறப்படும்வரை பிரயாணம் சந்தேகமாகவே இருந்தது. நான் இங்கு வராமல் ஏமாற்றிவிடுவதாக இருந்தால் நீங்கள் வருத்தப்படுவீர்களென்று கருதியே உலகில் நமக்குள்ள பல முட்டுக்கட்டைகளையும் இவைகளோடு ஒன்றாகக் கருதி இங்கு வந்துசேர்ந்தேன். இந் நிலையில் நீண்டநேரம் பேசமுடியாதென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். உலகில் அடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சமூகத்தினருக்கும், ஒவ்வொரு மக்களுக்கும் விடுதலையுணர்ச்சி அரும்பியிருக்கிறதை நாம் உணருகிறோம். சென்ற பல ஆண்டுகளைப் போல் மக்கள் உறங்கிக் கிடக்கவில்லை. மனதில் பட்ட சந்தேகங்களைத்தீரத் தெளிய விசாரிக்கத் தொடங்கிவிட்டனர். தொழிலாளி தன்னுடைய தன்மையைச் சிறிது உணர ஆரம்பித்துவிட்டான். முழுதும் உணர ஆரம்பிக்கும் காலத்தில் பணக்காரனும், வைதீகனும் ஒருவர்பின் ஒருவராகப் பயணம் கட்டிக்கொள்வார்களென்பதில் ஐயமில்லை. தொழிலாளரின் விடுதலை முயற்சியை எவரும் அடக்கமுடியாது. இவ்வளவு தூரம் கொண்டுவந்தது சுயமரியாதை இயக்கந்தானென்று கூறுவதை எவரும் மறுக்கமுடியாது. ஒவ்வொரு பாட்டாளிகளின் தலையில் "தலைவிதி" "கர்மம்" "முன் செய்த வினை" என்று எழுதியிருப்பதாக எண்ணிக்கொண்டிருந்த எண்ணங்களின்மீது மண்ணைப் போட்டோம்.

மத சரித்திர புராணங்கள் மனித உலகத்தில் பிறந்த மனிதனை மிருக உலகத்திற்கும் கீழாக,இழிவாகக் கருதுவதை நாம்கண்எதிரில் பார்க்கிறோமல்லவா? மலத்திலும் கேவலமாகவல்லவோ ஆகிவிட்டது. மலத்தைத் தொடுபவன் கை கழுவினால் தீட்டுத் தீர்ந்துவிடுகிறதென்று கருதுகிறான். அதேமனிதன் மக்களைத் தொட்டால் குளிக்கவேண்டுமென்று கூப்பாடு போடுகின்றான். இதில் கடுகத்தனையாவது யோக்கியத் தன்மை இருக்கிறதாவென்று நோக்குங்கள். மனித முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்பவை எவையாயிலும் சரி. அது தான் தூளாக்கப்படவேண்டுவது தான் நமது முதல் வேலையாகும். உலகிலுள்ள எந்த மனிதனும் நமது தோழனே என்ற நிலைக்கு வரவேண்டும். இவன் இந்தியன், அவன் ஆங்கிலேயன் இன்னொருவன் ஜப்பானியன் என்ற வித்தியாசம் அகலவேண்டும். ஜாதி, மத, நிற தேசபாஷை அபிமானத் தன்மைகள்தான் இன்று உலகில் தோழமைத் தன்மைக்கு, சகோதரத் தன்மைக்கு இடையூறு விளைவிக்கின்றன. ஆகையால்தான் அவைகளை ஒழிக்கவேண்டுமென்று கூறுகின்றோம். தற்போது தோழர் காந்தியார் செய்துவரும் பிரசாரத்திற்கு உதவியாக ஜாதி,மத,நிற தேச பாஷை அபிமானத் தன்மைகள்தான் இன்று உலகில் தோழமைத் தன்மைக்கு சகோதரத் தன்மைக்கு இடையூறு விளைவிக்கின்றன. ஆகையால் தான் அவைகளை ஒழிக்கவேண்டுமென்று கூறுகின்றோம். தற்போது தோழர் காந்தியார் செய்துவரும் பிரசாரத்திற்கு உதவியாகஜாதி, மத நிற தேச பாஷை அபிமானத்தைத்தான் கருவியாகக் கொண்டிருக்கிறாரென்பதைநீங்கள் எவரும் மறுக்கமுடியாது. அப்பேர்ப்பட்டவரை இந்நாட்டு மக்கள் வழக்கப்படி முனிவரென்றும், காந்திரிஷியென்றும், அவதாரமென்றும் அழைக்க ஆரம்பித்துவிட்டதை நீங்கள் அறிவீர்கள். இது ஒரு ஆச்சரியமல்ல. மதத்தாலும், சாத்திரத்தாலும் ஆளப்படும் கூட்டத்தினர் எத்தனையோ குருட்டுநம்பிக்கைகளைவிட்டபிறகன்றோ பகுத்தறிவு உலகத்தைக் கண்திறந்து பார்க்கவேண்டும்.

காந்தியென்ற ஒருவர்மீது நமக்குப் பகைமையில்லை. காந்தீயம் என்ற கொள்கைமீதுதான் நமக்குப் பகைமையென்பதை நான் கூற விரும்புகிறேன். தோழர் காந்தி ஒருக்கால் நமது பகுத்தறிவு இயக்கத்தை நாடுவாரேயானுல் அப்பொழுது நாம் அவரை வரவேற்போமல்லவா? அது சமயம் காந்தியார் சொல்லிவந்த காந்தீயத்திற்கு வழி சொல்லியனுப்புவோம் தற்காலம் அவர் செய்யும் பிரசாரம் பெரிதும் பார்ப்பன விஷம் ஊட்டப்பட்டதாக இருக்கிறதென்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் சென்ற இடங்களில்பெண்கள் நகையணிகளைக் கழற்றிக் கொடுக்குமாறு கேட்கிறாரென்பது உங்களுக்குத் தெரியும். கழற்றி வாங்கிக்கொள்ளட்டும். அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் அந்தப் பெண்கள் கண்களிருந்தும் குருடர்களாகவும் காதுகளிலிருந்தும் செவிடர்களாகவும் இருக்கிறார்களே அதற்குத் தோழர் காந்தியாரே என்ன செய்தீர் என்று கேட்க நமக்கு உரிமையுண்டு என்பதை தோழர் காந்தியாரே எண்ணிப் பார்த்திருப்பிரேயானுல் பெண்களுக்கு எதாவது செய்துதானிருப்பார். அடிமைகளுக்கு அடிமை நிலையிலிருக்கும் பெண்கள் நிலையை தோழர் காந்தியார் அறியாமற்போனது விந்தையேயாகும். பீஹார் மாகாணம் எங்கள் ஜானகி உதித்தநாடு அவன் வளர்ந்தநாடு, இவன் ஆண்டநாடு

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

# கோவில்பட்டி தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

## கீழ ஈராலில் பெருந்திரளான கூட்டம்.

வரவேற்புக்கழகத்தலைவர் தோழர்

### வேல். வெள்ளைசாமி சொற்பொழிவு.

### தலைவர் தோழர். முத்துசாமிவல்லத்தரசு

முன்னுரைப்பிரசங்கம்.

தோழர் வேல். வெள்ளச்சாமி வரவேற்பு சொற்பொழிவு வருமாறு:—

இத்தாலுகாவில் முதன் முதல் நடக்கும் சுயமரியாதை மகாநாட்டிற்கு வரவேற்புக் கழகத்தார் சார்பில் உங்கள் அனைவரையும் நான் மகிழ்சியுடன் வரவேற்கிறேன்.

நமது இயக்கத்தின் தத்துவத்தைச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானுல் மானுஷீக முன்னேற்றத்திற்குத் தடைகளாக உள்ளவைகள் எதுவாயிருப்பினும் அவைகளை எதிர்த்துப் போராடுவதே நமது லட்சியமாகும்.

மயக்கம்.

மனம், வாக்கு, காயம், இன்னும் மற்ற அறிவுகளுக்கும் எட்டாத பொருள்! ஆதியும், அந்தமும் இல்லாத பொருள்! அரூபியான பொருள்! வேதம் முதலிய மற்றெல்லா ஞான நூல்களாலும் கண்டறியாதது, 'எனப்பட்ட பொருள்! எக்காலத்தும் எவராலும் காணமுடியாத பொருள்! உளதா? இல்லையா? என்று ஆராய்வது பித்தனது செய்கையை ஒக்கும். குழந்தைக்கு அறிவு முதிர முதிர பூச்சாண்டிப் பயம் எங்ஙனம் வளர முடியாதோ, அங்ஙனமே மனிதனுக்கு அறிவு முதிர முதிர, பகுத்தறிவு மேலோங்க, ஆராயும் தன்மை வளர, அஞ்ஞானம் அகன்று மெஞ்ஞானம் புக மதமும், கடவுளும் விலகியே தீரும்.

கோடுமைகள்.

அக்கிரமம், அநீதி, கொள்ளை, கொடுமை, பசிப்பிணி, இவைகள் எங்கெங்கு தாண்டவமாடுகிறதோ அங்கங்கே புதிய உணர்ச்சியும், வீர எழுச்சியும் மக்களுக்கு உண்டாகும். நம் நாட்டிலும் கடவுள், மதம், புராணம், பரம்பரை, இவற்றின் பேரால் மக்களை வஞ்சித்து இவர்கள் அரும்பாடுபட்டு இரத்தவேர்வை சிந்திச் சேகரிக்கும் சொத்தை, சிரமமின்றி கொள்ளை கொண்டு நிழலிலமர்ந்து வயிறுவளர்க்கும் சோம்பேறிகளாகிய மதக்குருக்கள், புரோகிதர்கள், அர்ச்சகர்கள், பாதிரிகள், முல்லாக்கள், கனபாடிகள், பூசாரிகள், லேவாதேவிக்காரர்கள், நிலச்சுவான்தாரர்கள் இவர்களின் கொடுஞ் செயலை இனி சகிக்க முடியாது. இதைத் தொலைப்பதற்கெனவே தோழர் ஈ. வெ. ராமசாமியால் தோற்றுவிக்கப்பட்டதுநமதுசுயமரியாதை இயக்கம்.

நாட்டின் நிலை.

நம்நாடு பொன் செழித்த குபேர நாடென்றும் கல்வியிற்சிறந்த கம்பர், ஒட்டக் கூத்தர், புகழேந்திகள் மேகம் என்ற பல கவிகள் உதித்த புகழ் நாடென்றும், வீரர்களும், தீரர்களும் மலிந்த பாரத பூமியென்றும் கடவுளே மனித வடிவெடுத்து மக்களிடை இல்லறம் நடத்தி வந்த புண்ணிய பூமியென்றும், முக்தி யென்ற பெரும் பதவியை அடைவதற்கு வேண்டிய சாதனங்கள் யாவும் ஒருமிக்க அமயப்பெற்ற இடமென்றும் புராணங்கள் வரைகின்றன. ஐயோ! உள்ள நிலையைக்கண்டால் கல்லும் கரையும். கரும் பொன்னும் உருகும் ஆனுல் மேல் நாட்டிலோ கட்டாயப் படிப்பினுல் நாடு, நகரம், கிராமந்தோறும் வாழும் மக்களிடையில் கல்வி நீரோடை போல் தாராளமாய்ப்பாய்ந்து வருகிறது. அங்கு நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப்பேர்கள் படித்தவர்களாகவே இருக்கிறார்கள். பெருத்த ஆராய்ச்சியும், சிறந்த கலைகளும் அங்குதான் ஆக்கப்படுகின்றன. கல்விக்குத் தெய்வமென்ற கலைமகளே பிறந்ததாகக் கூறி வந்த நம்மிந்தியாவில் நூற்றுக்கு 89 பேர்கள் தற்குறிகள். பொருளாதார விஷயத்திலோ உலகில் ஏழ்மையானது நமது நாடுதான். மேல் நாடுகளில் சில இடங்களில் சராசரி மக்கள் தினமொன்றுக்கும் ரூபாய் ஏழு எட்டுவரைச் சம்பாதிக்கிறார்கள். இங்கோ ஆள் ஒன்றுக்கு ஓரணு எழு தம்பிடிதான் இது நமது மந்திரிமார் சம்பளத்தையும் சேர்த்துக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

காந்தீயம்.

இப்போது வேலையின்றித் தவிக்கும் மக்கள் 5 கோடிப் பேருக்கு வேலை கொடுக்கவும், பொருளாதாரத்தைப் பெருக்கவும் அரசியல் ஞானியெனக் கருதப்படும் தோழர் காந்தியும் ராட்டோடு ஏழைத்தொழிலாளிகளை வாழ்க்கை நடத்தச் சொல்லிவிட்டு, ஆலை முதலாளிகளை எப்படி ஆதரிக்கிறாரோ அதே போல் தான் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்து கொண்டே வருணச்சிரம தர்மத்தையும் கற்பித்துக்கொண்டு வருகிறார். இதன் உண்மைத் தத்துவத்தை உணர்வதானுல் பல குடியர்கள் தங்கள் குடி வெறியினுல் எப்படி மது மயக்கத்தில் ஈடுபட்டு ஸ்மரணையற்று ஒன்று சேர்ந்திருக்க முடியுமோ அதைப்போலவே தான் தோழர் காந்தியாரின் தீண்டாமைப்போக்கும் வைணவ மத வெறியால் எற்பட்ட தீண்டாமைப் பிரசாரமேயாகும் இதன் பயனுய் உண்மைத் தீண்டாமை விலக்குக்கு இடர்விளைவிப்பதாகவே கருதவேண்டியதிருக்கிறதென்பது எனது சொந்த அபிப்பிராயமாகும் தீண்டாமை அழிய வேண்டுமானுல் முதன் முதலில் பார்ப்பனீயம் அழிக்கப்பட்டு பொருளாதார நிலைமையில் சமத்துவம் வழங்கப்படல் வேண்டும்.

பெண்கள் நிலை.

உலகத்திலேயே பொதுவாகப் பெண்கள் நிலை மிகவும் மோசமானது. அதிலும் நமது நாட்டைப்பற்றிச் சொல்லவேண்டுமானுல் மக்களில் தீண்டாதார்கள் என்பவர்களைவிட மிகமோசமாகவே ஆழ்த்தப்பட்டிருக்கிறார்கள். புலிக்கு ஆடுகள் இரை போலவும், பூனைக்கு எலி உணவு போலவும், ஆணுக்குப் பெண் இயற்கையான சாஸ்வத அடிமை யென்பதாகவே கருதி நடத்தப்படுகிறார்கள். பெண்கள் அடிமையை நீக்கவேண்டுமானுல் படித்த வீரப் பெண்மணிகள் தாங்களாகவே முன்வந்துழைக்க வேண்டும். இது எப்படியாகுமெனப்பயப்பட வேண்டாம். கால தேச வர்த்தமானத்தைக் கருதிப்பாருங்கள். சீனப் பெண்கள் காலுக்குவிடுதலை யேற்பட்டிருப்பதையும் துருக்கிப் பெண்களின் கண்கள், திறந்து விடப்பட்டிருப்பதையும் துருக்கிப் கவனித்தால் தங்களுக்குத் தாங்களே பாதுகாப்பாளராக விளங்கவேண்டும். உங்களுக்கு ஆண்களாகவே வலிய வந்து கல்வியை யளித்துக் கண்ணைத் திறந்து விடவும், ஆராய்ச்சித் துறையிலிட்டு அறிவை வளர்க்கவும் சொத்துரிமை தந்து சுதந்திரமளித்து விடவும் மாட்டார்கள் எனப்பணிவுடன் உங்களுக்குத்தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

விஞ்ஞானம்.

மனிதன் தன் அறிவின் சக்தியைக்கொண்டு கண்டு பிடிக்கும்ஒவ்வோர் அற்புதங்களையும் கவனித்துப்பார்த்தால் ஆகாயத்தில் அலக்ஷயமாய்ப் பறக்கின்றான். ஆழ்ந்த சமுத்திரத்தையும் அளந்து தெரிந்து அதன் நிலை தெரிந்துகொண்டான். ஓர் கோடியிலிருந்து ஓர் கோடிக்கு நேரே பேசுவது போல் பேசுகின்றான். அகண்டத்தில் உலாவும் கிரகங்களும், வான் மீன்களும்கூட மனிதனின் கோரிக்கைக் கிணங்கித் தம்மிடம் விட்டுப் பெயர்ந்து வருகின்றன. கப்பல்களும், ஆகாய விமானங்களும் மாலுமியில்லாமற் சென்று மனிதனுல் செய்யவேண்டிய சில வேலைகளைச் செய்துவிட்டு புறப்பட்டவிடத்திற்கே திரும்பி வந்து விட்டன. நீங்காக்குறைக்கு உயிரை சிருஷ்டிக்கும் மார்க்கத்தையுங்கண்டு பிடித்து விட்டான். சில ஆபீஸ்களில் மனிதனைவிடப் பன்மடங்கு ஒழுங்காயும், கிரமமாயும் வேலை பார்த்து வருகிறான் இயந்திர மனிதன்.

நாம் அந்தகாரத்தின் சக்திகளோடும், மூடநம்பிக்கையோடும், போராடி மக்களுக்கு உண்மைக்கல்வி அறிவு போதிப்பதும் சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்குவதுமே இப்போது முதன் முதல் செய்யும் போராகும். கலை பெருகப் பெருக அறிவு வளர வளர தெளிவு தோன்றத்தோன்ற கடவுள் என்ற சொல்லில் வைத்திருந்த மோகமும் குறைந்து கொண்டே வந்து கூடிய சீக்கிரத்தில் மனிதன் சர்வவல்லமையுடையனுவான்.

பின்பு புதுக்கொட்டை தோழர் கே முத்துசாமி வல்லத்தரசு பி. எ. பி. எல். அவர்களைத் தலைமை வகிக்குமாறு தோழர் வேல் வெள்ளைச்சாமி அவர்கள் கேட்டுக்கொள்ள தூத்துக்குடி தோழர் வைகுண்டம் அவர்கள் ஆதரித்தார். தலைவருக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்தளிக்கப்பெற்றதும். தலைவர் முகவுரையாகப் பேசிய தன் சாரம் பின் வருமாறு:—

தோழர்களே!

திருநெல்வேலி ஜில்லாவில் சுயமரியாதை மகாநாட்டிற்கு இரண்டாவது முறையாக நான் வர சந்தர்ப்பம் பெற்றேன். இந்த தாலூகா

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# நாடக மேடையின் புதிய சகாப்தம்.

## தமிழ்நாடு "சமதர்ம நாடக சபா"

[தோழர் அ. இரத்தினசபாபதி]

எந்த ஒரு கொள்கைகளையும் மக்களிடையில் பரப்புவதற்குகந்த மற்ற எல்லாச் சாதனங்களையும் விட நாடகமேடையே சிறந்த சாதனம் என்பது, அனுபவ முதிர்ச்சிபெற்ற அறிஞரின் அபிப்பிராயமாகும். "பல பிரசங்கங்களும், பல கட்டுரைகளும் ஒரு நாடகத்திற்கு இணையாகா"வெனக் கூறினர் ஓர் மேல்நாட்டறிஞர். ஆம்! உண்மையே அது.

ஆனல், அவ்வுண்மையை நம் நாட்டினர் போதிய அளவு அறிந்துகொள்ளவில்லையென்பதை இங்கு குறிப்பிடாதிருக்க முடியவில்லை. தற்கால நாடகமேடையோ, நாடகத்தின் தத்துவங்களை அடியோடு மறந்து—மறைத்து, ஏதோ ஒரு சிலரின் பிழைப்புக்கான மார்க்கம் என்ற மட்டில் நடைபெற்று வருகிறதேயன்றி நாடகக்கலையின் உண்மைத்தத்துவங்களைக் கொண்டனவாயில்லை. அதோடு, தற்கால நாடகமேடைகளில் காணப்படும் நடிகர்களுள் ஒரு சிலரைத்தவிர்த்து ஏனைய பெரும்பாலோரின் நடத்தைகள் கௌரவமானதாயில்லையென்பதையும் மறைப்பதிலும், மழுப்புவதிலும் பயனில்லை. உண்மையை ஒப்புக்கொண்டு தீரவேண்டியதுதான். இதைப்பற்றி சென்ற ஆண்டில், டிசம்பர்-மீ 24, 25 தேதிகளில் சென்னையில் தோழர் ராவ்சாஹிப், ப. சம்மந்தம் பி. ஏ. பி. எல், (ரிடையர்டு ஜட்ஜ்) அவர்களின் தலைமையின் கீழ் கூடிய மாகாணத் தமிழ்நடிகர் மகாநாட்டில் ஆலோசனை செய்யப்பட்டு, அதற்கான சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது பாராட்டற்குரியதாகும்.

நமது சமதர்மக் கொள்கைகளைப் பொதுமக்களிடையில் பரப்புவதற்கு நாடகமேடைகளைச் சாதனமாகக்கொண்டுதொண்டாற்ற வேண்டுமென்ற எண்ணம் நீண்டகாலமாகவேஎனக்குண்டு. நமது தோழர்களில் சிலரும் சமீப காலந்தொட்டு இத்துறையில் முயன்றுவருவது மகிழ்ச்சிக்குரியதே.

எனவே, இத்துறையில் நமது தோழர்கள் பலருடைய கூட்டுறவைப் பெறுவதோடு, அதன்மூலம் தற்கால நாடகமேடைகளிற் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதோடு அதன் மூலம் சமதர்மக் கொள்கைகளைப் பரப்பும் நோக்கத்துடன் "தமிழ் நாடு சமதர்ம நாடகசபா" என்னும் பெயருடன் ஓர் ஸ்தாபனத்தை ஈரோட்டில் நிறுவ முற்பட்டுள்ளேன். அது சம்பந்தமான எனது உத்தேசத்திட்டங்களைச்சம்பந்தப்பட்ட தோழர்கள் சிலரிடம் நேரில் கலந்து பேசியதோடு, கடிதங்களும் எழுதியுள்ளேன்.

ஆதலின், இத்துறையில் ஆர்வங்கொண்டுள்ள தோழர் கனைவரும் தவருது இந்த ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களாகித் தொண்டாற்றமுன் வருவதோடு இதுசம்பந்தமாக உசிதமாகத் தோன்றும் ஆலோசனைகளையும் எனக்கறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேற்படி ஸ்தாபனம் சம்பந்தமான எனது உத்தேச அமைப்பின் விபரத்தைக் கீழே குறித்துள்ளேன். அதில் கண்டுள்ள தோழர்கள் சிலரது சம்மதம் கிடைக்கப்பெற்றுள்ளன. மற்றவர்களுடைய அனுமதி விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கிறேன்—திருத்தப்பட்ட கிரந்தரமான திட்டங்கள் பின்னர் வெளிவரும்.

இதுசம்பந்தமாக மற்றும் நம் தோழர்கள் பலருக்கும் தனித்தனிக் கடிதங்கள் எழுதுவது சிரமமாதலின் இதனை இங்கெழுதியுள்ளேன். இது விஷயமாகப்பதில் பெற விரும்புவோர் தயவுசெய்து ரிப்ளைகார்டெழுதவும். இது சம்பந்தமான எல்லாக்கடிதங்களும், தோழர் அ. இரத்தினசபாபதி அமைப்பாளர்.

தமிழ்நாடு சமதர்ம நாடகசபா,
ஈரோடு.

என்ற விலாசத்திற்கு எழுதப்படல் வேண்டும்.

### உத்தேசத் திட்டம்

தமிழ்நாடு சமதர்ம நாடகசபா,
ஈரோடு.

பொது நோக்கம்.

1. மக்களுக்குள் சமூக, அரசியல், பொருளாதாரத் துறைகளில் காணப்படும், பல திறப்பட்ட வேற்றுமைகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் நீக்கி எல்லோரும் சரி, நிகர், சமம் என்னும் நேரிய நியதி நிலைநின்று செழித்தோங்குமாறு நீதி புகட்டவல்ல உண்மைகளை நாட்டில் பரப்புவதற்கு நாடகமேடைகளை ஆதாரமாகக்கொண்டு தொண்டியற்றுதல்.

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க

# இஸ்லாமும், ஏழை விகிதமும், ஏழை முஸ்லீம்களின் துயரமும்.

[திருச்சி தோழர் சு. பா. கு மோஹிய்யதீன் சாயபு அல்ஹாஜ்.]

பொதுவுடமை முழக்கம் கண்டு கிலிபிடித்த முஸ்லீம்கள் அதற்குமாருக ஏழை வரி, ஜக்காத் என்ற நடமுறையிலில்லாத பண்டை முறையை எடுத்துக்காட்டிப் பத்திரிகைகளில் எழுதி பொதுஉடமைக் கொள்கையை எதிர்க்கின்ருர்கள். சமீபத்தில் ஒரு பட்டணத்துப் பத்திரிகையில் நாச்சியார்கோவில் முஸ்லிம் ஒருவர் இந்த ஜக்காத்தின் மேன்மையைப்பற்றி புகழ்ந்து எழுதியிருக்கின்ருர்.

உண்மையே எழுத்தளவில் "ஜக்காத்"முறை அழகாக வேதான் இருக்கின்றது. உண்மையே, இந்த ஜக்காத் என்னும் ஏழை விகிதத்தை இஸ்லாத்தின் கடவுள் முதலாளிகளிடமிருந்து கட்டாயமாக வசூலித்து ஏழைகளின் முன்னேற்றத்துக்காகவென்று விநியோகிக்கும்படி கட்டளையிட்டிருக்கின்ருன். இந்தக்கட்டளை 1300 வருஷங்களாக மாற்றப்படாமல் குர் ஆனில் இருக்கத்தான் செய்கின்றது. இந்தக்கட்டளையைப் படிக்காத முஸ்லிம் ஆண் பெண் எவரும் இல்லை. ஆனல் ஏனைய சமூகத்தைவிட முஸ்லிம்களிடைதான் பலவித பிச்சைக்காரர்கள் மலிந்து கிடக்கின்ருர்கள் என்ற உண்மையை எந்த முஸ்லிமும் மறுப்பாரா? இதுமட்டுமா, முஸ்லிம்களிடையில் தான் கல்வியறிவின்மை அதிகரித்திருக்கின்றது. இவர்களிடையில் கௌரவப் பிச்சைக்காரர்கள் அதிகரித்து வருகின்றனர். இந்தப் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை முஸ்லிம்களிடையில் வருஷாவருஷம் அதிகரித்து வருவதற்கு பெருமையாகப் புகழ்ந்து எழுதப்படும், மேற்படி 'ஜக்காத்' என்னும் ஏழை விகிதமே என்று நான் துணிவுடன் கூறுகின்றேன். எந்த உண்மை முஸ்லிமும், இந்த என் கூற்றை தன்மன சாட்சியை விற்றுவிடாமல் மறுத்துக் கூறமுடியாது என்று "சாலன்ஜும்" செய்கின்றேன்.

இஸ்லாத்தின் கட்டளை என்ன? ஏழைகள், பணவுதவி வேண்டுவோர், கடன்பட்டோர், அடிமைகளை விடுவித்தல், வழிப்போக்கர், ஜகாத்வரவு செலவு இலாகாவின் உத்தியோகஸ்தர்கள்,நன்மார்க்கம், பிரசாரம் இவைகளுக்காக செலவு செய்யும்படி இஸ்லாத்தின் இறைவன் குர்ஆன் 9,60ல் கட்டளை இட்டிருக்கின்றன.

ஆனல் இன்று இந்தக்கட்டளையைப்பற்றி கிஞ்சிற்றுகிலும் எந்த முஸ்லிம் முதலாளிகளாகட்டும், சாஹுக்காருக்காகட்டும், எஜமானுக்காகட்டும், அதிர்ஷ்டமே உருவாகக் கொண்ட மாதம் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பெறும், சாஹிப்பஹதாருக்காகட்டும் லக்ஷியம் உண்டா? இவர்கள் வருஷாவருஷம் குர் ஆன் ஆணைப்படி சில ஆயிர ரூபாய்கள் ஏழைகளின் துயரைப்போக்கும் முறையில் செலவிடுகின்றனரா? இல்லவே, இல்லை. ஆனல் இவர்களில் சிலர் வருஷாவருஷம் ஏழைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்றனர். மேலும் அவர்களின் துயரத்தில் பெட்ரோல் ஊற்றுகின்றனர். ஒரு சில முதலாளிகள் தாங்கள் வருஷாவருஷம் பல்லாயிரம் ரூபாய்கள் ஜக்காத் கொடுப்பதாகக் கூறலாம். ஆனல் இவர்களில் பெரும்பாலோர் தற்புகழ்ச்சிக்காகப்பல்லாயிரம் ரூபாய்களை ஜக்காத்தின்பெயரால் செலவிடுகின்றனர். இதன்பலன் என்ன? ஏழைகளின் துயரம் அதிகரித்து ஏழைகளும் அதிகரிக்கின்றனர். 1000 ஏழைகளுக்குச் சென்ற வருஷம் தலைக்கு ஒரு அணு வீகிதம் கொடுத்தவர் வீட்டைச்சுற்றி இவ்வருஷம் தலைக்குக்கால் கால் அணு விகிதம்பெற 2000, 3000 ஏழைகள் சூழ்ந்து மிதிபட்டு, இழிவுபடுத்தப்பட்டு துன்புறும் காட்சியைக் காணலாம். சென்றவருஷம் 1000 ஏழைகளாக விருந்தார்கள், இந்த ஜக்காத் முறைபால் இவ்வருஷம் மூன்றுக்கு இரண்டு மூன்றுமடங்காக ஏழைகள் அதிகரித்து விட்டனர். என்பது கண் கூடு. இதுதானு ஜக்காத்தின் மஹாத்மியம்!! என்னே முஸ்லிம்களின் வீழ்ச்சி!!!

குர் ஆன் ஆணைப்படி பார்த்தால், இந்த ஏழை விகிதத்தை நேரான முறையில் கிரமமாக வருஷாவருஷம் அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட இலாகா உத்தியோகஸ்த்தர்களால் வசூலிக்கப்பட்டு பொதுக்கஜானுவில் சேகரிக்கப்பட்டு ஏழைகளின் துயரத்தை நீக்கும்முறையில் நன்மார்க்கத்தில் செலவு செய்யப்பட வேண்டும். ஆனல் இக்கட்டளையை உதாசினஞ்செய்து முதலாளிகளில் ஒருசிலர் அதிலும் பலர் தங்கள் பேர் பிரக்யாதிக்கென்று மட்டும் சில ரூபாய்களை இறைத்து ஏழைகளைத் துன்புறும் காட்சியைக் கண்டு மகிழ்கின்ருர்கள். இந்த ஒரு சில தம்படிகளையோ, பொட்டுகளையோபெற ஏழைகள் ஒருவரை யொருவர் நெருக்கிக்கொண்டும், தள்ளிக்கொண்டும் ஆணும் பெண்ணும் படுந்துயரத்தை விவரிக்க-ஹா! என்னல் முடியாது. பெரும்பாலான முதலாளிகள் இதுகூட செய்யாமல் வட்டி

தொடர்ச்சி 16-ம் பககம் பார்க்க

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# கன்யாகுமரியில் காந்தி.

## சுயமரியாதைச்சங்கத்தார் சந்திப்பு.

"நான் ஒரு இந்துமதச் சீர்திருத்தக்காரனே"

—காந்தி.

(நமது நிருபர்)

சென்ற 21-1-33-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை தோழர் காந்தி இந் நகருக்கு வருகிற செய்தி விளம்பரப்படுத்தப்பட்டதும், நாகர்கோவில் சுயமரியாதைச்சங்கத்தார் அவரைச் சந்திக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் உள்ளூர் ஹைறிஜன சேவா சங்கத் தலைவர்களிடம் கேட்டனர்.

தோழர்காந்திஜி திருவனந்தபுரத்துக்குவருவதற்குமுன்னரே, திருவனந்தபுரம் சுயமரியாதை சங்கத்தார் 'புரட்சி' பத்திரிகையில் 'காந்தி பகிஷ்காரம்' ஏன்? என்ற தலைப்புடன் வெளிவந்த தலையங்கத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து "திருவிதாங்கூர் வாலிபர்களுக்கு ஓர் விண்ணப்பம். காந்திஜியைப் பகிஷ்கரியுங்கள்" என்ற தலைப்புகளுடன் பதினாயிரக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு, கொல்லம், கோட்டயம் திருவனந்தபுரம், நாகர்கோவில் முதலிய பல இடங்களுக்கு காந்திஜி விஜயஞ்செய்தபோது பொதுக் கூட்டங்களில் வெளியிட்டதுமன்றி, காந்திஜியைச் சந்திக்கவும் சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்று கேட்டனர். நாகர் கோவிலில் சந்திக்கலாமென அவர்களுக்கும் பதிலளிக்கப்பட்டது.

எனவே, 21-1-33 (செவ்வாய்க்கிழமை] பிற்பகல் 12-30 மணிக்கு மேல் திருவனந்தபுரம் சுயமரியாதைச் சங்கத்தாரும், நாகர்கோவில் சுயமரியாதைச் சங்கத்தாரும் சந்திக்கலாமென அனுமதியளிக்கப்பட்டது.

திருவனந்தபுரம் சுயமரியாதைச் சங்கப்பிரதிநிதிகளாகத் தோழர்கள் ஆர். பத்மனபன் (உப்புசத்தியாக்கிரகத்தின்போது சிறை சென்றவர்) எஸ். ராமகிருஷ்ணன், பி. கே, வாசுதேவன், எஸ். பாடலிங்கம் (நால்வரும் பி. எ. வகுப்பு மாணவர்கள்) ஆகியவர்களும், நாகர்கோவில் சுயமரியாதை சங்கப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் ஈ. ராமசாமி, எஸ். பூதலிங்கம், எ. சுப்பையா ஆகியவர்களும் அன்று பிற்பகல் கன்யாகுமரிக்குச் சென்று, காந்திஜியைச் சந்தித்தனர். சுமார் நாற்பது நிமிடம்வரை தோழர் ஆர். பத்மனபன் காந்திஜியுடன் தர்க்க வாத முறையில் சம்பாஷித்தார். சம்பாஷணை மிகவும் ருசிகரமாகவே யிருந்தது. காந்திஜி சலிப்போ, வெறுப்போ, காட்டாததும் குறிப்பிடத் தக்கது. தோழர் தாக்கர் குறுக்கிட்டு வற்புறுத்தா விட்டால் சம்பாஷணை இன்னும் நீண்டிருக்கும். ஆனல், வேறு பல நிகழ்ச்சிகளுக்கு பேட்டியளிக்க வேண்டியிருந்ததாலும், காந்திஜி இன்று மாலையே திருநெல்வேலிக்குப் புறப்படவிருந்ததாலும், தோழர்கள் நினைத்தபடி கேள்விகள் அத்தனையும் கேட்க இடமில்லாமற் போய்விட்டது. நிகழ்ந்த சம்பாஷணையின் சுருக்கம் வருமாறு:—

கேள்வி:— தேசத்தின் நன்மைக்காக எத்தகைய கஷ்டத்தையும் அனுபவிக்க நாங்கள் தயாராயிருக்கிறோம் நாங்கள் அனைவரும் (Rationalist) பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள் செய்து வரும் ஹரிஜன ஆலயப்பிரவேச சேவையில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. இதைவிட்டு பொருளாதாரம், சுகாதாரம், கல்வி முதலிய துறைகளில் நீங்கள் உழைப்பதானால் நாங்களும் உங்களோடு ஒத்துழைக்க விரும்புகிறோம். அதற்காக நீங்கள் என்ன திட்டம் போடுகிறீர்கள்?

பதில்:— பள்ளிக்கூடம், மாணவர் விடுதிகள் வைத்தியசாலை முதலியன அமைத்தல் பொதுக் கிணறுகளில் அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் அவர்களுக்காகத் தனிக் கிணறுகள் ஏற்படுத்தல்

கே:— தாழ்த்தப்பட்டவர்கள் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடைந்தாலொழிய அவர்கள் உண்மையான முன்னேற்றம் அடையப் போவதில்லை என்பதை நீங்கள் நம்புகிறீர்களா?

ப:— ஆம் நான் அதை ஒப்புக் கொள்கிறேன்.

கே:— அவர்கள் எல்லோரும் விவசாயத்தில் ஈடுபடுகிறவர்கள் சூரிய உதயத்துக்கு முன்னமே எழுந்து, வயலுக்குப் போனல், இரவு 7 மணிக்கே திரும்ப வீடுவந்து சேர்வார்கள் அவர்களுக்குத் திங்கட்கிழமை மௌனவிரதமோ, பட்டினி விரதமோ கைக்கொள்ள முடியாது. ஓய்வென்பதே கிடையாது. கோவிலைப் பற்றிய சிந்தனையே அவர்களுக்கில்லை. இருந்தாலும் சமயமில்லை. அப்படியிருக்க அவர்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை வேண்டுமென்று போராடுவது வீண் வேலையல்லவா?

ப:— நீங்கள் சொல்வது முற்றிலும் சரியே ஆனல் மனித வகுப்பில் ஒரு சாராருக்கு மற்ற வகுப்பினர்களுக்குள்ள உரிமையில்லை யென்பது அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வருத்தந்தருவதல்லவா? அவர்களுக்கும் அவ்வுரிமை யிருக்க வேண்டியது நியாயமல்லவா? அவர்கள் அவ்வுரிமையைஉபயோகிப்பார்களா? மாட்டார்களா?வென்பது வேறு விஷயம்.

கே: — அப்படியானல் இந்து மதத்தில் மட்டும் தாழ்த்தப்பட்டவர்களில்லை; கிறிஸ்து மதம் போன்ற ஏனைய மதங்களிலும் தாழ்த்தப்பட்டவர்களிருக்கத் தான் செய்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடிய திட்டமொன்றைத் தயாரித்து அதன்படி உழைப்பதல்லவோ நலமாக இருக்கும்? அத்தகைய திட்டமேதாவது போட்டிருக்கிறீர்களா?

ப:— இல்லை, எல்லாமதங்களையும் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்களனைவருக்கும் பொருந்தக் கூடியமிகப்பெரிய திட்டத்தைப் போடுவது என் சக்திக்கு மீறினதாகும். அது சுயராஜ்யம் கிடைத்த பிறகு செய்ய வேண்டிய வேலையாகும்.

கே:— கோவில் பிரவேசத்துக்குப் புறம்பாக, தாழ்த்தப் பட்டவர்களுக்கு வைத்தியம், சுகாதாரம் முதலிய துறைகளில் செய்யவேண்டிய உதவிகள் பல இருக்கின்றன. சட்டசபையில் ஒரு பலத்த கட்சி இதற்காக ஏற்பட்டு, உழைத்தால் இத்துறையில் இயன்ற அளவு பலன் கிடைக்குமல்லவா?

ப:— கிடைக்கலாம் சட்டசபைக்குப்போக விரும்புபவரை நான்தடுக்கவில்லை.

கே:— பக்கத்துக் கிராமங்களில் தொழிலாளிகளுக்குத் தானியங்களையே சம்பளமாகக் கொடுப்பதைக் கண்டேன். ஆலயப்பிரவேச உரிமையளிக்குமாறு ஜனங்களுக்கு வேண்டுகோள் விடுவதை விட, இம்மாதிரி தானியங்கள் மூலம் சம்பளத்தைக் கொடுக்கும்படி வேண்டுகோள் விடுப்பது சிறப்பாக இருக்குமல்லவா?

ப:— முதலும், தொழிலும் என்ற பிரச்சினையில் நான் புகவில்லை புகுந்தால் அவ்வாறு செய்யக் கூடும்.

கே:— சமூக அந்தஸ்தை உயர்த்தும் பிரச்சினையும் ஆலயப் பிரவேசப்பிரச்சினையும்ஒன்றுக்கொன்றுசம்பந்தப்பட்டவை தானே? சமூகஅந்தஸ்தை உயர்த்துவதற்காக ஏனைய துறைகளில் ஏன் உழைக்கக் கூடாது?

ப:— உண்மைதான் ஆலயப்பிரவேச பிரச்சினையைத் தீர்த்து விட்டால் மற்றபிரச்சினைகளும் தாமாகத் தீர்ந்துவிடும். இந்தப் பிரச்சினைகளுக்கு மூலாதாரமான ஆணிவேர் எதிருக்கிறதென்பதைக் கண்டு பிடித்தே நான் இதை முக்கியமாகக் கொண்டுள்ளேன்..

கே;— ஹரிஜனங்களுக்குப் போதிய உணவில்லை ஆனல் நீங்கள் அவர்களுடைய ஆலயப்பிரவேச உரிமைக்காக மட்டும் பாடுபடுகிறீர்கள்.

ப:— நான் ஆலயப் பிரவேசத்துக்காக மட்டும் பாடுபடவில்லை. நான் ஆயிரக்கணக்கான பிரசங்கங்கள் செய்திருக்கிறேன். இவற்றில் ஆயிரம் வார்த்தைகளுக்கு ஒன்று கூட கோவில் என்ற வார்த்தையாக இராது. ஆனல் ஆலயப்பிரவேச உரிமையில்லாமல் அவர்களுக்கு வேறு எதையும் செய்துவிட முடியாது.

கே:— மட்டஞ்சேரியில் நீங்கள் நிகழ்த்திய பிரசங்கத்தில் ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேசமளிக்காவிட்டால் இந்து மதம் அழிந்து விடும் என்று சொல்லியிருக்கிறீர்களே? நீங்கள்ஒரு இந்து மதச்சீர்திருத்தக்காரரல்லவா?

ப:— நான் இதைப்பலமுறை வெளிப்படையாகச் சொல்லி யிருக்கிறேன். நான் ஒரு இந்து மதச்சீர்திருத்தக்காரன் தான். இதை நான் மறைக்க வில்லை. இதிலிருந்து நான் ஆலயப்பிரவேச விஷயத்தில் மட்டும் எனது முழு கவனத்தையும் செலுத்துகிறேன் என்று அர்த்தப்படுத்தி விடக்கூடாது.

கே:— நீங்கள் பொருளாதாரத் துறையில் அவர்களை முன்னேற்றப் பாடு பட்டால் மற்ற விஷயங்களெல்லாம் தாமாகவே ஏற்படுமல்லவா?

ப:— அப்படியல்ல; டாக்டர் அம்பேத்காரை எடுத்துக்கொள்வோம். அவர் நன்கு படித்தவர் தான். செல்வமும், செல்வாக்கும் உடையவர் தான். இருந்தாலும் அவர்ஒரு பறையராகவேஎண்ணப்படுகிறார். பூனவிலுள்ள ஜாதி இந்துக்கள் தங்கள் வீடுகளுக்கு அவரை அழைக்க முடியாது-

கே:— ஆலயப்பிரவேச உரிமையினல் தாழ்த்தப் பட்டவர்கட்குப் பிரயோஜனமில்லை; அவர்களுடைய பொருளாதார நிலை முன்னேறினல் மட்டுமே பலனுண்டு என்று டாக்டர் அம்பேத்கர் சொல்ல வில்லையா?

ப:— அதைப்பற்றி நான் கவனிக்க வேண்டிய தில்லை. தீண்டாமையென்னும் குஷ்ட ரோகத்தை ஒழிக்க வேண்டுமென்பதே எனது நோக்கம். அவர்கள் கோயிலுக்குள் போய்த்தீர வேண்டுமென்ற கட்டாயமில்லை; ஆனல் ஆலயப்பிரவேச உரிமை அவர்களுக்கு மிருக்க வேண்டுமென்றே நான் கருதுகிறேன்.

கே:— உங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை யிருப்பினும் நீங்கள் கோயிலுக்குள் போவதில்லை. சிறை சென்றவர்கள் பிராயச்சித்தம் செய்தாலொழிய கோவிலுக்குள் பிரவேசிக்கக் கூடாதெனப் பூசாரிகள் சொல்லிவிட்டனர்.

சிறைசென்றவர்களிற் சிலர் பிராயச்சித்தம் செய்தனர். ஆனல் எங்களில் பலர் அவ்வாறு செய்ய வில்லை. கோவிலுக்குள் போகவும் விரும்பவில்லை. ஹரிஜனங்களும் அவ்வாறு கோயிலுக்குள் போகாமலிருந்தாலென

ன்ன? தங்களுக்கு ஆலயப் பிரவேசம் வேண்டாமென்று நீயர்கள் சொல்ல வில்லையா?

ப:— நீயர்கள் குருவான ஸ்ரீ நாராயண குரு நடத்தி வந்த இயக்கம் எது? ஆலயப்பிரவேசத்துக்கும் அதற்கும் சம்பந்த முண்டல்லவா? போக இஷ்டமில்லாதவர்களைப்பற்றி நமக்கு கவலையில்லை. இஷ்டமுடையவர்களுக்கு உரிமை வேண்டாமா? நீயர்கள் ஆயிரக்கணக்காகக் கூட்டங்களுக்கு வருகிறீர்களே? ஆலயப்பிரவேசம் வேண்டா மென்றால் ஏன் வருகிறீர்கள்.?

கே:— கூட்டங்களுக்கு வருகிறவர்கள் அனைவரும் உங்கள் கொள்கைகளை ஒப்புக்கொள்கிறவர்கள் தாமென எண்ணிவிடக்கூடாது. நீங்கள் ஒரு சீர்திருத்தத் தலைவர் என்ற முறையிலும், புத்துணர்ச்சியை ஊட்டியவர் என்ற முறையிலும்: உங்கள் பேரில் கொண்டுள்ள மதிப்பு காரணமாகவே பலர் வருகிறார்கள். ஆகவே கூட்டங்களுக்குவருகிற தீண்டாதார் அனைவரும் உங்களைப் பின் பற்றுகிறவர்கள் தாம் எனக்கருத இடமில்லையல்லவா

ப:— நான் எதாவது செய்தால் அது எனது கொள்கையை ஒப்புக்கொள்ளும் தீண்டாதாருக்காகவேயிருக்கும். ஒப்புக்கொள்ளாதவர்கள் இதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. தீண்டாதாரைக் கொடுமைக்காளாக்கி வரும் சாதி இந்துக்கள் தங்கள் பாபச்செயலுக்காக வருந்தி தவஞ்செய்ய வேண்டுமென்றும் அதற்காகவே அவர்கள் கோவிலைத் திறந்து விட வேண்டுமென்றும் நான் கேட்கின்றேன்.

கே:— நீங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 'ஹரிஜனம்' என்ற பெயரைக்கொடுத்திருக்கிறீர்கள். திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பெண்களும், ஹரி ஜனங்களும் கட்டணம் கொடுக்காமல் கூட்டத்திற்கு வரலாமென்று சொல்லப்பட்டது. எனினும், ஹரி ஜனங்கள் வெகு சிலரே வந்திருந்தார்கள். ஏனெனில் தங்களை 'ஹரிஜனம்' என்று சொல்லிக்கொண்டு வருவதால் தங்கள் சுயமரியாதைக்குப் பங்கம் நேரிடுகிற தென்று அவர்கள் கருதுவதினால்தான்.

ப:— முற்றும் சரிதான் தீண்டாதாரென்றழைப்பதற்குப் பதிலாக நான் 'ஹரிஜனம்'என்றழைக்கிறேன் இருந்தாலும் இந்தப்பெயரைப்போன்று வேறு எந்தப் பெயரும் அவ்வளவு பெரிய ஆதரவை இந்தியாவில் அடைந்ததில்லை. ஒரு சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம் எல்லோருக்கும் பிடிக்கக்கூடிய ஒரு பெயரைக் கண்டுபிடித்தால் அதைக்கொடுப்பதில் ஆட்சேபனையில்லை.

கே— தாழ்த்தப்பட்ட வர்களுக்குத்தனித்தெய்வங்களும், கோயில்களுமிருக்கின்றன. அவர்களுக்கு வேறு ஆலயப் பிரவேசம் அவசியமில்லையொன்று தான் பகுத்தறிவு வாதிகளாகிய எங்களுக்கும் படுகிறது. ஆகவே இந்த விஷயத்தை விட்டு விட்டு நமக்குள் பொதுவான சுகாதாரம் கல்வி, பொருளாதாரம் முதலிய விஷயங்களிலீடு பட்டு உழைக்க ஒரு திட்டத்தை வகுத்தால் நாங்களும் உங்களுடன் சேர்ந்து ஒத்துழைக்க முடியுமல்லவா?

ப:— எனக்கும் பகுத்தறிவாதிகள் பலர் நண்பர்களாக இருக்கின்றனர். சுவித்ஸர்லாந்துக்கு நான்போருந்த பொழுது ஒருபகுத்தறிவுவாதி எனது பேச்சைக்கேட்டுவிட்டு நீங்களும் ஒரு பகுத்தறிவு வாதியாக இருக்கிறீர்களே"என்று சொன்னார். நீங்கள் பெயரளவில் பகுத்தறிவு வாதிகள், நான் உணர்ச்சியில் பகுத்தறிவு வாதி நமக்குள் மாறுபாடான அபிப்பிராயமுள்ள விஷயங்களை விட்டுவிட்டு, ஒரே அபிப்பிராயமுள்ளவிஷயங்களில் சேர்ந்துழைக்கலாம்.

கே:— கல்வி, வைத்தியம், சுகாதாரம் அகில துறைகளில் ஈடுபட்டு சட்ட சபைகள் மூலம் வேலை செய்ய ஒரு பலமான கட்சியை ஸ்தாபிப்போம்.

ப:— செய்யலாம் எனது ஆயுள் மிகவும் குறுகியது. இன்னுஞ்சில வருஷங்கள் தானிருக்க முடியும். ஆகவே வேறு துறையில் இனி இறங்க முடியாது. நீங்கள் வாலிபர்கள். உங்கள் கட்சி பலப்பட்டு விட்டால் நான் ஜீவித்திருந்தால் உங்கள் கட்சியில் சேரத் தயார்.

கே:—உங்களுக்குவயதுஅதிகமாகிவிட்டபடியால் வாலிபர்களது திட்டங்களையும், நோக்கங்களையும் ஒப்புக்கொள்ள முடியாது என்பதுஉண்மையே. இருந்தாலும, கிராம அபிவிருத்தி வேலையிலீடுபடும்படி—வெறும் பிரசங்கம் செய்யமட்டுமல்ல—தொண்டர் கூட்டங்களை என் ஏற்படுத்தக்கூடாது? இதற்காகப் பொதுஜன வேண்டுகோள் விடுக்கக் கூடாதா?

ப:—நான் இதுகாறும் இதைத் தான் செய்து வருகிறேன்.

இத்துடன் தோழர் காந்தியாருக்கு வேறு வேலை இருந்ததால் சம்பாஷணை முடிந்தது.

---

புதிய வெளியீடு! ::
:: புதிய வெளியீடு!!
வெளி வந்துவிட்டது.

அமெரிக்காவில் பெரும் அறிவியல் வாதியவிளங்கியாய் அறிஞர் இங்கர்சால் அவர்களால் 'கடவுள்' என்னும் பொருள்பற்றி நிகழ்த்திய ஒரு அரிய சொற்பொழிவு தோழர் S. லக்ஷிமிரதன் M. A. B. L., அவர்களின் மொழி பெயர்ப்பு. இங்கர்சாலின் ஜீவிய சரித்திரம் அவரது உருவப்படமும் பொறிக்கப்பட்டுள்ளது 103-பாகங்கள கொண்டது. விலை அணு 5.

பகுத்தறி நூற்பதிப்புக்கழகம்
லிமிட்டெட், ஈரோடு.

## பரோடா பெண்கள் முன்னேற்றம்.

### புதிய சட்டவிபரம்.

பரோடா சமஸ்தானத்திலுள்ள இந்துப் பெண்களின் உரிமைகளைப்பாதுகாப்பதற்காக இந்து சமுதாயச் சட்டத்தை பின்வருமாறு திருத்தி புதியசட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். திருத்தப்பட்ட அந்தப் புதிய சட்டப்படி ஒரு இந்து பொதுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்துபோனால் அவருடைய விதவை அந்தக் குடும்பத்தில் ஒரு பங்காளி ஆகிவிடுகிறாள். விதவைகளின் முந்தின நிலைமையில் இந்தச்சட்டம் ஓர் பெரிய மாறுதலை உண்டுபண்ணி விட்டிருக்கிறதென்று சொல்லலாம். முந்தியெல்லாம் ஒரு விதவைக்கு அவள் புருஷன் குடும்பத்திலே சோறும், உடையும்தான் கிடைக்கும். வேறு எவ்வித உரிமையும் கிடையாது. இந்தச் சட்டப்படி ஒரு விதவையானவள் தன் புருஷன குடும்பத்தின் மற்ற நபர்களைப்போல் ஒரு சமபங்காளி ஆகிவிடுகிறாள். சொத்தில் தனக்குள்ள பாகத்தைப் பிரித்துக் கொடுக்கும்படி கேட்டதற்குக் கூட இந்தச் சட்டத்தினால் உரிமை ஏற்பட்டிருக்கிறது.

புருஷனுடைய சொத்து அவர் தானே சம்பாதித்த தனி சொத்தாயிருந்தால் பழய சட்டப்படி அவருடைய மகனுக்கும், பேரனுக்கும், பேரன் மகனுக்கும் தான் கிடைக்கும். இந்த வாரசுகள் இல்லாமலிருந்தால் மாத்திரம் விதவைக்குக்கிடைக்கும். இப்போது இந்தப்புதிய சட்டத்தினால் மகன், பேரன் முதலியவர்களைப்போலவே விதவையான பெண்ணும் சமபாகம் கிடைக்க உரிமை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. விதவையான ஒரு மருமகளுக்கும, தாய்க்கிழவிக்கு அதாவது மாமியாருக்கு அடுத்தபடியான அந்தஸ்து ஏற்படுகிறது.

இதற்கு முன்னெல்லாம் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்துவிட்டால் அதன்பின் அவளுடைய தகப்பன் குடும்பத்தில் அவளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. புருஷன் வீட்டில் சாப்பாட்டுக்கு கஷ்டமாயிருந்தாலுங்கூட அவளுடைய தகப்பன குடும்பத்திலிருந்து சம்ரட்சனை பெற அவளுக்கு உரிமை இருந்ததில்லை. இதனால் பல பெண்கள் கஷ்டம் அனுபவிக்க நேரிட்டிருந்தது.

இந்தப் புதிய சட்டப்படி இந்த நிலைமை மாற்றப்பட்டிருக்கிறது. எப்படியெனில் புருஷன் இறந்தபின் ஒரு பெண் தன் தகப்பன் வீட்டிலேயே வசித்து வருவளானால், அவளுடைய மாமனார் வீட்டில் அவளுக்கு சம்ரட்சனை செலவு கொடுக்க வழியில்லாமல் இருக்கும்போதும் தகப்பனுக்கு அவளை வைத்துக் காப்பாற்ற சக்தி இருக்கும்போதும் தகப்பன் குடும்பத்தாரே அவளுடைய ஜீவனத்துக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று இந்த புதிய சட்டம் கூறுகிறது.

கலியாண மாகாத பெண்ணுக்கு இதுவரையில் சம்ரட்சணையும் கலியாணச் செலவும் தான் கொடுக்கப்பட்டு வந்தது. சொத்து பாகப் பிரிவினைகாலத்தில் இவ்விரண்டுக்கும் பதிலாக சகோதரனுடைய பங்கில் நாலில் ஒரு பாகம் கொடுக்கப்படுவதும் உண்டு, ஆனால் சொத்து பங்கு போட்டுக் கொடுக்கும்படி கேட்க உரிமை கிடையாது.

இந்தப் புதிய சட்டப்படி அவள் தன் பாகத்தைத்தனியாகப்பிரித்துக் கொடுத்துவிடும்படி கேட்கலாம். இதனால் கலியாண மாகாத பெண்களுக்கு அதிக சுதந்தரமும், சுயாதீனமும் ஏற்பட்டிருக்கிறது.

சீதன விஷயமான பாத்தியதைப்பற்றி பழய சட்டத்திலிருந்த சில சிக்கல்களும் நீக்கப்பட்டிருக்கின்றன.

முந்தின சட்டப்படி பெண்கள் தங்களுக்குக் கிடைக்கிற சொத்துக்களை அனுபவிக்க மாத்திரம் செய்யலாம்-விற்பனை செய்ய முடியாது. இப்போது பெண்கள் 12,000 ரூபாய் வரையில் தங்கள் சொத்துக்களை விற்பனை செய்யவோ, அல்லது வேறுவிதமாக வினியோகிக்கவோ ஷை புதிய சட்டம் பூரண உரிமை அளிக்கிறது. இந்தப்புதிய சட்டத்தினால் பரோடா நாட்டுப் பெண்களுக்கு அதிக உரிமைகளும், பாதுகாப்புகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதமே பிரிட்டிஷ் இந்தியாவிலும், மற்ற சமஸ்தானங்களிலும், இந்துசட்டம் திருத்தப்படுமாயின் பெண்கள் முன்னேற்றத்துக்குப் பெரிதும் அனுகூலமாயிருக்கும்.

---

# தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, சா. ரா. கண்ணம்மாள் வழக்கு.

## தீர்ப்பு முழுவிபரம்.

தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, எஸ். ஆர். கண்ணம்மாள் ஆகிய இருவர் மீதும் தொடரப்பட்ட ராஜநிந்தனை வழக்கில் கோயம்புத்தூர் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் தோழர் ஜி. டபிள்யு. வெல்ஸ் ஜனவரி மாதம் 24ந் தேதி தீர்ப்புக் கூறினார். அந்த தீர்ப்பின் முழு விபரம் பின்வருமாறு:—

தீர்ப்பு.

1. இந்த வழக்கில் குற்றவாளிகள் யாரெனில்:—

(1) தோழர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் கோயம்புத்தூர் ஜில்லாவில் ஈரோட்டில் பிரசுரமாகிற "குடி அரசு" என்ற பெயருள்ள தமிழ் வாரப்பத்திரிகையின் ஆசிரியர்.

(2) மிஸஸ் எஸ். ஆர். கண்ணம்மாள், அவருடைய சகோதரியும், "குடி அரசு" பத்திரிகையின் பிரசுரகர்த்தாவும், பதிப்பாளருமானவர்.

முதல் எதிரி "குடி அரசு" பத்திரிகையின் ஆசிரியராகவும், இரண்டாவது எதிரி அந்தப்பத்திரிகையின் பதிப்பாளரும், பிரசுரகர்த்தாவுமாயிருந்து அந்தப் பத்திரிகையின் 1933-ஷ் அக்டோபர் மாதம் 29ந் தேதி இதழிலே "இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?" என்ற தலைப்புள்ள ஒரு தலையங்கத்தைப் பிரசுரித்ததாக கோயம்புத்தூர் ஜில்லாவில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டராயிருக்கும் தோழர் வி. ரங்கசாமி ஐயரால் அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. மன்னர் பிரானுக்கு, அல்லது பிரிட்டிஷ் இந்தியாவில் சட்ட பூர்வமாக ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிற கவர்ன்மெண்டுக்கு விரோதமாக பகைமையை, அல்லது இகழ்ச்சியை உண்டாக்குகிற, அல்லது உண்டாக்க முயற்சிக்கிற, அல்லது அவர்கள் மீது துவேஷத்தைத் தூண்டிவிடுகிற, அல்லது தூண்டிவிட முயற்சிக்கிற வார்த்தைகளும், வசனத்தொடர்களும் மேற்குறிப்பிட்ட வியாசத்தில் அடங்கியிருப்பதாகவும், அதனால் குற்றம் சாட்டப்பெற்ற இருவரும் இந்தியன் பினல் கோடு 124-ஏ செக்ஷன்படி தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்தைச் செய்திருப்பதாகவும் பிராதில் கூறப்பட்டிருக்கிறது.

2. பிராசிக்கியூஷன் தரப்பில் ஆறுசாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். முதலாவது பிராசிக்கியூஷன் சாட்சி வழக்குத் தொடர்ந்த போலீஸ் இன்ஸ்பெக்டர். அவர் குற்றச்சாட்டை ஆரம்பிக்கவும், வழக்குத் தொடரவும் கவர்ன்மெண்டார் பிறப்பித்த உத்திரவுகளையும் குற்றச்சாட்டு செய்யப்பெற்ற கட்டுரை அடங்கிய "குடி அரசு" இதழ் ஒன்றையும், முதலாவது எதிரியும், இரண்டாவது எதிரியும் முறையே குடி அரசின் ஆசிரியராகவும், பிரசுரகர்த்தாவும் பதிப்பாளராகவும் இருந்ததை ரூபிக்கிற பத்திரங்களையும் தாக்கல் செய்திருக்கிறார்.

3. பிராசிக்கியூஷன் இரண்டாவது சாட்சி, சென்னை சர்க்காரின் சீனியர் தமிழ் மொழி பெயர்ப்பாளர். அவர் இந்த வழக்குக்கு ஆதாரமான கட்டுரையை மொழிபெயர்த்திருக்கிறார். அவர் தாம் செய்த மொழிபெயர்ப்பைத் தாக்கல் செய்து அது சரியான மொழிபெயர்ப்புதான் என்று சாட்சியம் கூறியிருக்கிறார். குறுக்கு விசாரணையில், அவர் தாம் ஷை கட்டுரையின் சுருக்கம் ஒன்றை 1933 நவம்பர் 9ந் தேதி சர்க்காருக்கு அனுப்பியதாகவும், அவர் ஆஜராகிற வழக்குகளில் பூரணமொழிபெயர்ப்பையும் கொண்டுவருவது வழக்கமாதலால் இந்தவழக்கிலும் 1934 ஜனவரி 10ந் தேதி உண்மையான மொழி பெயர்ப்பைத் தயார் செய்ததாகவும் கூறுகிறார். "உண்மையான மொழிபெயர்ப்பு" என்பதற்கு அவர் கொண்டுள்ள அர்த்தம் என்னவென்று குறுக்கு விசாரணையில்கேட்டதற்கு, முதல் கட்டுரையின் அடிப்படையான பொருளை வெளிப்படுத்துவதாக மொழிபெயர்ப்பாளர் கருதுகிற மொழிபெயர்ப்பே "உண்மையான மொழிபெயர்ப்பு" என்றும் தமது மொழிபெயர்ப்பில்இயன்ற அளவு வார்த்தை வார்த்தையாக சொற்பொருளுக்கு சரியாகவும், மற்ற இடங்களில் முதல்கட்டுரையின் அடிப்படையான பொருளை வெளிப்படுத்தும் முறையிலும் மொழிபெயர்த்ததாகக் கூறினார்.

4. வாதி தரப்பு 3வதுசாட்சி, கோயம்புத்தூர் ஜில்லா மாஜிஸ்டிரேட் ஆபீசிலுள்ள ஒரு குமாஸ்தா. ஷை ஆபீசிலுள்ள பத்திரிகைகளில் ரெஜிஸ்டர் புத்தகத்தில் கண்ட 11வது நெம்பர் குறிப்பு "குடி அரசு" பத்திரிகையைப்பற்றியதென்று அவர் கூறுகிறார்.

5. வாதி தரப்பு 4வதுசாட்சி. ஷை ஆபீசைச் சேர்ந்த மாஜிஸ்டிரேட் கிளார்க். இரண்டாவது எதிரி ஈரோட்டிலுள்ள உண்மை விளக்கம் அச்சுக்கூடத்தின் சொந்தக்காரர் என்றும், அவர் அந்த அச்சுக்கூடத்தில் "குடி அரசு" பத்திரிகையை அச்சிட்டு வெளியிடுவதாகவும் காட்டுகிற தஸ்தாவேஜுகளை நிரூபித்து சாட்சியம் கூறியிருக்கிறார்.

6. வாதி தரப்பு 5வதுசாட்சி. ஈரோட்டிலுள்ள மெசர்ஸ் ஹிக்கின் பாதம் புத்தகசாலை குமாஸ்தா. அவர் தமக்கு "குடி அரசு" பத்திரிகைகள் விற்பனைக்காக வருவதுண்டென்றும், 1933 அக்டோபர் 29ந் தேதி பத்திரிகையில் தமக்கு 10 பிரதிகள் வந்ததாகவும் அதில் 4 விற்பனை ஆயிற்றென்றும் கூறுகிறார்.

7. வாதிதரப்பு 6வது சாட்சி. ஈரோடு போலீஸ் இன்ஸ்பெக்டர். அவர் அவ்விடத்திலுள்ள "குடி அரசு" காரியாலயத்திலிருந்து சில கடிதங்களைக் கைப்பற்றினதாகக் கூறுகிறார்.

"எக்சிபிட் சி" என்ற பத்திரத்திலுள்ள கையெழுத்து முதலாவது எதிரியின் கையெழுத்து என்றும், "குடி அரசு"க்கு அதிக சந்தாதாரர்கள் இருப்பதாகவும் அவர் நிரூபிக்கிறார்.

8. முதலாவது எதிரி தாம் ஒருபத்திராதிபர் என்றும், பிரசாரகர் என்றும் விவரித்து தமிழில் ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதித் தாக்கல் செய்திருக்கிறார். அவர் தாம் அந்த வியாசத்தை எழுதினதாக ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் அதில் எழுதப்பட்ட விஷயங்களுக்காவது, வாக்கியங்களுக்காவது ராஜநிந்தனைக் குற்றம் சாட்டப்படுமானால் அரசாங்கமுறை, நிர்வாகமுறை முதலியவைகளை ஆராய்ச்சி செய்யவும், அதிலுள்ள குறைகளால் ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை எடுத்துக் கூறி அவற்றுக்குப்பரிகாரம் தேட ஏற்பாடு செய்யவும் யாருக்கும் சுதந்தரம் கிடையாது என்று முடிவு செய்யவேண்டியிருப்பதால், தம்மீது கொண்டுவரப்பட்டுள்ள வழக்குக்கு ஆதாரமில்லை என்று வற்புறுத்துகிறார்.

9. அவர் தமது வியாசம் முழுவதையும் இங்கிலீஷில் மொழிபெயர்த்துக் கொடாமலே தம் மீது வழக்குத்தொடர அனுமதி வாங்கப்பட்டிருக்கிறதென்றும் அப்படித் தொடரப்பெற்ற வழக்குச்சட்டப்படி செல்லாதென்றும் அந்த வியாசத்தின் பொருளும், வாக்கியங்களும், நோக்கங்களும், அறவே குற்றமற்றவை களாயிருப்பதால் இந்த வழக்கு தொடரப்பட்டிருப்பதானது தமது சமதர்மப் பிரசாரத்தை நிறுத்துவதற்காகமுதலாளிகள்சர்க்காரோ, அல்லது மத சம்பிரதாயக்காரர்களோ செய்த சூழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது என்றும் கூறுகிறார். கல்வி இலாகாவில் சம்பளங்கள் அதிகம் என்றும், படிப்புச்செலவு அதிகம் என்றும் அதற்கேற்ற பயன் விளைவதில்லை என்றும், ஏழைகளுக்கு கல்விகற்பிக்க வசதிகள் இல்லையென்றும் அந்த வியாசம் குறிப்பிடுவதாக அவர் எடுத்துக்காட்டுகிறார். அப்படிப்பட்ட முறையில் பயன்பெறும் பணக்காரரும், அதிகாரவர்க்கத்தாரும், உத்தியோகஸ்தரும் சொல்வதைக்கேட்டு ஏமாந்து போகாமல் வருகிற எலக்ஷன்களில் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த விஷயங்கள் ஷை வியாசத்தில் ஏழை ஜனங்களுக்கு எடுத்துக்காட்டப் பெற்றதென்று அவர் வற்புறுத்துகிறார். மேலும், பலாத்காரம், இம்சை, துவேஷம் முதலியன தமது பிரசாரத்தில் இல்லை என்றும், அவை தமது பிரசாரத்துக்கு முற்றும் மாறானவை என்றும், ஆனால் அரசாங்கமானது முதலாளித்தன்மை கொண்டதாய் இருப்பதாலும், மதம், ஜாதி படிப்பு என்ற வேஷத்தில் முதலாளிகளைப்போல் வாழ்க்கை நடத்துகிறவர்கள் அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டியிருப்பதாலும், தம்மை அடக்கும்படி சர்க்கார் ஏற்பாடு செய்திருப்பது ஆச்சரிய

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.

# புரட்சி

ஈரோடு 1934- பிப்ரவரி மீ 4-உ


## தற்காலம் நமக்கு வேண்டியதென்ன?

தற்காலம் நமது நாட்டுக்கு வேண்டியது, வர்ணாஸ்ரமமாகிற (மக்களுக்குள் ஆண்டானடிமை உயர்ந்தோன், தாழ்ந்தோன், வேறுபாட்டுகளை விர்த்தி செய்கிற) வெறியைக் கிளப்ப மக்களுக்குள் பரப்பிவர வேண்டுமா? அல்லது மக்கள் யாவரும் பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்கிற சமத்வக் கொள்கைகளைக் கிளப்பி அவைகளை மக்களுக்குள் பரப்பி வரவேண்டுமா? ஆகிய இந்த இரண்டு கேள்விகளைப்பற்றியும் நமது மக்களிருக்கும் நிலைமையையும், அந்தஸ்தையும் பற்றியும் யோசித்து தற்காலம் இவ்வித வேறுபாடுகளை ஒழித்து வந்திருக்கிற அந்நிய நாட்டு மக்கள் நிலைமையையும் அந்தஸ்தையும் கவனித்துப் பார்த்தால் நம் நாட்டின் மக்களுக்கு இத்தருணத்திற்கு வேண்டியது எது என்பது விளங்காமற்போகாது. ஆகையால் வர்ணாஸ்ரமமொழிந்த சமத்வக்கொள்கையாகிற நன்மருந்தே இன்றியமையாத சாதனமாகும். ஏனெனில் நம் நாட்டு மக்களை வெகுகாலமாகப் பிடித்து அடிமை, அறியாமையாகிய கொடிய நோய்வாய்ப்படுத்தி உருவழிந்து வரும் சமயம், சாதி, ஆச்சிரமம் முதலியவைகளுக்கு தாத்காலிகத்திற்கேற்ப உய்விக்கக்கூடிய அம்மருந்தேயாகும்.

உதாரணமாக வர்ணாச்ரமப் பதமில்லாத [பிறப்பினால் உயர்வு தாழ்வில்லாத] கிருஸ்தவ, முஹம்மதிய புத்த என்றவைகளுக்குட்பட்ட ஜனசமூகத்தார் இன்றைக்கும் அரசாக்ஷி புரிந்துவருவதும் வேற்றுமைக்குட்பட்ட நம்மவர்கள் வேற்றுமைக்குட்படாத முன்சொன்னவர்களால் ஆளப்படுவோர்களாக வாழ்விலும், பேச்சிலும், எழுத்திலும்; நடத்தை அநுபவம் முதலியவைகளிலும் சுதந்திரங்களை இழந்து அடிமைகளாகவும் அறியாமையால் சூழப்பட்டவர்களாகவும் வாழ்ந்து வருவது நிதர்சனமாகப் பார்த்துவருகிறோம். இன்னமும் சொல்லப்புக்கால் உலகத்தில் சிறந்து மேம்பாடடைந்துவரும் வளர்ச்சிக்கு ஆதாரமாயுள்ள நாகரீக முதிர்ச்சியின் பயனாய் ஏற்பட்டிருக்கிற மதமொழிப்பு என்னுங் கொள்கையினால்மதமென்பதேயில்லாதஒருதேசத்தில் (ரஷ்யாவில்) பார்த்தால் மக்களுக்குள்பிறப்பினால்உயர்வுதாழ்வில்லை என்பதோடு ஏழை, பணக்காரன் என்னும் வேறுபாடுகூட ஒழிந்து யாவரும் சமமென்பதே காண்கிறோம்.

இப்படியாக மேன்மேலும் நாகரீகம் விர்த்தியாகி அதன் மூலம் மக்கள் விடுதலையடைந்து சமூகம் விருத்தியடைந்துவரும் இக்காலத்திலும் அவ்வித விருத்திகளுக்கு முள்வேலி இட்டது போலுள்ளதற் கேற்றபடியாகிற வர்ணாச்ரமதர்மம் இருக்கவேண்டுமென்றும் அதன் பயனாக ஒருசிலர் கொடுமைக்குள்ளாக்கப் பட்டுவிட்டார்கள், அவர்களை உத்தரிக்க மீண்டும் அவ்வித வர்ணாஸ்ரமத்துக்குட்பட்ட ரீதியாக ஆதரிக்கவேண்டும், அதற்காக நிதிதிரட்டவேண்டுமென்றும், அந்நிதிக்கு எவரும் தங்களாலியன்றவைகளை என்னிடம் தாருங்கள் என்றும் சொல்லி சர்வ வல்லமையுள்ள வஸ்துவென்று சொல்லப்படுகிறதே உருவெடுத்து வந்தது என்று வைத்துக்கொண்டாலும் அப்படிப்பட்ட ஒரு பெரியார் எவராயினும் அவரை நம் நாடு தற்போதிருக்குமிவ்வித நிலைமைகளிலும் வரவேற்கலாமா? அல்லது பஹிஷ்கரிக்கலாமா? வென்பதை நமது நேயர்களுக்கே யோசித்துப்பார்க்கும்படி விட்டுவிடுகிறோம்.

இன்னமும் நாம்தான் இவ்விதம் யோசிக்கிறோமாவென்றால் வர்ணாச்சிரமங்களை நிலைநாட்டிவைப்பதற்கென்றே பரம்பரையாக இருந்து வருபவர்களுக்கெல்லாம் குரு, அதாவது ஜகத்குரு, சங்கராச்சாரியாரும் கூட இத்தகைய பெரியாரின் தன்மையைக் கண்டித்து வருகிறார். உதாரணமாக,

பூரி சங்கராச்சாரியார், தேவ்கோட்டையில் சில வாரங்களுக்கு முன்பு பேசியிருப்பதை வாசகர்கள் கூர்ந்து கவனிக்கவேண்டுகிறோம்.

அதாவது "காந்தி ஒரு ஹிந்துவாக இருந்து கொண்டு தீண்டாமையொழிப்பு பேச உரிமையில்லையென்று வேதங்களில் 259 ஆதாரங்கள் இருப்பதாகவும், விக்கிரக ஆராதனை யொழிப்புக்காரரான ஆர்ய சமாஜத்தாரையும் அவர் சேர்த்துக்கொண்டிருக்கிறார் என்றும், வட இந்தியாவில் ஆரிய சமாஜிகள் ஆதிதிராவிடர்களுக்கு ஆலயப்பிரவேசம் வேண்டுமென பலத்த பிரசாரம் செய்கிறார்களென்றும் மத்தியில் ஏதும் திருத்தம் செய்யவேண்டியிருந்தால் நான் சொல்லுகிறேன் என் அபிப்பிராயம் அப்படித்தான் செய்ய வேண்டுமென்பது தான் வீரர்கள் வழக்கமென்றும், இயேசுக்கிறிஸ்து, மகம்மது முதலியவர்கள் அப்படித்தான் செய்தார்களென்றும், ஆனால் காந்தியோ "வருணாச்சிரமம் உண்டு, ஆதிதிராவிடருக்கு கோவில் பிரவேச உரிமையும் வேண்டும்" என்று சொல்லுவது வீரர் வாழ்க்கையாகாதென்றும், அவர் சூழ்ச்சி செய்து மக்களை ஏய்க்கப் பார்க்கிறார் என்றும் அதற்கு ஏமாறக்கூடாதென்றும், கூறிமேலும் குறிப்பிட்டதாவது நாஸ்திகத் தலைவர்கள் பலரை எனக்கு நேரில் தெரியும். அவர்களுக்கு வேதத்தில் நம்பிக்கையில்லையென்று சொல்லிக்கொண்டு அவர்கள் கொள்கையை பிரசாரம் செய்கிறார்கள். அவர்கள் நேர்மையை நான் போற்றுகிறேன். ஆனால் காந்தியோ சூழ்ச்சி செய்கிறார்"

என்பதாகும்.

மற்றும் இப்பெரியார் யாருக்காக இவ்வளவு கஷ்டப்பட்டு உத்தரிக்கப் போகிறார்களோ அத்திருக்குலத்தடியார்களாகிற ஹரிஜனங்களென்றுசொல்லப்பட்டவர்கள் கூட சென்னையிலும், கொச்சி, திருவாங்கூர் முதலிய மலையாள நாடுகளிலும் விருதுநகர் போன்றஇடங்களிலும் இன்னம் மற்றபிரதேசங்களிலுள்ளவர்கள் ஆங்காங்கே கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து எங்களை உத்தரிக்க தாங்கள் வேண்டுவதில்லை என ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் கையெழுத்திட்ட அறிக்கைப் பத்திரங்களையும் அப்பெரியார் முன் சமர்ப்பிக்கப்பட்டும் வந்திருக்கிறது.

இதுமட்டுமல்ல இன்னும் இப்பெரியாருக்கு இவர் செல்லுமிடங்களிலெல்லாம் பகிஷ்காரங்களும் நிகழுமென்பதற்கு அநேக அறிகுறிகளும் காணப்படுகின்றன.

நம் நாட்டிற்கு இவ்விதமாக அவசியப்பட்டிருக்கிற இப்பெரியார் பின் எதற்காக இங்கெல்லாம் விஜயம் செய்கிறார்? யார் யார் பெயரால் யார் யாரைப் பிழைக்கவைக்கப் பார்க்கிறார்? இவ்வித சுற்றுப் பிரயாணங்களாலும் நிதி திரட்டல் முடிச்சுவாங்கல்களாலும் யாருடைய முன்னேற்றம் விருத்தி? யாருடைய முன்னேற்றம் பாழ்? லாபம் யாருக்கு? நஷ்டம் யாருக்கு? என்பவைகளும் நம் நாட்டு மக்களுக்கு நிலைமைக்கு வேண்டுவது யாது? என்பவைகளைச் சிந்தித்து ஏற்ற வழிகளில் அவரவர்கள் கடமைகளைச் செய்ய முற்பட வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்

## வருத்தம்.

நமதுஇயக்க பிரபல தோழர்களில் முக்கியஸ்தருன தோழர் ஏ. பொன்னம்பலனர் அவர்களின் சகோதரர் மாணிக்கம் அவர்கள் நேற்று இறந்தார் என்பதை யறிந்து விசனிக்கிறோம். சென்ற ஆண்டு தங்கையையும், இவ்வாண்டு தம்பியையும் பிரிந்த தோழர் பொன்னம்பலனருக்கு நம் ஆறுதல் கூற விரும்பவில்லை என்றாலும் வயோதிகர்களான அவரின் தாய்தந்தையர்களுக்கு ஆறுதல் கூற ஆசைப்படுகிறோம்.

## சிறையில் தலைவர்கள்.

31-1-34 தேதியன்று கோயமுத்தூர் சிறையில், இருக்கும் சுயமரியதை இயக்க தலைவர்களான தோழர்கள். ஈ. வெ. ராமசாமி அவர்களையும், எஸ். ஆர். கண்ணம்மாளவர்களையும் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களும் ஈரோடு பிரபல வக்கீல் வி. வேணுகோபால் அவர்களும் பார்கக சென்றிருந்தார். தலைவர்கள் சிறையில் சந்தோஷமாக இருப்பதாகவும் தெரிகிறது. தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி யவர்கள் தலைவர்களைப் பார்த்துவிட்டு அன்றிரவே ஈரோடுவந்து சேர்ந்தார். 2-2-34ந் தேதி இரவு சென்னை சென்றுள்ளார்கள் மீண்டும் 4-உ ஈரோடு வருவார்.

## சுயமரியாதை தோழர்கள் சுற்று பிரயாணம்.

இம்மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து தமிழ்நாடு முழுதும் நமது தோழர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யத்தீர்மானித்திருக்கிறார்கள். நிகழ்ச்சிக்குறிப்பு பின்னர் வெளிவரும். தங்கள் ஊருக்கு விஜயம் வேண்டுமென விரும்பவோர்கள் சென்ட்ரல் சுயமரியாதை சங்கம், ஈரோடு. என்றவிலாசத்திற்கு எழுதவும்.

## துணுக்குகள்.

### ஆதிதிராவிடர் இல்லையோ?

அடுத்த மார்ச்சு, ஏப்ரல் மாதத்தில் நிர்வாக சபையில் ஓர் இடம் காலியாகும் என்று விஷயம் கூறப்படுகிறது. இக்காலியாகும் இடத்தில் யார்? உட்கார்வது என்பதுபற்றி எல்லாப் பத்திரிகைகளும் விஷயம் கூறி சிலர் பெயரை சிபார்சும் செய்கிறது. வகுப்புத் துவேஷத்தை வெறுக்கும் சகவர்த்தமானியான "சுதேசமித்திரன்" ஒரு ஐயங்கார், அல்லது ஐயர் கனவான் பெயரை சிபார்சு செய்வதுடன், முன்பு பனகால் காலத்தில் காபினெட்டில் ஓர் பிராமணர் இருக்கவேண்டுமென்பதற்காகவே மந்திரியாக ஒருபிராமணரை நியமித்ததாகவும் அந்நியாயப்படி இன்று ஓர் பிராமணர் அவசியம் என்று கூறுகிறது.

இதுவரை பெரிய உத்தியோகங்களில் ஐயர், ஐயங்கார், ஆச்சாரியார் எல்லாம் நீண்ட நாள் இருந்து பார்த்துவிட்டார்கள். அதைப்போன்றே முஸ்லீம், கிருஸ்துவர், முதலியார், நாயுடு, தமிழர், தெலுங்கர், கேரளர் முதலிய யாவரும் இருந்துபார்த்துவிட்டார்கள் என்று நமது சகவர்த்தமானிக்கு இவைகளைக் கூறுகிறோம், ஆனால் இதுவரை இந் நாட்டில் ஜனசங்கையில் நாலில் ஒரு பாகத்தினரான ஆதிதிராவிடர்என்பவர்களில் ஒருவர்கூட இதுவரையில் அங்கு இருந்து பார்த்ததில்லை. இன்று ஆதிதிராவிட முற்போக்கைக் குறித்து எங்கும் பலத்த கிளர்ச்சி இருக்கிறது. ஆதலால் சகலரும் ஒன்றுசேர்ந்து ஆதிதிராவிட கனவான் ஒருவர் அங்கு வர முயற்சிக்கக் கூடாதா? என்பதே!

நமது மாகாண ஆதிதிராவிட சமூகத்தலைவர்கள் தங்களுக்குள்ள அற்ப அபிப்பிராய பேதங்களை விட்டொழித்து ஒரு ஆதிதிராவிட கனவான் அங்குவர முயற்சிப்பார்களா? அல்லது இன்றுள்ளதுபோன்ற உயர்தர ராஜதந்திரிகளின் முன்னேடும் பிள்ளையாக மட்டும் இருந்தும் தங்கள் காலத்தைக் கடத்த ஆசைப்படுகிறார்களா? ஆதிதிராவிடர்கள் ஒன்றுபட்டால் இது கிட்டாது போகுமென்று நாம் நினைக்கவில்லை.

ஃ ஃ

### விதவையிலும்பணக்காரனீயமா?

நமது சட்டசபையில் கனம் கல்வி மந்திரியவர்கள் ஐஸ்ஹவுஸ் என்பதிலுள்ள விதவைகள் விடுதிக்கு வருடம் செலவுக்கும், உபகாரச் சம்பளத்துக்கும் ரூபாய் 27-ஆயிரம் செலவாவதாகக்கூறியிருக்கிறார். அத்துடன் அவ் விதவை விடுதியில் பிராமணப் பெண்கள் 62-பேர் என்றும், பிராமணரல்லாதார் விதவைகள் பன்னிரண்டே பேர்களென்றும் கூறியுள்ளார்.

விதவைகள் மணத்தை எதிர்க்கும் வைதீகம், வைதீகப் பிராமணீயம் இவர்களிடம் நாம் ஏதுவும் சொல்லவில்லை. சீர்திருத்த விதவை மணத்தை, விதவைகள் முற்போக்கை விரும்புகிறவர்களுக்கே கூறுகிறோம். விதவைகளில் கூடவா பணக்காரனீயமும், பார்ப்பனீயமும் இருக்கவேண்டும். இதற்குக் காரணம் விதவைகள் விடுதியில் தலைமை உத்தியோகம் ஓர் பிராமண விதவை அம்மாளிடமும், விதவை விடுதியில் உள்ள உபாத்தியாயினிகளில் பெரும்பாலும் பிராமண அம்மாள்களாலேயே நிரப்பப்பட்டிருக்கிறதென்றும் ஜஸ்டிஸ் பத்திரிகையில்பலமுறை செய்தி வந்திருக்கிறது. கனம் கல்வி மந்திரியவர்கள் விதவை விடுதி தலைமையைத் திருத்தியமைத்து வருடந்தோறும் வரும் பிராமணரல்லாத விதவைகள் மனுக்கள் குப்பைத் தொட்டிக்குப்போகாதிருக்கச் செய்ய இனியாவது தவறக் கூடாதென்று கூறுகிறோம்.

ஃ ஃ

### கேள்வி முறை ஏது,

சென்ற சட்டசபையில் கூட்டத்தில் "இனாம்தார்கள் குடிகள்" சம்பந்தமாக ஓர் மசோதா செய்யப்பட்டதை எல்லாவிடங்களிலும் கண்டித்து தீர்மானங்கள் அனுப்பப்படுகிறது. பத்திரிக்கையின் செல்வாக்கு இனாம்தார்களின் குடிகள் நன்மையைவிட, இனாம்தார்கள் நன்மை கோரியே பெரிதும் உபயோகப்படுத்தப்படுகிறது. சர்கார் இம்மசோதாவுக்கு ஆதரவு காட்டியபோதிலும் அதை பயன்படாதடிக்க செய்யப்படும் முயற்சி மிக அதிகமாகும். இதற்குக் காரணம் இனாம்தார்கள்தான் பெரும்பாலும் பத்திரிக்கையைப்படிக்கும், ஆதறிக்கும் கூட்டமாகஇருக்கிறார்கள், இனாம்தார்கள் குடிகளில் பெருமபான்மை யானவர்களுக்கு தங்களுக்கெல்லாம் நன்மையை கொடுக்ககூடிய திட்டம் ஒன்று வந்திருக்கிறதென்பதே தெரியாத விஷயமாகும். இனாம்தார்களின் குடிகள் அவர்களின நலம் கருதி செய்யப்பட்ட மசோதாவின் செய்தியை அரியும்படிச் செய்ய சர்க்கார் விளம்பர அதிகாரிகளாவது முயல வேண்டும்.

ஃ ஃ

### எல்லாம் பொதுவுடமையா?

இனாம்தார்கள் குடிவிஷயமாய் விவாதம் நமது சட்டசபையில் நடக்கும்போது ஓர் சட்ட நிபுணர் கூறினார். இனாம்தார்களுக்கு சொந்தமானதை பரிமுதல்செய்யும் உரிமை இச்சட்டத்துக்கு இருக்கிறது இது பொதுவுடமை தத்துவம் என்றார். மற்றோர். பிரபலஸ்தர் கூறினார் இச்சட்டம் செய்தல் ரஷ்ய பொதுவுடமையை வரவேற்பது போலாகுமென்றார். இதற்கு பதிலளித்த. கனம் மந்திரியாரோ! இவ்விதம் சட்டம் செய்யாதிருத்தலானது ரஷ்யப் பொதுஉடமையை இங்கு கூப்பிட இடமுண்டாகுமென்றார். இவ்விதம் தொட்டதெல்லாம் பொதுவுடமையாக தோன்றுகிறது. இதைப்போன்றே ஐக்கிய மாகாணத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள விவசாயிகள் கஷ்டநிவாரண மசோதாவை, அம்மாகாண பேங்கர்கள் சங்கத்தார் தெரிந்து கவர்னருக்கு அனுப்பியுள்ள ஓர் மகஜரில்—பொதுவுடமைக்கொள்கையை இம் மசோதா மூலியம் ஒப்புக்கொள்வதுபோலாகிறது---என்று காட்டிருக்கிறது. இவ்விதம் பிரபுக்கள் சர்கார் செய்யும் ஒவ்வொன்றையும்—பொது வுடமை என்று சொல்கிறார்களே! இதற்காக இவர்கள்மீது சர்கார் எதும் நடவடிக்கை எடுக்காதா?

ஃ ஃ ஃ

### போக்கிஷமெம்பர் பொய்யரா?

நாட்டில்மிராசுதாரர்கள் துயரச்சத்தம் மிகவும் பலமாகப்போய்விட்டது. நிலவரி மட்டுமல்ல, தண்ணீர் வரியையும் சேர்த்து நூற்றுக்கு 25 விகிதம் குறைக்கவேண்டுமென்று நேற்று சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவ்வாதத்தில் மிராசுதார்களோ வரி கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்கிறார்கள். கவர்ன்மெண்டு பொக்கிஷ மெம்பர் அவர்களோ மிராசுதார் கூச்சல் வெறுங்கூச்சல் என்கிறார். இருக்கும் ரிசர்வு பண்டைக்காலி செய்வதற்காகவே நிலவரி குறைக்கவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். இவ்விரண்டில் எது உண்மை என்பதும், உண்மையாகவே கஷ்ட நிலையிலுள்ள விவசாயிகளை சர்க்கார் கவனிக்கிறார்களா? இல்லையா? என்பதும் நம்முடைய விவாதமல்ல. பொக்கிஷ மெம்பர் சொல்வதில் சிறிது உண்மையுண்டு. அத்துடன்மிராசுதார்களுக்கே இவ்வளவு கஷ்டமானால், மிராசுதார்களிடம் வேலை செய்யும் சோகமுடைய விவசாயக்கூலிகளின் நிலைமை என்ன? என்பதை சிந்திக்க மிராசுதார்கள் தவறமாட்டார்கள் அல்லவா? அவர்கள் குறைகளை சொல்ல எந்த சட்டசபை இருக்கிறது!

ஃ ஃ ஃ

### தேர்தல் நாடகமா?

தாலூகா போர்டுகளை ஒழித்துவிடுவதா? இல்லையா? என்றுகடைசிமுறையாக சட்டசபையில் விவாதிக்கப்பட்டது. கனம் முதல் மந்திரியார் இன்றுள்ள 208 தாலூகா போர்டுகளில் பாதி போர்டுகள் தங்கள் செலவுக்குக்கூட வழி தேடிக்கொள்ள முடிவதில்லை என்கிறார். ஆதலால 208 போர்டுகளையும் இழுத்துப் பூட்டிவிடவேண்டுமென்கிறார். இது இன்றைய மந்திரி முயற்சிமட்டுமல்ல. சென்ற ஏழு வருடமாக இருந்த மூன்று மந்திரி சபையும் ஆதரித்த முயற்சியே யாகும். ஆனால் முன்பு மந்திரி கட்சியமைத்தவர்களே இன்று இதை எதிர்க்கிறார்கள். எதிர்ப்புக்குத் தோதாகப் பல நியாயங்களைக் கூறுகிறார்கள். ஏழு வருடங்களில் 50)க்கு மேற்பட்ட பஞ்சாயித்து சபைகள் உண்டாகி விட்டது. தாலூகா போர்டுகளின் வருமானத்தில் பாதி பாகத்தை அது விழுங்கி விடுகிறது. இதற்கு பஞ்சாயித்து போர்டுகளை கலைக்க வேண்டியதுதானா? 208 போர்டுகளுக்கு பயப்படுகிறவர்கள் 500 போர்டுகளுக்கு அதிகம். பயப்படுவார்கள். அடுத்த தேர்தலில் தாலூகா போர்டுகளைக் காப்பாற்றிய சலுகையைக்காட்டி, தங்கள் கட்சிக்கு தாலூகா போர்டுகளின் செல்வாக்கை உபயோகப்படுத்திக் கொள்ளவே சிலர் இன்று என்னுகிறார்கள். இன்றைய சட்டசபையின் நிலைமையைதான் இவ் விவாதம் காட்டக்கூடியதாக இருக்கிறது.

---

## லெனின்.

சுயமரியாதை இயக்கத்தைச்சார்ந்த காரைக்குடி முத்துப்பட்டணம் "சமதர்ம விலாஸ்" தோழர் ராமசுப்பையா விசாலாட்சி அவர்கட்கு, 16-1-34 செவ்வாய்க்கிழமை பிறந்த ஆண்குழந்தைக்கு "லெனின்" என்று பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. தாயும் குழந்தையும் சௌகரியமாகயிருக்கின்றார்கள்.

[9ம் பக்கத் தொடர்ச்சி]

ப்படத்தக்கதல்ல என்றும் அவர் கூறுகிறார்.

10. இரண்டாவது எதிரி டைப்அடிக்கப்பட்டதொருஸ்டேட்மெண்டை தாக்கல் செய்திருக்கிறார். அவர் தாம் எவ்வித குற்றமும் செய்யவில்லை என்றும், தாம் "குடி அரசு" பத்திரிகையின் பதிப்பாளராகவும், பிரசுரதாராகவும் இருந்தாலும் அந்தப் பத்திரிகையின் ஆசிரிய—நிர்வாக வேலைகள் முழுவதையும் முதலாவது எதிரியே பார்த்துவருவதாகவும் கூறுகிறார். வழக்கில் குறிப்பிடப்பட்ட வியாசம் ராஜநிந்தனையானதென்பதை அவர் மறுக்கிறார். மேற்படி வியாசம் சர்க்காரின் நிர்வாகமுறை முதலியவைற்றை ஆட்சேபித்து அவற்றை நியாயமான வழிகளில் திருத்தும்படி, எவ்விதத்திலும் பகை, அல்லது இகழ்ச்சி அல்லது துவேஷத்தை தூண்டிவிடாமலும் அல்லது தூண்டிவிட முயற்சிக்காமலும், நல்லெண்ணத்துடனே எழுதப்பட்ட ஒரு விரிவுரையேயன்றி வேறல்ல என்று கூறுகிறார். சட்டவரம்புக்குட்பட்ட முறைகளால் பாமர ஜனங்களுடையவும், தொழிலாளிகளுடையவும் உரிமைகளையும், முன்னேற்றத்தையும் அதிகப்படுத்துவதும், பாதுகாப்பதுமே "குடி அரசு" பத்திரிகையின் கொள்கைகளாக எப்போதும் இருந்து வந்திருப்பதாக அவர் வற்புறுத்துகிறார். சட்டமறுப்பு இயக்கத்தைக் கண்டித்தும் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதை ஆதரித்தும் அந்தப் பத்திரிகையில் வெளிவந்துள்ள சில கட்டுரைகளை அவர் எடுத்துக்காட்டுகிறார்.

இப்போது நடைபெற்றுவரும் காரியங்களின் நிலைமையை நியாயமான முறைகளால் அதாவது வருகிற எலக்ஷன்களில் ஜாக்கிரதையுடனும், கவலையுடனும் நடந்துகொள்வதாய் மாற்றுவதென்பதே அந்தவியாசத்தின்முக்கியநோக்கம்என்று அவர்உறுதி கூறுகிறார். அந்தவியாசம்பாமரஜனங்களும் தொழிலாளிகளும் அனுபவித்துவரும் பலவித கஷ்டங்களை எடுத்துக்காட்டியிருப்பது அவசியம்தான் என்று அவர் வற்புறுத்துகிறார். மேற்படி வியாசத்தில் வற்புறுத்தி கூறியிருப்பது பகையை, அல்லது இகழ்ச்சியை உண்டாக்குவதற்காக அல்லவென்றும், ஆனால் பாமரமக்கள் தங்கள் நிலைமையை உணர்ந்து, சரியானபடி வோட் செய்வதால் தங்கள் குறைகளுக்கு பரிகாரம் தேடும்படி செய்வதற்காகவே அப்படி வற்புறுத்தி எழுதியிருப்பதாகவும் அவர் விவாதிப்பதாக அவரது [இரண்டாவது எதிரி] ஸ்டேட்மெண்டினால் எனக்குத் தெரிகிறது.

முடிவாக அவர் ஒரு மொழிபெயர்ப்பைத் தாக்கல் செய்து, அது சரியான மொழிபெயர்ப்பு என்றும், அதைத் தனது ஸ்டேட்மெண்டின் ஒருபாகமாக ஒப்புக்கொள்ளவேண்டும் என்று கேட்கிறார்.

11. வழக்கின் இந்த விஷயத்தைப்பற்றி கோயமுத்தூர் பப்ளிக் பிராசிக்கியூட்டரால், குற்றப் பத்திரிகை தயாரிப்பதற்கும், முதலாவது இரண்டாவது எதிரிகளின் இரண்டு வக்கீல்களால், அதற்கு மாறாகவும் எடுத்துக் கூறப்பட்ட நீண்ட நியாய வாதங்களைக் கேட்டேன்.

12. மேற்படி வியாசத்தைப் பூராவும் படித்துப் பார்க்கவேண்டும் என்றும், அது கல்வி இலாகா நிர்வாகத்தைப்பற்றி நல்லெண்ணத்துடன்செய்யப்பெற்ற, அனுமதிக்கக்கூடிய மதிப்புரை என்றும், பத்திராசிரியர்களுக்கு விரிவான சுதந்திரம் கொடுக்கப்படவேண்டும் என்றும், இந்த நாட்டிலே கீழ்நாட்டுப் பேச்சு முறைகளுக்கும், டாம்பீகமான பாஷை நடைக்கும் கழிவுதள்ளியே கவனிக்கவேண்டும் என்றும், "குடி அரசு" சட்டமறுப்பு இயக்கம் சம்பந்தமாக சர்க்கார் எடுத்துக்கொண்ட நடைமுறைகளை ஆதரித்து எழுதியிருப்பதாகவும் எதிரிகளின் வக்கீல் வற்புறுத்துகிறார்.

13. அந்த வியாசத்தின் மொழிபெயர்ப்பை வாசித்துப் பார்த்ததின்மேல், மேற்படி வியாசத்தை முதல் எதிரி எழுதினதாலும், இரண்டாவது எதிரி அதை அச்சிட்டு பிரசுரித்ததாலும், பிரிட்டிஷ் இந்தியாவில் சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்டான சென்னை கவர்ன்மெண்டார் மீது பட்சபாதம், ஏழைகளின் உரிமைகள் விஷயமாக எதிர்ப்பு-அசட்டை கொள்ளை, பொறுப்பு இல்லாமை, ஏமாற்றுதல், மோசடி, அயோக்கியத்தனம், கொடுங்கோன்மை, குரூரம், தந்திரம், முதலிய குற்றங்களைச் சுமத்தி, அதன்மூலமாக இந்தியன்பினல் கோர்ட் 124 ஏ. செக்ஷன்படி தண்டிக்கப்படத் தக்க ஒரு குற்றத்தைச் செய்ததாக எதிரிகள் ஒவ்வொருவர்மீதும் தனிக் குற்றப் பத்திரிகை தயாரித்தேன்.

14. எதிரிகள் ஒவ்வொருவரும், தாம் குற்றவாளி அல்ல. என்று கூறுகிறார்கள், வாதிதரப்பு சாட்சிகளில் யாரையாவது மீண்டும் குறுக்குவிசாரணை செய்யவாவது, அல்லது எதிர்வாதத்துக்காக சாட்சிகளை விசாரிக்கவாவது இருவரும் விரும்பவில்லை.

15. மேற்படி வியாசத்தை முதல் எதிரி எழுதுகிறார் என்பதும், இரண்டாவது எதிரி அதை அச்சிட்டுப் பிரசுரித்ததாகவும் ரூபிக்கப்பட்டுவிட்டது,

16. இரண்டாவது எதிரியின் வக்கீல், வாதிதரப்பு இரண்டாவது சாட்சியினால் செய்யப்பட்ட மேற்படி வியாசத்தின் மொழிபெயர்ப்பு சரியல்ல என்றும் கூறினார், அவருடைய வழக்காளி தமது ஸ்டேட்மெண்டுடன் அந்த வியாசத்தின் மொழிபெயர்ப்பு ஒன்றையும் தாக்கல் செய்திருக்கிறார்.

17. மேற்படி வியாசம் 124-ஏ. செக்ஷன்படி குற்றமுள்ளதென்ற எனது அபிப்பிராயத்துக்கு ஆதாரமாகக் குற்றப் பத்திரிகையில் A. முதல் I. முடிய சில வாக்கியத் தொடர்களைக்குறிப்பிட்டிருக்கிறேன். அவை எக்சிபிட் E. என்ற [இங்கிலீஷ்] மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டவை,

18. வாதிதரப்பு இரண்டாவது சாட்சியின் மொழிபெயர்ப்பு தவறானதென்றும், எதிரிகளுக்கு பாதகமானதென்றும் எதிரிகள் எடுத்துக் காட்டியிருக்கலாம். இரண்டுவிதமாக அப்படிச் செய்யலாமென்று எனக்குத் தோன்றுகிறது. முதலாவது ஒரு சரியான அகராதியை வைத்துக்கொண்டு மேற்படி தமிழ் வியாசத்தை வாக்கிய வாக்கியமாக எடுத்து வாதிதரப்பு இரண்டு சாட்சியை [கவர்ன்மெண்ட் தமிழ் மொழிபெயர்ப்பாளரை] குறுக்கு விசாரணை செய்வது, இரண்டாவது எதிர்தரப்பில் ஒரு தமிழ் அறிஞரை ஆஜராக்கி அவருடைய பாஷை, அறிவு வாதிதரப்பு இரண்டாவது சாட்சியின் அறிவுக்குச் சமமானது, அல்லது அதிலும் சிறந்ததென்று நிரூபித்து அவர் [மேற்படி வியாசத்திலுள்ள] பல வாக்கியத் தொடர்களுக்குச் செய்கிற மொழிபெயர்ப்பைத் தாக்கல் செய்வது.

19. இதில் முதலாவது முறை அனுசரிக்கப்படவில்லை. வாதிதரப்பு இரண்டாவது சாட்சியின் மறு விசாரணை முடிந்தவுடனே அவர் கோயம்புத்தூரிலிருக்கவேண்டுமென்று எதிர்தரப்பு வக்கீல் விரும்புகிறார்களாவென்று கேட்டேன். அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். எனவே மேற்படி சாட்சி கோர்ட்டிலிருந்துபோய்விட்டார். மேலே கூறியபடி எதிர்தரப்பில் சாட்சிகள் கொண்டுவரப்படவில்லை. வாதிதரப்பு இரண்டாவது சாட்சி தான் சென்ற பதினேழு வருடகாலமாக கவர்ன்மெண்டாருக்குத் தமிழ் மொழிபெயர்ப்பாளராக இருந்துவருவதாகக் கூறுகிறார். எனவே அவர் சரியாக மொழிபெயர்ப்புச் செய்யத் திறமை உள்ளவர் என்பதை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும் என்றுதான் கருதுகிறேன். அவருடைய மொழிபெயர்ப்பு பாதகமானது என்றோ, அல்லது மிகைபடக் கூறியுள்ளது என்றோ கூறுவதானல், அந்த வாக்கியங்களைக் குறுக்கு விசாரணையில் வார்த்தை வார்த்தையாக அலசிக்காட்டி அதை ரூபிக்க எதிரிகளுக்கு இடமிருந்தது. ஆனல் எதிரிகள் அப்படிச் செய்ய முயற்சிக்கவில்லை. நான் முதல் வியாசத்திலுள்ள வாக்கியங்களை எனது மாஜிஸ்ட்ரேட் கிளார்க்கின் உதவியைக் கொண்டும், ஒரு அகராதியின் உதவியைக்கொண்டும், ஆராய்ந்து பார்த்தேன். வாதிதரப்பு இரண்டாவது சாட்சியின் மொழிபெயர்ப்பு மிகைப்படக்கூறும் மொழிபெயர்ப்பல்ல. என்பது எனது அபிப்பிராயமாகும்.

20. அந்த வியாசம் கவர்ன்மெண்டின் மாற்றப்பட்ட இலாக்காக்களில் ஒரு பகுதியின் நிர்வாகத்தை மாத்திரம் கண்டிக்கிறதென்று சொல்வதை ஒப்புக்கொள்ளக்கூடிய எதிர்வாதமாக நான் கருதுகிறேனில்லை, சென்னை அரசாங்கம் ஒரே ஸ்தாபனந்தான். அதில் ஒருபாகத்தைக் கண்டிப்பது கவர்ன்மெண்டு முழுவதையுமே கண்டிப்பதாகும் என்று நான் கருதுகிறேன். வரிகள் அதிகரித்துவிட்டதென்றும், அதனால் ஏற்பட்ட நன்மைகள் அந்த வரி அதிகரிப்பிற்குச் சமமாக இல்லையென்றோ, அல்லது அந்த நன்மைகள் சரியானபடி பகிர்ந்துகொடுக்கப்படவில்லையென்றோ, சொல்லுவதற்கும், வரிப் பணத்தைச் சரியானபடி செலவழிக்கும்படி செய்யத் தக்க ஆட்களைத் தேர்தலில் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு பொது ஜனங்களை வற்புறுத்துவதற்கும் ஒரு பத்திராசிரியருக்கு, அல்லது ஒரு பிரஜைக்கு உரிமை உண்டென்பதில் சந்தேகமில்லை. ஏழை ஜனங்கள் கவனிக்கப்படுகிறதில்லை அல்லது அவர்களின் உரிமைகள் விஷயமாக அவர்கள்

ஏமாற்றப்படுகிறார்கள், வரிப்பணத்தால் ஏற்படுகிற நன்மைகளெல்லாம் பணக்கார வகுப்பாருக்கே கிடைக்கின்றன என்பதுதான் அந்த வியாசத்தின் உட்பொருளாகும். அப்படிப் பணக்காரருக்குத்தான் எல்லா நன்மைகளும் கிடைக்கிறது என்பதையும், தேர்தல்களில் சரியான முறையை அனுசரித்து அதைச் சரிப்படுத்தவேண்டுமென்பதையும் 124-ஏ. செக்ஷன்படி குற்றம் ஏற்படாமல் எழுதியிருக்கலாம். ஆனால் அந்த வியாசத்திலோ மோசடி, அயோக்கியத்தனம், பாமர ஜனங்கள் சுகவாழ்க்கையைப்பற்றி அசிரத்தை என்ற குற்றச் சாட்டுகள் ஒன்றன்பின் ஒன்றாகக் காணப்படுகின்றன,

21. கீழ்நாட்டு பேச்சு வழக்கத்துக்கும், டாம்பீக பாஷை நடைக்கும் கழிவுதள்ளவேண்டும் எனகிற வாதத்துக்கு இடமேயில்லை என்று எண்ணுகிறேன். முதலாவது எதிரி சில வருடங்களாக தமிழிலேயே எழுதி வந்திருப்பதால் தமிழ் வார்த்தைகளின் அருத்தத்தை நன்றாய் அறிந்த ஒரு ஆளாக இருக்கவேண்டும். நன்றாய் படித்த ஒருவர் அந்த வியாசத்தைப்படித்தால் அதை எழுதியவர் கல்வி முறையைக் குறித்து அதிருப்தி கொண்டிருப்பதாகத் தெரிந்துகொண்டு அவர் தமது கருத்துகளை அவ்வித பாஷை நடையில் வெளியிடுவதற்கு ஏன் இடங்கொடுக்கப்படவேண்டும் என்று ஆச்சரியப்படலாம். குறைந்த படிப்புள்ள ஒருவர் அந்த வியாசத்தை வாசித்து அதே முடிவுக்கு வரலாம். ஆயினும் அந்த வியாசத்தில் உபயோகிக்கப்பட்ட வார்த்தைகளின் தெளிவான அர்த்தப்படியேதான் கவர்ன்மெண்டாரின்நடத்தையும், நோக்கங்களும் இருக்கின்றன என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்படக்கூடும். முதலாவது எதிரி அவர் எழுதியிருப்பதின் தெளிவான அர்த்தத்தை மறுக்க முடியாது என்று கருதுகிறேன். இரண்டாவது எதிரி தம் இஷ்டமாகவே அந்த வியாசத்தை அச்சிட்டு பிரசுரித்தவராக இருப்பதால், அதை முழு உத்திரவாதத்துடனே அச்சிட்டுப் பிரசுரித்ததாகவே தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. அந்த வியாசத்தை பிரிட்டிஷ் இந்தியாவில் சட்டபூர்வமாக ஸ்தாபிக்கப்பெற்றுள்ள சென்னை கவர்ன்மெண்டாருக்கு விரோதமாக இந்தியன் பினல் கோடு 124-ஏ செக்ஷனில் விவரிக்கப்பட்டுள்ள உணர்ச்சிகளையும், மனப்பான்மையும் தூண்டிவிடும் ஒரு முயற்சி என்று தீர்மானிக்கவேண்டியிருக்கிறது.

22. ஆகையால் குற்றஞ்சாட்டப்பெற்றவர்கள் ஒவ்வொருவரும் அந்த செக்ஷன்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றத்தைச் செய்திருப்பதாக நான் தீர்மானிக்கிறேன்.

23. நான் முதலாவது குற்றஞ்சாட்டப்பெற்றவரான தோழர் ஈ. வெ. இராமசாமி நாயக்கருக்கு ஆறுமாத வெறுங்காவலும் 300 ரூபாய் அபராதமும் தண்டனை விதிக்கிறேன். அபராதம் செலுத்தத் தவறினால் அவர் பின்னும் ஒரு மாதம் வெறுங்காவல் தண்டனை அனுபவிக்கவேண்டும். இரண்டாவது குற்றஞ்சாட்டப்பெற்றவரான மிஸஸ் எஸ். ஆர். கண்ணம்மாளுக்கு மூன்று மாத வெறுங்காவலும் 300 ரூபா அபராதமும் தண்டனை விதிக்கிறேன். அபராதம் செலுத்தத் தவறினால் அவர் பின்னும் ஒருமாதம் வெறுங்காவல் தண்டனை அனுபவிக்கவேண்டும்.

பகிரங்கக் கோர்ட்டில், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் முன்னிலையில் தீர்ப்புச் சொல்லப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் அபராதத்தை உடனே செலுத்த தயாராக இல்லை.

(ஒப்பம்) ஜி. டபிள்யூ. வெல்ஸ்,
டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்,
24-1.34.

## கொச்சி சட்டசபை

### விவசாயிகள் கஷ்டங்கள் நீக்கப்படலாம்.

### அய்யப்பன் கிளர்ச்சி.

கொச்சி சட்டசபை 21-1-34ல் திவான் மிஸ்டர் வி. ஜி. ஹெர்பர்ட் தலைமையில் கூடியபோது இப்பொழுதைய பொருளாதார நெருக்கடியால் விவசாயிகள் படும் கஷ்டங்களை நீக்குவதற்கான ஏற்பாடுகள் உடனே செய்யப்படவேண்டுமென்ற விஷயம் கவனிக்கப்பட்டது. சர்க்கார் இதற்குச் சாதகமானவைகளைச் செய்வார்களென உறுதி கூறப்பட்டது. சுமார் ரூ. 5 லக்ஷம் ரூபாய் கடன் திட்டமொன்றின் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்துதவவும், ஏற்கனவே கடன் பட்டவர்களின் நிலங்களைக் கடன்காரர்கள் எளிதில் ஏலத்தில் விடாதிருப்பதற்கான சட்ட திட்டங்களையும் செய்வதாகக் கூறப்பட்டது.

சட்டசபையில் கொண்டுவரப்பட்ட மசோதாக்களுள், கொச்சி அச்சுச் சட்டத் திருத்தம் புஸ்தகப் பதிவுச் சட்டத்திருத்த மசோதாவைப்பற்றியே சபையங்கத்தினர்கள் வெகு தீவிரமாய்க் கண்டித்து வாதம் செய்தனர். இம் மசோதா மூலம் ஆக்ஷேபகரமானதும், ஒழுங்கீனமானதும் ராஜத்துவேஷமுள்ளதுமான பிரசுரங்களைத் தபால், மூலமாகவோ வேறு விதமாகவோ சமஸ்தானத்திற்குள் கொண்டுவருவதைத் தடுக்கும் அதிகாரம் சர்க்காருக்குக் கொடுக்கப்படும்.

தோழர் கே. அய்யப்பனும், வி. வார்க்கியும் இம் மசோதாவை எதிர்த்துப் பேசுகையில் இவைகளைத் தடைப்படுத்த சாதாரணச் சட்டமே போதுமானதென்றும், பத்திரிகாசிரியர்களின் தவறுகளைச் சரிப்படுத்த சாதாரணச் சட்டப்படியே நடந்தால் போதுமென்றும் மசோதா நிபந்தனைகள் பொதுஜன அபிப்பிராயத்தையும், பேச்சு, பத்திரிகைச் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தி விடுமென்று சொன்னார்கள்.

முடிவில் இம் மசோதா ஸெலக்ட் கமிட்டி யோசனைக்கு விடப்பட்டது இதன் பின் தோழர் கே. அய்யப்பன் சமஸ்தான முக்கிய வைத்திய அதிகாரியின் உறுதி மொழியின் பேரில் கர்ப்பத்தடை முறைகள் வேண்டுவோருக்கு ஆஸ்பத்திரிகள் உதவி செய்ய வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

## மதுரை சுயமரியாதைச் சங்கம்.

### 2வது ஆண்டுவிழா.

நாளது பிப்ரவரி மாதம் 11ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சங்க கட்டிடத்தில் தோழர் முத்துச்சாமி வல்லத்தரசு அவர்கள் பி.ஏ., பி. எல்., எம். எல். சி., தலைமையில் நடைபெறும் பல தோழர்கள் உபந்யாசஞ் செய்வார்கள். காலஞ்சென்ற தோழர் எஸ். ராமச்சந்திரன் அவர்களது உருவப்படத்தை மதுரைஜில்லா போர்டு மெம்பரும்சங்கப் போஷகருமான எஸ். தியாகராஜன் அவர்கள் திறந்து வைப்பார்கள். எல்லா தோழர்களும் விஜயம்செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மதுரை சுயமரியாதைச்சங்க நிர்வாக கமிட்டியின் கூட்டமொன்று 30-1-34 ந்தேதி நடந்தது. பீகார் ஒரிசா மாகாணங்களில் பூகம்பத்தால் சேதமடைந்த ஏழை மக்களுக்கு பணஉதவி செய்யும்படி கோரியும் சென்னை தோழர் ஓ. சி. சீனிவாசன் அவர்களின் அகால மரணத்துக்கு வருந்தி அனுதாபத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. ஜில்லா 2வது சு. ம. மகாநாட்டை பட்டி வீரன் பட்டியில் நடத்த ஏற்பாடு செய்யும்படி சங்கக் கமிட்டி நியமிக்கப்பட்டது.

## ஜோலார் பேட்டை

### ஐக்கிய நாணய சங்க யூனியன் ஸ்தாபிக்கப்பட்டது.

31-1-34ந்தேதி டெப்டிரிஜிஸ்டார் அவர்கள் ஷை யூனியனை ரிஜிஸ்டர் செய்த பிறகு யூனியனுக்கு ஐந்து கவர்னிங்பாடி மெம்பர்கள் தேர்ந்தெடுப்பதற்கு யூனியன் பிரதிநிதிகள் கூட்டம் தோழர் வி. பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்கண்ட ஐவர்களைகவர்னிங் பாடிமெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்களான வி. பார்த்தசாரதி, வஜ்ஜிரவேலு கவுண்டர், முத்தாக்கவுண்டர், ஆறுமுகக்கவுண்டர், திருவெங்கட செட்டியார் இந்த ஐவர்களில் ஏகமனதாக தோழர் வஜ்ஜிரவேலு கவுண்டரை யூனியன் பிரசிடெண்டாகவும் தோழர் வி. பார்த்தசாரதி அவர்களைக்காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டது. ஷை யூனியன் ஆபீஸ் தற்சமயம் தோழர் பார்த்தசாரதி அவர்கள் சொந்த இருப்பிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

## சீர்திருத்த மண அழைப்பு.

நாளது 11-2-34 ஞாயிறு காலை எட்டு மணியிலிருந்து, 9-30 மணி வரையில் சென்னை தோழர் மதுரை அவர்களின் புதல்வனும், "சென்னை சிந்தாதரிப்பேட்டை சுயமரியாதை சங்கத்தின்" அங்கத்தினரில் ஒருவராகிய தோழர் ம. கெங்காதரம் அவர்கட்கும் கீழ்பாகம் காலஞ்சென்ற தோழர் வி.. தனிகாசலம் அவர்களின் குமாரத்தி தோழர்வி. டி. மகாலக்ஷிமி பாய் அவர்கட்கும் விவாக ஒப்பந்தம் நிகழும். தோழர் எம். சிங்காரவேலு தலைமையில் கீழ்கண்ட தோழர்கள் பேசுவார்கள். எல். இராமநாதன், குஞ்சிதம், எல். குருசாமி பண்டிட் எஸ். ஏஸ். ஆனந்தம் - டி. சிவசண்முகம், எச். எம். ஜெகநாதம், எம். எல். சி, எஸ். பி. ஐ பாலகுருசிவம், வித்வான் வி. எ. முனுசாமி ஆர். டி. ஐப்பரக்கண்ணு, நடேசன், சென்னை சுயமரியாதை இளைஞர்மன்றம் காரியதரிசி முதலியவர்கள் பேசுவார்கள் என சிந்தாதரிப்பேட்டை சுயமரியாதைச சங்கக் காரியதரிசி எழுதினார்.

## நாகை சுயமரியாதைச் சங்கம்.

தோழர்களே! தோழர் காந்தி அவர்கள் நாகை விஜயத்தின்போது அவரின் வருகையை சாத்வீகமான முறையில் பகிஷ்கரிக்கவேண்டியது அவசியமாக இருப்பதால் நாளது 8-2-33-ந்தேதி காலை 7-மணிக்கு நாலூகாவில் உள்ள எல்லாதோழர்களும் சங்கக்கட்டிடத்திற்கு வந்து சேரவேண்டுமாய்க் கெட்டுக் கொள்ளப்படுகிறது.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## ஸ்ரீ ராமசாமிக்கு தண்டனை

ராஜத் துவேஷத்திற்காகக் குற்றம் சாட்டப்பட்டு ஸ்ரீ ராமசாமி நாயக்கர் ஆறுமாதம் வெறுங்காவல் தண்டனை அடைந்திருக்கிறார். அவர் தங்கை ஸ்ரீமதி கண்ணம்மாளுக்கு, "குடி அரசை" அச்சிட்டவர் என்னும் முறையில், மூன்றுமாதம் காவல். இருவருக்கும் 300, 300 ரூபாய் அபராதம். ஸ்ரீ நாயக்கர் எதிர்வழக்காடவில்லை. தாம் கொடுத்தவாக்குமூலத்தில்தமது மனோநிலையையும், லட்சியத்தையும் திடமாக வற்புறுத்தினார். கோரியுள்ள லக்ஷியத்தை, மக்களிடம் பரப்பவேண்டுமானால் சர்க்காரோடு போராட்டம்ஏற்பட்டுத்தான்தீரும். இத்தகைய போராட்டத்தில் ஈடுபடுபவர்களை, சர்க்கார் தங்கள் சட்டத்தின் மஹிமைமையைக் காப்பாற்றுவதற்காக, தண்டிக்க வேண்டிவரும். சுதந்திரத்திற்காகப் போராடும் நாடுகளில் இத்தகைய நிகழ்ச்சிகள் சகஜம். ஒரு லட்சிய இயக்கம் வலுவடைவது இத்தகைய எதிர்ப்பினால்தான். இதில் ஒன்று கவனிக்கவெண்டியது "குற்றம்" என்று சர்க்கார் சொன்னதற்கு பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஸ்ரீமான் நாயக்கர் தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். தைரியமும், தீவிர உணர்ச்சியும், கொழுந்து விட்டெரியும் லட்சியமும் கொண்ட ஜனத்தலைவரை தண்டிப்பதில் சர்க்கார் அதிகாரிகளுக்கு மகிழ்ச்சி இருக்குமா? இந்த விசாரணையாலும், தீர்ப்பினாலும் சர்க்கார் கட்சி வலுத்திருக்கிறதா நாயக்கர் லட்சியம் வலுத்திருக்கிறதா? ஓயாத உழைப்பினால் உடல் தளர்ந்திருக்கும் நாயக்கருக்கு இந்த எதிர்பாராத முறையில் கிடைத்த ஓய்வு பயனளிக்கும். ஸ்ரீ நாயக்கரை ஜெயிலில் அடைத்து அவருடைய லட்சியங்களைக் கிள்ளிஎறிந்துவிட லாம் என்று சர்க்கார் நினைப்பார்களானால் அவர்கள் தப்பிதம் அவர்களுக்கே சீக்கிரத்தில் தெரியும்,

[மணிக்கொடி தலையங்கம்.]

---

### தோழர் அ. பொன்னம்பலம்.

கோவில்பட்டி தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டிற்கு கீழ் ஈராலுக்குச்சென்றுவிட்டு29-1-34ந்தேதி காலை புறப்பட்டு மதுரை சிவகெங்கை, திருப்பத்தூர் தெம்மாப்பட்டு, காரைக்குடி, சண்முகானந்தபுரம், கோட்டையூர் வேலுப்பட்டு, திருமயம், புதுக்கோட்டை முதலிய விடங்களுக்குச் சென்று நமது இயக்க எதிர்காலவேலையைக்குறித்து தோழர்களுடன் கலந்து பேசிவிட்டு 31-1-34ந்தேதி இரவு திரிச்சிக்கு வந்து 1-2-24ந்தேதி காலை பூவாளூர் செல்கின்றார். 8-2-34ந்தேதி வரை அவருக்கு எழுதப்படும் கடிதங்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

விலாசம்.

அ. பென்னம்பலம்
C/O மானேஜர் "சுதேசி எம்போரியம்"
பெரிய கடைவீதி,
திருச்சிறுப்பள்ளி.

---

### பூகம்பத்தால் கஷ்டப்படும் மக்களுக்கு உதவி.

ஈரோட்டில் கூட்டம்.

30-1-33-ந் தேதி மாலை ஈரோடு கடைவீதியிலுள்ள டவுன்எலிமெண்டரி பாடசாலை முன்புறத்திலுள்ள மைதானத்தில் பிகார், ஒரிசா முதலிய இடங்களில் பூகம்பம் எற்பட்டு கஷ்டப்படும் மக்களுக்காக ரெவரெண்ட் எச்- ஏ- பாப்பிலி அவர்களின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது- அது சமயம் தோழர்கள் டாக்டர் எம்- கிருஷ்ணசாமி, எஸ்- வி- லிங்கம், ஈ- பி- வெங்கடாசலம், கேசவலால் காளிதாஸ் முதலியவர்கள் பூகம்பத்தால் கஷ்டப்படும் மக்களின் நிலமையைப்பற்றிப் பேசி யாவரும் பொருளுதவி செய்யவேண்டுமென்று பேசினார்கள்- தலைவர் முடிவுரையுடன் கூட்டம்கலைந்தது- இங்கு இதுவரை சுமார் 150 ரூபாய் வரை வசூல் செய்து அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது-

(ஒரு நிருபர்)

---

### ஈரோடு லண்டன்மிஷின் ஸ்கூல் மாணவர் சங்கம்

ஷை சங்கத்தின்கூட்டம் 26-1-34 தேதி மாலை ஷை ஸ்கூலில் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் "இந்தியாவில் சமூக வாழ்வை எப்படி அமைப்பது"? என்பது பற்றி பல மாணவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசும்போது ஜாதி, மதம், மூட பழக்க வழக்கங்கள் முதலியவைகளை ஒழிக்கும் முறைகளை பகுத்தறிவுக் கொத்த முறையில் நாடெங்கும் உபாத்தியார்கள் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று கூறினார்கள். அதை ஆதரித்து தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். பேசினார்கள் தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

---

### தோழர் அ. மாணிக்கம்.

சுயமரியாதை இயக்கத்தைச்சார்ந்த தோழர் அ.பொன்னம்பலம் தம்பியார் தோழர் அ மாணிக்கம் இருமல் நோயால் பீடிக்கப்பட்டு டாக்டர் சிகிச்சை பெற்றுவந்தவர் 1-2-34ந் தேதியன்று காலை 4மணிக்கு பூவாளூரில் உயிர் துறந்தார்.

---

### ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கம்.

#### சிறைசென்ற தலைவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம்.

சென்ற மாதம் 28-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு ஷை சங்க மண்டபத்தில் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்களின் தலைமையில் சிறைசென்ற சுயமரியாதை இயக்கத் தலைவரான தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, எஸ். ஆர் கண்ணம்மாள் ஆகியவர்களைப் பாராட்டுவதற்கு ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள்.

தோழர்கள் கே. எம். பாலசுப்பிரமணியம் பி ஏ பி எல் எ. இராகவன், ஈ- பி- வெங்கிடாசலம், ஈ. வி. கிருஷ்ணசாமி, எஸ்- வி- லிங்கம் முதலியவர்கள் தலைவர்கள் ஏன் சிறை சென்றார்கள்? என்பதுபற்றி மிகத் தெளிவாகப் பேசினார்கள் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 9மணிக்கு கலைந்தது.

(ஒரு நிருபர்)

---

### மகாஜன ஹைஸ்கூல் மாணவர்கள் கூட்டம்

#### தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் சொற்பொழிவு

27-1-34ந் தேதி மாலை ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் விட்டரரி அசோசியேஷன் சார்பில் ஷை ஸ்கூல் சரஸ்வதி ஹாலில் தோழர் ராமகிருஷ்ண ஐயங்கார் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே எம் பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்கள் "இந்திய மாணவர்களின் பிரச்னை" என்பதுபற்றிப் பேசினர் தலைவர் முடிவுரைக்குப் பின் ஷை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் தோழர் மீனாக்ஷி சுந்தரம் பி. ஏ. எல். டி. அவர்கள் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

---

### நாகை சுயமரியாதைச் சங்கம்.

#### போலீஸ் சூப்ரெண்டு அறிவுப்பு.

சு. ம. சங்கத்தலைவர் தோழர் எஸ். பி. கிருஷ்ணன் அவர்களும் வி. சாமிநாதனும் இன்று காலை 11மணிக்கு போலீஸ் டிப்டி சூப்ரென்டெண்ட் அவர்களின் அழைப்பிற்கிணங்க காடம்பாடியிலுள்ள பங்களாவுக்குச்சென்றார்கள். டிப்டி சூப்ரெண்ட் அவர்கள் காந்தி வருகைசம்பந்தமாக எங்குமில்லாத கிளர்ச்சி இங்கு நடப்பதாகவும் இதனால் இரு தரப்பார்களுக்கும் எங்கு சண்டை மூண்டு விடுமோ வென நினைப்பதாகவும் தனிப்பட்ட முறையில் ஒருவரை யொருவர் தாக்காமல் காங்கிரஸ் காரர்—சுயமரியாதைக்காரர் இருவரும் தங்கள் தங்கள் கொள்கையைப்பற்றி பொதுவாகஎடுத்துச்சொல்வதைப்பற்றி தாங்கள் கவலைப்பட வில்லை யென்றும் எச்சரித்தார். அதற்கு சுயமரியாதைத்தோழர்கள் இருவரும் தங்கள் இயக்கத்தின் லக்ஷியத்தை விளக்கியும் இதுவரை ஞாய வரம்புக்கு மீறி ஒன்றும் செய்ததில்லை. செய்யப்போவதுமில்லை யெனக்கூறி விடைபெற்று திரும்பினார்கள். (நமது நிருபர்)

---

### பொன்மலை சுயமரியாதைச் சங்கம்.

5-2-34 ந்தேதி மாலை சங்கத்திடலில் புதுக்கோட்டை தோழர் முத்துச்சாமி வல்லத்தரசுபி ஏ., பி எல். எம். எல். சி. அவர்கள் தலைமையில் காந்தி பகிஷ்காரப் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் திருச்சி தோழர் எஸ். நீலாவதி அம்மையாரும் மறறும் பல தோழர்களும சொற்பொழிவாற்றுவார்கள்.

---

### திருப்பத்தூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டை திருப்பத்தூரில் பிப்ரவரி மாத இறுதியில் நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றது. மகாநாட்டு வரவேற்புக்கழக அமைப்புக்கூட்டம் 10-2-34ந்தேதி சனிக்கிழமை மாலை 4மணிக்கு தெம்மாப்பட்டு சமதர்ம செந்தமிழ்கலாசாலையில் நடைபெறும் தோழர்கள் அ. பொன்னம்பலம், ப. ஜீவானந்தம், ராம சுப்பையா முதலியவர்களும் விஜயம் செய்வார்கள் இத்தாலூக்காவிலுள்ள சங்கத்தார்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்குமாறு வேண்டுகிறோம்.

விலாசம்:—

தோழர் சி. முருகையா,
சமதர்ம செந்தமிழ் கலாசாலை
தெம்மாப்பட்டு திருப்பத்தூர்,
(இராமநாதபுரம் ஜில்லா.)

---

### துடுப்பதி செங்குந்த வாலிபர் சங்கம்.

ஷை சங்கத்தின் 5-வது ஆண்டு நிறைவுவிழா, திங்களூர் அப்பிச்சிமார் மடம் மடாதிபதி தோழர் எம். ஏ. ஆண்டமுத்துக் கவுண்டர் அவர்கள் தலைமையில் நாளது 9-2-34 உ வெள்ளிக்கிழமை துடுப்பதியில் நடைபெறும் அதுசமயம் பல அறிஞர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள் என காரியதரிசி அறிவிக்கிறார்.

# மணவாழ்க்கையும் — மாதர்களடிமைத்தனமும்.

(மருர் தோழர் டி. கிருஷ்ணசாமி)

பண்டைகாலம் தொடங்கியே எளியாரை வலியார் அடக்கி ஆண்டு, அவர்களை எளியாரை சாசுவத அடிமைகளாகக்கொண்டு சுய நலமிகள் தன்னலத்தைப் பெருக்கிக் கொண்டு வந்தனர். வலியாராகிய சுயநலப்புலிகள் எளியாரை எவ்வெவ்வகையில் அடக்கலாமோ அவ்வவ்வகைகளில் அடக்கி, எளியார் பிற்காலத்திலும் முன்னுக்கு வாராதவாறு வேண்டிய சட்ட திட்டக்கட்டுப்பாடுகளாலும், சமய சாஸ்திர (மனு)நீதி முதலிய கொடுங்கயிறு கொண்டு குண்டு கட்டாய்க் கட்டி வெள்ளம் வருமுன் அணைகோலிக் கொண்டனர்.

ஆயினும் மக்களின் அறிவு வளர வளர மக்களில் பலர் சுயமரியாதையையும், சுதந்திரத்தையும் உணரலாயினர். ஆங்காங்கு கிளர்ச்சிகளும் செய்தனர். எனினும் வலியார்களின் ஆதிக்கத்தில் கிளர்ச்சிகள் பூரண பலனைக்கைப்பற்ற முடியாமற்போயிற்று. ஆனால் தன்னல உணர்ச்சி பலப்பட்டுக்கொண்டேவந்து, அநேக இயக்கங்கள் தோழர் ஈ. வெ. ராமசாமியார் போன்ற அஞ்சா நெஞ்சமும் ஆற்றலும் ஒருங்கே அமைந்த பெரியார்களைத் தலைவர்களாகக் கொண்டு தோன்றுவதாயின. அவ்வியக்கங்கள் அறிவாளிகளின் ஆதரவைப் பூரணமாய்ப்பெற்று தலைவர்களழிந்தாலும் தாமழியாதனைகளாய் உரம் பெற்றுவிட்டன. இனி அவைகளை அசைத்துப் பிடுங்கி எறிய வலியார்களெனப்படும் சுயநல முதலாளிகளால் முடியாது என்பதும் திண்ணம்.

பண்டைநாளில் ஆண்கள் என்று கூறப்படும் அகம்பாவமும் சுயநலகருத்தும் கொண்ட ஒரு சாரார் பெண்களைக் கேவலம் மிருகத்திலும் தாழ்வாய் எண்ணி நடத்தி வந்தனர். பெண்கள் அடிமைமையாயிருந்து ஆண்களுக்குக் குற்றேவல் புரியவும், சிசுக்களைஈன்று சம்ரக்ஷணைப் புரிவதும், ஆண்களின் காமஇச்சையை நிறைவேற்றும் கருவிகளாகவும் இருக்கவே பிறந்தாக ஆண்கள் எண்ணிவந்தனர். ஒரு பெண்பலே விவாக பந்தத்தால் ஆண்மகனுக்கு அடிமைப்படுத்துவதை வழக்கமாகக் கொள்ளலாயினர். இதை முன்னிட்டு அநேக கட்டு திட்டங்கள் மதத்தின் பேராலும், சாஸ்திரத்தின் பேராலும் ஏற்படலாயின.

ஆனால் விவாகமென்பது பலவித அலங்கார அர்த்தங்களைக் கொண்டு விளங்கியது. 'சதிபதிகள் சந்தோஷ காலத்திலும் துக்க சமயத்திலும் ஒருவருக்கொருவர் துணையாய் நின்று வாழ்க்கை நடத்துவதாக சம்மதித்து ஒப்பந்தம் பல பேர்களின் முன்னிலையில்செய்துக்கொள்வதே" விவாகம் என்பதாகும். "வாழ்க்கைத்துறையில் ஏற்படும் சகல நன்மைத்தீமைகளிலும் இருவருக்கும் சுதந்திரமும், பங்குமுண்டு என்பதுதான் அதன் நோக்கமாகும்." என்றும் கூறிப்பெண்களை ஏமாற்றி வரலாயினர். ஆனால் மேற்கூறிய பொருள்கள் நடைமுறையில் எவ்வளவுதூரம் உண்மை என்பதை நேயர்களின் ஆலோசனைக்கு விட்டுவிடுவோமாக.

விவாகத்தினால் ஒரு பெண் சுதந்திர வாதியாகி விட்டதாயும், இன்பத்தை அனுவிப்பதாகவும் குடும்பத்தை நடத்தும் தலைவியாகி விட்டதாயும் தன்னை நினைத்துக்கொள்ளுகிறாள். (ஆனால் அறிவும், அநுபோகமும் நிறைந்த பெண்கள் அவ்வாறு நினைத்துக் கொள்ள மாட்டார்கள்.) ஆனால் அவள் உண்மையில் விவாகத்திற்குப் பிறகுதான் முற்றிலும் அடிமைத்தனத்தில் அமிழ்த்தப்பட்டவளாகிறாள். கொஞ்சம் அறிவும், நற்குணமும் வாய்ந்தவன் புருஷனாக வாய்ப்பின் அவளின் வாழ்நாள் சிறிது சந்தோஷமாகக் கழியும். ஆனால் அவன் மூடனாயும், கொடியவனாயும் இருந்தால் அந்தோ அந்தப் பெண்ணின் கதியை யாரோ நினைக்க வல்லார்! எனவே ஒரு பெண் தனக்கு இஷ்டமான புத்திசாலிக்கணவனை வரித்துக்கொள்ள விரும்புவது இயற்கை. இதற்காவது பெண்களுக்கு சுதந்திரம் உண்டாஎன்று பார்த்தால் இவ்விஷயத்தில் தான் அவர்களுக்கு அடியோடு சுதந்திரமில்லாமல் போகிறது. பெண்களின் விவாக விஷயம் மற்றோர்களினுடையவும் பந்துக்களினுடையவும் (பந்துக்கள் என்றால் பெண்பாலரைத் தவிர்த்து) புருஷனுடையவும் இஷ்டத்தைப் பொருத்தது. பெண்கள் இதைப்பற்றி வாய் திறக்கவும் கூடாது. அவர்கள் ஒரு பாழுங்கிணற்றில் பிடித்துத்தள்ளினாலும் விழுந்தேயாகவேண்டுமாம். என்னே இவர்களின் மதியீனம்!

பழைய காலத்து மனைவியின் விசீரத்தைப்பாருங்கள்! அம்மான் மகளை அத்தைமகன் அவசியம் மணம் செய்து கொள்ள இஷ்டப்பட்டால் (பெண் இஷ்டப்பட்டாலும் படாவிட்டாலும்) செய்துக்கொண்டே தீருவான். பெற்றோர்கள் கூட (பெண்ணின் பெற்றோர்) இதைத்தடுக்க முடியாது. இதற்குத்தான் 'அம்மான் சுதந்திரம்' என்று பெயராம். மாப்பிள்ளை சர்வமுட்டாளாயும், ஒருகண் பொட்டையாயும் அனுமானைவிட (ஆரியர்கள் வருணிக்கும் அனுமான்) அழகில் சிறந்த வனாயினும் இருந்தாலும் பெண் அத்தைமகனாகிய மேற்படி மாப்பிள்ளையை வரித்தே தீரவேண்டுமாம். அவளுக்கு வேண்டாமென்று தடுக்க கடுகளவு பாத்தியமும் கிடையாது. "ஏனையா அத்தை மகனை வரித்தால்தான் வரிததபடியா? வேறுயாரையாவது வரித்துக்கொள்வதினால் என்ன கெடுதி? அத்தை மகன் வேறு பெண்ணை மணந்து கொள்ளுகிறார்"—என்று நாம் ஆட்சேபித்தால் வந்து விடுகிறதையா கோபம் பிடுங்கலுக்கு!

அத்தைமகன் என்ற சுதந்திரத்திற்காக பெண்ணின் இஷ்டத்திற்கு விரோதமாக விவாகம் முடித்து அதனால் பல பெண்கள் துயரமடைந்து வருவதை நாம் நேரில் கண்டும் அவர்களுக்குப் பரிந்து பேசாமலிருக்க முடியவில்லை. எங்களூரில் இத்தகைய சம்பவம் ஒன்று நடந்தது இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு பணக்காரர் அவருக்கு அருமந்த பெண் ஒன்று உண்டு. அது நன்றாய் வாசிக்கவும், எழுதவும் கூடிய திறமைப் பெற்றது. சிவந்த அழகிய நிறம், அழகும், தேகதிடமும் ஒருங்கே வாய்ந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அப்பெண்மணியின் குணம் மிகவும் மெச்சத்தக்கது. சுயமரியாதையின் பெருமையை நன்குணர்ந்தது. சிறந்த ஒழுக்கத்தையுடையது. இத்தகைய மாதுக்கு ஓர் அத்தையுண்டு. அத்தையின் புத்திரர்கள் நால்வருண்டு. அத்தையம்மாள் கருநாடகப் பயித்தியம். தன் இரண்டாவது குமாரருக்கு அந்த மங்கையை வரித்துக்கொள்ள விரும்பினார். பெண்ணின் பெற்றோர்களுக்குச்சம்மதமேயில்லை. பெண்ணுக்குப் பிரியம் குதிரைக் கொம்புதான். மணக்க முடியாதென்று கண்டிப்பாய் கூறிவிட்டது. பந்துக்கள் எல்லாம் அத்தையம்மாள் பக்கம் சேர்ந்து விட்டனர். பெண்ணின் பெற்றோர்களிடம் சென்றனர். "ஐயோ! இதென்னநியாயம்? எந்த விட்டாலும் சுதந்திரத்தை விடமுடியுமா? பிறந்த பெண் மனம் எறிந்தால் ஏழேழு கோத்திரத்தையும் தாக்குமே" என்று பலவாறு பாடம் போட்டு வலியக் கட்டாயமாய் மணம் முடித்துவிட்டனர். அவ்வளவுதான். வருடமும் ஆறுக்குமேல் ஆகிவிட்டது. ஐயோ! புருஷன் முகம் எப்படி இருக்குமென்று கூடமனைவிக்குத் தெரியாது. ஒருவார்த்தையும் பேசியதுகிடையாது. ஒழிந்தநேரம் எல்லாம்புஸ்தகமும், கையும் தான். புத்திசாலிததனமும்—தைரிய முடையதும்—ஸ்திரபுத்தியுமுடையதாகையால் பெண் புஸ்தகம் படித்தின்பம் நுகர்வதே போது மென்று திருப்தியடைந்திருக்கிறது. தன் நாட்டின் மூடப்பழக்கத்தினால் ஏற்பட்ட அவகேட்டை நினைந்து நினைந்து உருகியபடியே காலம்கழிக்கிறது. இப்பொழுது புரட்சியைப்படித்தின்புறுகிறது. ஆயினும் மூடக்கொள்கைக்காரர்களாகிய சுற்றத்தாரின் கட்டுப்பாட்டை மீறி சுதந்திரமடையப் போதுமான தைரியம்மட்டும் அதற்குக் கிடையாது. இருபத்திமூன்றே வயதினையுடைய இக்காரிகையின் துயரம் எத்தகையதாயிருக்குமென்பதை நேயர்கள் உணர்வார்களாக. மூடபக்தியும், குருட்டுநம்பிக்கையாகிய கடவுள் நம்பிக்கையும் நிரம்பிய பெண்ணின் தாயாராகிய என் உறவினர் சீட்டுக்கட்டுவதிலும்—பிரார்த்தனை செய்வதிலும் விபூதிப் பிடிப்பதிலும், மணம்பூண்டி முருகர்கோவிலுக்கு மாதாமாதம் கிருத்திகைக்குச் சென்று பரதேசிகளென்றும், சாமியார்களென்றும் கூறிக்கொள்ளும் சோம்பேறித் தடியர்களுக்குப் பிண்டம் கொட்டுவதிலுமாக வேண்டிய பணத்தைக் தாராளமாகச் செலவு செய்தார்—செய்கிறார்—செய்வார். என்ன செய்தும் பலன், அத்திப்பூதன்.

தோழர்களே சுதந்திரமென்றால் அத்தைமகனுக்கு மாமன் மகளை அவளிஷ்டமின்றி மணப்பதற்குண்டாகிய பாத்தியமல்ல. அது அகம்பாவமும் அநியாயமுமான சுதந்திரமாகும். நியாயமாக பெண்களுக்கு வேண்டிய சர்வசுதந்திரத்தையும் திருடிக்கொள்ளாதீர்கள் அவர்களுக்கு, உங்களுக்கு நீங்கள் வேண்டுமென்று விரும்பியிருக்கிற, சுதந்திரத்தைக் கொடுக்கப் பின் வாங்காதீர்கள்.

சகோதரிகளே! பெற்றோர்களுக்ென்றும்—பந்துக்களுக் கென்றும் பயந்துக்கொண்டு உங்கள் சுதந்திரங்களை விட்டுக்கொடாதீர்கள். உங்கள். சுதந்திரத்திற்காக முன்வந்து போராடி அதைக்கொள்ளுங்கள்.

## திருநெல் வேலி வள்ளுவர் வாலிபர் சங்கம்.

திருநெல்வேலி ஜில்லா வள்ளுவர் வாலிபர் சங்கத்தின் கூட்டமொன்று கோவில்குளம் தோழர் திருமலைக்கொழுந்து அவர்கள் வீட்டில், இடைகால் தோழர்எஸ். தானியேல் ஞானமணி உபாத்தியாயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பேட்டை தோழர் சி. இசக்கி அவர்கள் சமதர்மக் கீதம் பாடினார்கள். தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் பி. ராமசுப்பு (ரைட்டர்) அவர்கள் முன்னேற்றமும், நமது கடமையும என்பது பற்றியும், தோழர்களான பி. சங்கரன், ராஜமணி, பி. ஆறுமுகம், பி. குழந்தைவேல், என். டானியேல் முதலியவர்கள் சுகாதாரம், சங்கம், கடமை, மூடநம்பிக்கை முதலிய விஷயங்களைப்பற்றியும் பேசிய பின்நம்சமூகத்திலுள்ள இளைஞர்கள் யாவர்களும் சேர்ந்து ஒற்றுமையாய் சங்கத்தைநடத்த உதவிபுரிய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறது என்ற தீர்மானத்தை செய்து தலைவர் முடிவுரையுடன் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது. எனன்ரியதரிசி எழுதுகிறார்.)

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

க்குக்கொடுத்தும், பாங்கியில் போட்டும் பணத்தைக் குவித்துக்கொண்டே போகின்றனர். கேட்டால் இஸ்லாமிய ராஜ்யமானால் குர் ஆன் கட்டளைப்படி ஜக்காத் வசூலிக்கப்பட்டு நேரான முறையில் ஏழைகளின் துயத்தை நீக்க விநியோகிக்கப்படும் என்கின்றனர்கள்.

என்ன! பிரிட்டிஷ்ராஜ்யம்ஜக்காத் வசூலிப்பதையும், அதை முஸ்லிம் ஏழைகளுக்கென்று விநியோகிப்பதையும் தடுக்கின்றதா? முஸ்லிம்கள் ஜக்காத் மசோதா ஒன்றை கொண்டு வந்து அதை நிறைவேற்றிக் கொண்டு அதை வசூலித்து விநியோகிக்க ஒரு இலாகாவை தன் சொந்த செலவில் உண்டாக்கிக்கொண்டு, அதன் மூலமாக வசூலித்து கஜானாவில் சேகரித்து வைத்துக்கொண்டு முஸ்லிம்களின் ஏழைகளின் முற்போக்குக்காக செலவு செய்வதைத் தடுக்குமா? அல்லது இதர சமூகத்தினர் தலையிடுவார்களா? இல்லை. ஆனால் முஸ்லிம் முதலாளிகளுக்கு மனமில்லை. அவர்களேதான் இந்த 'ஜக்காத் மசோதா' வந்தால் எதிர்ப்பார்கள்! என் சுயநலம்! சுயநலம்!! சுயநலம்!!! மேலும் தான் தோன்றிகளாகவிருந்துகொண்டு தங்கள் பிரக்யாதிக்காகவும், ஏழைகள் ஏழைகளாகவே இருந்து தாங்கள் என்றும் பணக்காரர்களாகவே இருக்கவும் இவர்கள் பிரியப்படுகின்றார்கள் என்றாலும் இவர்கள் முஸ்லிம்கள் தான்!

நாளைக்கு ஒரு "லெனின்" இந்தியாவில் தோன்றினால் இவர்கள் எங்கே இருப்பார்கள்? என்று கேட்கின்றேன். இவர்கள் ஏழைகளுடன் மூட்டை தூக்குவார்கள், சோம்பினால் பட்டினி கிடப்பார்கள், பாடுபட்டால்தான் பசிதீர உணவு அளிக்கப்படும். முதலாளிகளே! ஏழையின் துயரை நீக்க ஏழை விகிதத்தைக் கொடுத்துவிடுங்கள்.

---

(6-பக்கத் தொடர்ச்சி)

நடை முறை.

1. தற்கால நாடக உலகில் காணப்படும் குறைபாடுகளை நீக்க கீழ்க்காணும் முறைகளைக் கையாடுதல்.

(அ) தற்கால நாடக மேடைகளிலுள்ள குறைபாடுகளை பத்திரிகைகள் வாயிலாகவும், பிரசங்கங்கள் வாயிலாகவும் எடுத்துக்காட்டி அவை சீர்பெறுவதற்கான முறைகளையும் விளக்குதல்.

(ஆ) சீர்திருத்த நாடகங்கள் எழுதி வெளியிடுதல். பத்திரிகை நடத்துதல்.

(இ) மேற்படி நாடகங்களை இச்சபையின் அங்கத்தினர்களைக் கொண்டு நடித்தல்.

(ஈ) மேற்கண்ட நாடகங்களை தற்கால நாடக உலகில் பிரக்கியாதி பெற்றுள்ள நடிகர்களைக்கொண்டு நடிப்பிக்க ஏற்பாடு செய்தல்.

2. இச்சபையின் ஆதரவில் நடிக்கப்பெறும் நவீன நாடகங்களுக்கு இன்றியமையாத உடைகளையும், சீன்களையும், பக்க வாத்தியங்களையும் தயார் செய்தல்.

பொருள் வருவாய் முறை.

1. சபாவின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் மாதசந்தா நான்கணா செலுத்துதல்.

2. நன்கொடை பெறுதல்.

3 சபாவின் ஆதரவில் நாடகங்கள் நடத்தும், பிரபல நடிகர்களைக் கொண்டு நடிப்பித்தும் செலவு போக எஞ்சிய தொகையை சபாவின் பண்டுக்குச் சேர்த்தல்.

நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர்கள்.

கௌரவ ஆதரிப்பாளர்கள்.

1. தோழர்கள், ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயர் அவர்கள் புதுவை,

2. ராவ்பகதூர் பி. சம்பந்தம் பி. ஏ. பி. எல்., சன்னை.

தலைவர். டாக்டர் பி. வரதராஜுலு அவர்கள், தமிழ்நாடு ஆசிரியர், சென்னை.

உபதலைவர்கள். பி. எஸ். வேலு நாயர், கும்பகோணம். பாஸ்கரதாஸ், மதுரை. பி. சிதம்பரம் பி ஏ. பி. எல்., எம். எல். ஏ. நாகர்கோவில். கே. எல். அனந்தநாராயண அய்யர், சென்னை. கே. எம் பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்., சென்னை.

காரியதரிசிகள். பாரதி தாசன், புதுவை. கி. ஆ. பெ. விஸ்வநாதம், திருச்சி. ஆர். கிஸன், கோவை. ஏ. சித்தையன், சேலம்.

கமிட்டி அங்கத்தினர்கள். தோழர்கள். ப. ஜீவானந்தம், டாக்டர் எம். பாலு, திருச்சி. எம். எம். சிதம்பரநாதன் மதுரை, சின்னமணி பாகவதர் விருதுநகர், எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி. சென்னை, சாமி சிதம்பரனார் பாபநாசம், சி. ஏ அய்யாமுத்து திருப்பூர், குப்புசாமி கே. ஜி. எப். தங்கவயல், எஸ். நடராஜன் மேலூர், எம். ஜி. நடராஜன் மன்னார்குடி, சி. நடராஜன் மாயவரம், கே. பி. சுந்தராம்பாள் கொடுமுடி, டி. என். நடராஜன் சென்னை, டி. எஸ். சொக்கலிங்கம் காந்தி ஆசிரியர் சென்னை, எஸ். டி. சுப்ரமணிய யோகி ஈரோடு, எதிராஜன் முத்தனேந்தல், எஸ். எஸ். விஸ்வநாததாஸ்.

அ. இரத்தின சபாபதி,
அமைப்பாளர்.

---

## காஞ்சீபுரம்

28-1-34ந் தேதி இரவு 7-மணிக்கு காஞ்சீபுரம் தாமல்வார் வீதி சமதர்ம சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவின் கீழ் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாகப்பேசியதின் சாரமாவது உலகத்திலிருக்கும் சகல தோழர்களும் சமதர்மத்திட்டங்களையே ஆதரிக்கமுன்வர வேண்டும். சமதர்ம வாதிகள் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையுடன் சட்டசபை ஸ்தலஸ்தாபனங்களைக் கைப்பற்றி. அதன் மூலம் சகல தோழர்களுக்கும் சமதர்ம சுயமரியாதை நாஸ்திக தத்துவங்களை போதிக்கவேண்டும். தோழர் காந்தியவர்களையும், காங்கிரஸ் காரர்களையும், பார்ப்பனர்களையும் அடியோடு பகிஷ்கரிக்கவேண்டும். கிராமங்களிலேயே கிராமத் தோழர்களுக்கு சமதர்ம சுயமரியாதை நாஸ்திக தத்துவங்களை அதிதீவிரமாகப்போதித்தாகவேண்டும். என பேசிமுடித்தார் பின்பு தோழர் நிருவேங்கிடம் அவர்கள். சுயமரியாதையும், சீர்திருத்தமும் என்ற விஷயத்தைப் பற்றி பேசினார். தலைவரவர்கள் முடிவுரையாக தோழர்களான ஈ. வெ. ராமசாமி அவர்களையும், எஸ்ஆர். கண்ணம்மாளவர்களையும். பாராட்டி பேசியதோடு சில தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது. (ஒரு நிருபர்)

---

## ஏமப்பள்ளி ஆதிதிராவிட இளைஞர் சங்கம்.

21-1-34 மாலை 5மணிக்கு இவ்வூர் பாடசாலைக்கட்டிடத்தில் திருச்செங்கோடு தாலூக்கா ஆதிதிராவிடர் சங்க உபதலைவர் தோழர் கே. எஸ். கந்தசாமி அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று.

கூட்டத்திற்கு இளைஞர்களும், பெரியோர்களும், பெண்களும் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். அக்கிராசனர் முடிவுரையாக, 'பகுத்தறிவு' 'மூடநம்பிக்கை' 'பழைய வழக்கங்கள்' 'ஆதிதிராவிடர்களும், தேர்திருவிழாக்களும்' என்பது பற்றி பேசினார்.

பின் "கல்வி" என்பது பற்றி வி. ஷண்முகம் அவர்கள் பேசினார். சங்கத்தின் நோக்கம் வாராவாரம் ஞாயிற்றுக்கிழமை மாலையில் கூடுவதாகவும், பகுத்தறிவு அபிவிருத்தியை இளைஞருக்கு, ஊட்டி, கல்வி விருத்தியை அதிகப்படுத்துதலும்,

சங்கத்தலைவர்:— தோழர் வி. ஷண்முகம்.
காரியதரிசி:— வி. வில்லியம்.
பொக்கிஷதார்:—சீனிவாசன்.

மற்றும் நிர்வாக மெம்பர்களைத் தேர்ந்தெடுத்த பின் அக்கிராசனரின் முடிவுரைக்குப் பின் கூட்டம் கலைந்தது.

---

## புதுப்பாளையம் சுகாதாரவாரக் கொண்டாட்டம்.

22-1-34 காலை 9மணிக்கு போர்டு ஆண் பாடசாலையில் சுகாதாரவாரக் கொண்டாட்டம் ஆரம்பமாயிற்று. குழந்தைகளுக்குப்பரிசு வழங்கப்பட்டது. பின் ஷை கொண்டாட்டம் மாலை 3 மணிக்கு தோழர்எம். பி. ரங்கசாமி ரெட்டியார் எம். எல். ஸி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் பி. ஆர். குப்புசாமி, முத்துராம (தாலூக்கா போர்டு மெம்பர்கள்) ஏ. சுப்ரமணியம் (டாக்டர்) மற்றுமுள்ள பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

பின்னர் ஆண் பாடசாலை மாணவர்களால் சுகாதார சம்பாஷணை, பாடல்கள், டிராமா முதலியவைகள் விமரிலசையாக நடைபெற்றது. மாலை 5மணிக்கு பெண் பாடசாலை மாணவிகளால் பந்தைய விளையாட்டுகள் நடைபெற்றது.

23-1-34 காலை 9 மணிக்கு பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் எஸ். குப்புசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் ஷை கொண்டாட்டம் நடைபெற்றது. அது சமயம் ஆண் பாடசாலை மாணவர்களாலும், பெண் பாடசாலை மாணவிகளாலும் ஆதிதிராவிட பாடசாலை மாணவர்களாலும் பந்தய விளையாட்டுகள், பாடல்கள் சுகாதார சம்பாஷணை ஆதிதிராவிட பாடசாலை மாணவிகளாலில் பாடல்கள் நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப்பரிசுகள் வழங்கப்பட்டது.

---

## புத்தூர்.

### திருச்செங்கோடு தாலூகா புத்தூர் ஆதிதிராவிட பெற்றோர்கள் சங்கம்.

புத்தூர் ஆதிதிராவிடர்களின் பொது மைதானத்தில் 27-1-34 தேதி சனிக்கிழமை இரவு 8-30 மணிக்கு அவ்வூர் மிராசுதாரரும், பொதுநல ஊழியருமாகிய தோழர் ஆர் குப்புசாமி அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. சுமார் 200-க்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் குழுமியிருந்தார்கள்.

தலைவர் தோழர் ஆர். குப்புசாமி அவர்கள் முகவுரை பிரசங்கமாக, பெற்றோர்கள் சங்கம் என்பதை விளக்கியும், அப்பெற்றோர்கள் இனியும் மக்களுக்கு நாம் செய்யவேண்டிய முக்கிய கடமையும் என்பதாக நீண்ட நேரம் தெளிவான முறையில் சொற்பொழிவாற்றினார்.

பின்பு பி. ராஜலிங்கம் கல்வி என்பதைப்பற்றியும், தோழர் கே. இராமசாமி அவர்கள் நமது ஜாதி முன்னேற்றம் என்பதுபற்றியும், தோழர் கே. மாரிமுத்து அவர்கள் நமது ஒற்றுமை என்பதுபற்றியும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்கள்.

பிறகு கீழ் கண்டவர்களை நிர்வாக சபைத்தேர்ந்தெடுக்கப்பட்டது.

(1) தலைவர் தோழர் ஆர். குப்புசாமி, (2) துணைத்தலைவர் தோழர் வி. பெரியண்ணன்; (1) காரியதரிசி தோழர் கே. மாரிமுத்து, (2) துணைக்காரியதரிசி தோழர் எஸ், இராமசாமி அதற்குமேல் நிர்வாக சங்கத்தினர்களும், தேர்ந்தெடுத்தபின் தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் கே. மாரிமுத்து வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

(ஒரு நிருபர்)

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

மகாநாடு போன்ற மகாநாடுகளே பல கூட்டப்பட வேண்டியது மிக அவசியம். அம்மாதிரி அடிக்கடி மகாநாடுகளைக் கூட்டி மக்களுக்கு உணர்ச்சி உண்டாக்காமலிருப்பது பெரும் குறையாகும். ஒவ்வொரு வீட்டிலும் சுயமரியாதைக் கொள்கையைப் புகுத்தப்பட வேண்டும். திருநெல்வேலியில் 5 ஜில்லா மகாநாடுகள் கூட்டியாய் விட்டதென்றாலும். இதுபோன்ற தாலூகா மகாநாடுகள் தான் மிக நலம் பயக்கு மென்று கூறுகின்றேன். தவிர நமது இயக்கத்திற்கு ஆங்காங்கே நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும் ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி ஷை கிளைச் சங்கங்களை நடத்து விக்க ஓர் பொதுச் சங்கமும் ஏற்படுத்தி இப்பொழுது நாம் சொல்லிவருகிற கொள்கைகளைத்திட்டமாகப்போட்டு இது சம்பந்தமாக வரும் காரியங்களை மிகப் பொறுப்போடு கவனித்து வரவேண்டியது மிக அவசியமாகும். மேலும் ஷை ஸ்தாபனங்கள் ஏற்பட்டால் நீங்கள் சுயமரியாதை இயக்கத்திற்கு எந்த அளவு பயனுள்ள வேலைகளைச்செய்தீர்கள் என்பது தெற்றென விளங்கும். உங்களுடைய சக்தியை அறிவதற்கு நீட்டுக்கல் போல் இருப்பது ஸ்தாபனந்தான் என்பதை உணரவேண்டும். அந்த மாதிரி ஸ்தாபனம் நம்மிடம் இல்லாததால் தான் பொறுப்பு குறைகிறது. சுயமரியாதை இயக்கத்திற்கு ஷை ஸ்தாபனங்கள் அமைக்காவிடில் பலப்படுத்த முடியாதென்பது எனது அபிப்பிராயம். இத்தேசத்தை சுமார் 2000 ஆண்டுகள் பிரர் ஆண்டு வந்திருக்கிறார்கள் ஆனால் போதிய அறிவு இன்னும் கிடைக்கப் பெறவில்லை. மக்களுக்குள் உயர்வு, தாழ்வு, வித்தியாசம் மறையவில்லை. ஒற்றுமை உணர்ச்சி இல்லை. நல்ல முறையில் கல்வி புகட்டப்படவில்லை என்பதை தெரிந்திருக்கிறோம். அகவே அக் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். விஞ்ஞான சாஸ்திரம் படித்திருந்தால் மற்ற நாடுகளுடன் நாமும் ஒத்து வந்திருப்போம அவ்வித மில்லாது நமது வாழ்க்கைப்பொழுது பூராவும் மூடப்பழக்க வழக்கத்திற்கு ஆளாகி அடிமைப்பட்டு விட்டோம். இந்தியாவில் சரிபாதி 17கோடி பெண் மக்களும் பலகோடி வாலிபர்களும் ஒரு வேலையும் செய்யாதவர்களாய் விட்டது வருந்தத் தக்கதாகும். இதை அவர்கள் உணரும்படி செய்ய வேண்டியது நமது இயக்கத்தின் முக்கிய வேலையாக இருக்க வேண்டும். எனக்கு வாசித்தளித்த வரவேற்புப் பத்திரத்தில் நான் ராஜவம் சத்தைச் சேர்ந்தவன் என்று கூறப்பட்டிருக்கிறது. ராஜவம் சம் என்று சொல்லிக்கொள்வது ஒரு இழிவான விஷயமாகும். ஆதலால் இம் மாதிரியான வார்த்தைகளை நாம் புறக்கனிக்க வேண்டும். மனிதனில் உயர்வு தாழ்வு கற்பிப்பதைப்போல் மக்களுக்கு ஏற்படும் அனர்த்தம் வேறு ஒன்று வேண்டாம். இது ஒன்றிருந்தால் அதுதானே எல்லாவற்றையும் ஆக்கிக்கொள்ளும். ஆகவே நாம் அம் மாதிரி வித்தியாசங்களைப்போக்க வேண்டுமெனக் கூறி மகாநாட்டின் மத்தியான நிகழ்ச்சியை இத் தோடு நிறுத்தி மீண்டும் 3மணிக்கு ஆரம்பிக்க வேணடுமென்று கூறி உங்களுக்கு வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

பகற்போஜனம்.

மகாநாட்டின் சார்பில் தயாரிக்கப் பெற்றிருந்த உணவு மகாநாட்டுப் பந்தலுக்கு அருகாமையிலிருந்த கட்டிடத்தில் மிக வசதியோடு அளிக்கப் பட்டது. பிறகு மாலை 3 மணிக்கு மீண்டும் மகாநாடு துவங்கிற்று. பல தோழர்கள் சமதர்மக் கீதங்கள் முழக்கினார்கள். பின்பு தலைவர் தாம் அவசரமாக செல்ல வேண்டியதை முன்னிட்டு தலைவர் முடிவுரையாக பல சமதர்மக் கொள்கைகளை கூறி மகாநாட்டு முதல் நாள் நிகழ்ச்சியைமாலை 4மணிக்கு முடித்ததும் தோழர் ராம சுப்பிரமணியம் அவர்கள் சுமார் ஒரு மணிநேரம் "பகுத்தறிவு" என்பதைப்பற்றியும், தோழர் எஸ். நீலாவதி அவர்கள் சுயமரியாதை இடக்கம் என்பதைப்பற்றி ஒரு மணி நேரமும் விளக்கமாகப் பேசினார்கள். பின்பு மாலை 6மணிக்கு தோழர் கே. முத்துச்சாமி வல்லத்தரசு அவர்கள் புதுக் கோட்டைக்கும் தோழர்கள் நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள் தங்கள் குழந்தை உடல் நலிவு காரணமாய் அவசரமாய் திருச்சிக்கும் இரவு 8 மணிக்கு கோவில்பட்டியிலிருந்து புறப்படும் செங்கோட்டை பாசஞ்சர் வண்டியில் புறப்பட்டார்கள். கீழ் ஈரால் கோவில் பட்டியிலிருந்து சுமார் 12 மைல்கள் இருந்தும் 4, 5 தினங்கள் மழை காரணமாய் ரஸ்தா சீர்கேடுற்றிருந்தாலும் மகாநாட்டு வரவேற்புக் கழகத்தார் தகுந்த கார் வசதி செய்து கொடுத்தது மிக சௌகரியமாக இருந்தது. மகாநாட்டு அன்று சிறிதும் மழை இல்லாதிருந்தது.

---

## நுவரேலியா தமிழர் பொது நலச்சங்கம்

### 10-வது பொதுக்கூட்டம்.

1934-ஞு ஜனவரி-மீ 22ம் தேதி இரவு சுமார் 10-மணி யளவில் மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம்' தோழர் எஸ். கே. பூச்சினே அவர்கள் இல்லத்தில், கெலேகலவில், நடைபெற்றது. தோழர் எட்வின் ஜேக்கபஸ் அவர்கள் தலைமை வகித்தார்.

கடந்தமாதம் 18ம் தேதி மேற்கூறிய இடத்தில் நடைபெற்ற கூட்டத்தின் வர்த்தமானத்தை காரியதரிசி தோழர் ஜான் மைக்கேல், அவர்களால் வாசிக்கப்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்டது. அப்பால் அக்கிராசனர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"தமிழர்கள் என்று சொல்லப்படுகிற எல்லாருக்கும் இச்சங்கத்தில் உரிமையுண்டு. ஏனெனில்ஜாதி, மத பேதமில்லாமல், எல்லா மனிதர்களும் ஒன்றே என்ற கொள்கையை நாம் கடைப்பிடித்திருக்கிறோம். ஆகையால் தமிழ் மக்களை, விசேஷமாகஏழ்மைஸ்திதியிலிருக்கிறவர்களை நாகரீகம் என்கிற வெளிச்சத்திற்கு கொண்டு சேர்க்கவும், அன்பு என்கிற கயிற்றினல் யாவரையுமிணைத்துக்கட்டி, ஐக்கியம் என்ற வேரைநாட்டி கல்வியைப் புகட்டி, தமிழன்சிறப்பு எவ்விதமென்று காண்பிக்கவும், சங்கீதத்தில் யாவரையும் பயிற்சிக்கவும், இன்னமும் இதன்மூலமாய் நமக்கு வேண்டிய எவ்வித நன்மைகளையும் பெறவே இச்சங்கம் ஸ்தாபகம் பெற்றிருக்கிறது.

"இத்திவ்விய நோக்கங்களை உடைத்தாயிருக்கிற நாம் போதனை செய்கிறவர்களாய் மாத்திரமல்லாமல் சாதனையையே கடைப்பிடித்து தமிழ் மக்களின் நன்மைக்கென்றே உழைப்போமாக. அப்பொழுது மற்ற யார் நம்முடைய செய்கைகளைக்கொண்டு பிரமித்து நம்மைப் புகழுவார்கள்."

அப்பால் தோழர் சாமிதாஸ் அல்பர்ட் என்பவர் இச்சங்கத்தில் நடைபெற வேண்டிய சில சீர்திருத்தங்களைப்பற்றியும் சங்கீதம் படிப்பதற்கு வேண்டிய சகல ஒழுங்குகள் செய்ய வேண்டுமென்றும், சங்கத்தில் சேகரிக்கப்பட்ட பணத்தை இலங்கை சேவிங்ஸ்பாங்கியில் செலுத்த வேண்டுமென்றும், சங்கத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்றும் சொல்லி முடித்தார். இதுபற்றி தோழர்கள் ஜான்மைக்கல், பழனிதாசன், எஸ். கே. பூச்சினே, கோகிலதாசன்ஆகியவர்கள் சார்ந்துபேசினார்கள். இவ்விஷயங்களை யெல்லாமற்றப் பொதுக்கூட்டத்தில் பேசிஒழுங்குகள் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

பொக்கிஷதார், தோழர் ஆர். குப்புசாமி அவர்கள் சுகயீனத்தின் காரணமாய் வராததால், தோழர் மைக்கேல் சந்தா வசூல்செய்தார். மற்றப் பொதுக்கூட்டம், நுவரேலிய பௌத்தமத காமினி பாடசாலையில், பிப்ரவரி-மீ 10உ 9-45 மணியளவில் நடைபெருமென்ற தீர்மானத்துடன் கூட்டம் இனிது கலைவுற்றது.

(ஒரு நிருபர்)

## சமதர்ம சுயமரியாதைச் சங்கம்.

27-1-34 தேதி இரவு 7 மணிக்கு காஞ்சிபுரம் தாமல்வார்வீதி சமதர்ம சுயமரியாதைச் சங்கத்தின் அதரவின் கீழ் சமதர்ம சுயமரியாதைப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. சி. கே. குப்புசாமி அவர்கள் தலைமைவகித்தார் பின் தோழர் வி. பி. எஸ். மணியர் அவர்கள் காந்தி பகிஷ்காரத்தைக் குறித்து பேசினர். பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

## பர்மா சுயமரியாதைத் தோழர்கட்கோர் விண்ணப்பம்.

அன்புமிக்க தோழர்களே!

பர்மாவில் நமது மாண்புமிக்க சமதர்மக்கொள்கைநிறம்பியசுயமரியாதை வீரத் தோழர்கள் பல்லிடங்களிலிருந்து நமது புனித கொள்கையை விசாலப்படுத்த சங்கம் இல்லாதது வருந்தத் தக்க தாகையால் அநேக தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்க பர்மாவின்தலை நகரமாகிய இரங்கூன் டல்ஹவுஸ் வீதி (29 கெ. கல்லி முகனை) 495 கெ. இல்லத்தின்மேன் மெத்தையில் சுயமரியாதைச் சங்கம் ஸ்தாபனம் செய்ய வேண்டிய முயற்சியுடன் அங்கத்தினர்களைச் சேர்த்துவருகின்றோம்.

எவ்வித வித்தியாசமின்றி சகல ஆண் பெண் தோழர் ஊக்கம் அளித்து தங்கள் பெயர்களை சங்க அங்கத்தினர்கள் புத்தகத்தில் பதிவு செய்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

முயற்சியாளர்கள்
டி. ஞானப்பிரகாசம்
எம். சோக்கலிங்கம்
எஸ். பி. சுப்பையா
கெ. 495 டல்ஹவுஸி வீதி (29 கெ. கல்லி. முகனை) இரங்கூன்.

---

## சென்னை பகுத்தறிவாளர் கழகம்.

### ஜார்ஜ் டவுனில் கூட்டம். அறிஞர்கள் சொற்பெருக்கு இளைஞர் ஊக்கம்.

சென்னை பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில் சென்ற 28-1-34 ஞாயிறு மாலை 5மணிக்கு சென்னை ஜார்ஜ்டவுனிலுள்ள வேணுகோபால் நந்தவனத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. முன்னமையே பல அறிஞர்கள் பேசவார்னென எல்லா பத்திரிகைகள் வாயிலாகவும் நோட்டீசுகள் வாயிலாகவும் தெரிவித்திருந்த படியால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னமையே பல இளைஞர்களும், பெரியோர்களும் குழுமியிருந்தனர். சரியாக 6மணிக்கு கூட்டம சென்னை 'தமிழரசு' பத்திராசிரியர் தோழர் டாக்டர் [illegible]மணியார் தலைமையில் [illegible]பெற்று தலைவர் முன்[illegible]பின் சென்னை'ராஷனலிஸ்டு'[illegible]தோழர்எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். எஸ். பி. அருணகிரி, கே. கிருஷ்ணசாமி, டி. வி. சுப்பிரமணியம், 'ஆனந்தபோதினி' ஆசிரியர் வி. இராமசாமி முதலியார் சுகாதாரமும், மூட பழக்க வழக்கமும் என்பது பற்றி மிக விரிவாக இளைஞர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு விளக்க மாக சொற்பொழிவாற்றினார்கள். பிறகு தலைவர் பின்னுரைக்குப் பின் கூட்டம இரவு 8மணிக்கு இனிமையாக கலைந்தது.

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

என்று வருணிப்பதில் பிரயோஜனமில்லை! தோழர் காந்தியாரே இங்குள்ள ஜானகிகளெல்லாம் என்ன நிலைமையிலிருக்கிறார்களென்று நோக்குங்கள். பழம் பெருமை பேசவேண்டாம் என்றுதான் கூறுகின்றோம். எங்களுக்குப் பூர்வகாலபெருமை பேசுவதைக்காட்டிலும் எங்களுக்கு நாட்டில் அடிமைத்தனத்தை நீக்கமுற்படுங்கள் என்று கூறுவதில் பிசகென்ன என்று கேட்கிறேன். தோழர் காந்தி நடந்து சென்ற இடத்திலுள்ள காலடிமண்களை தொட்டுக்கும்பிடும் பாமரர் எத்தனைபேர் என்பது காந்திக்கு தெரியாததொன்றா? மதக்கிறுக்குப்பிடித்தவர்கள் எதுவும்செய்வார்களன்றோ? ஆதலால்தான் மதம் ஒழியவேண்டுமென்று கூறுகின்றோம். சுயமரியாதை இயக்கத்தினர்மட்டும் என்ன சாதித்து விட்டீர்கள் என்று கேட்கிறார்கள். இம்மகாநாட்டில் உட்கார்ந்திருக்கும் ஆயிரத்திற்கு மேற்பட்ட தோழர்களில் இரண்டொருபட்டை நாமக்காரர் தவிர ஏனையோரை நெற்றிகுறி அழிக்குமாறு செய்தது எந்த இயக்கம் தெரியுமா? இம்மகாநாட்டிற்கு இரண்டொரு பட்டை நாமக்காரர் வந்திருப்பவர்களும் மகாநாட்டு முழுநடவடிக்கைகளுக்கும் இருப்பாரேயானால் அவரும் நாமத்தை அழித்துவிடத்தான் செய்வார். பட்டை நாமத்தினுடைய உண்மை விளக்கம் அறியாததற்கு முன்னே அவர் எப்படி அழிப்பார்! இதுபோலவேதான் சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன் உங்களை ஒரு பார்ப்பான்நீயார்? என்று வினவினல்நான் ஒரு சூத்திரன் என்றுகூறுவீர்கள். இப்பொழுது பார்ப்பனன் உங்களைச்சூத்திரன் என்றால் அவன் தவடையில் இரண்டு கொடுதனுப்புவீர்கள். இம்மாதிரி இன்னும் பல வேலைகளை சுயமரியாதை இயக்கம் செய்திருக்கிறதெனச் சொல்லலாம். தோழர்களே! இறுதியாக கிராமத்திலுள்ள சிறுவர் சிறுமியர்க்கு மதக்கல்வி போதிக்காது பகுத்தறிவுக்கல்வி போதிக்கவேண்டுமெனவும், அவர்கள்தான் வருங்கால பொறுப்பாளிகளென்றும் தெரிவித்துக்கொண்டு இம்மகாநாட்டைத் திறந்துவைக்கிறேன்.

### வரவேற்புப் பத்திரம்.

பின்பு கீழ்ஈரால் இராஜா ஸ்கூல் வாசகசாலையார் தோழர் எஸ். நீலாவதி அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார்கள் அதன் பின்பு வரவேற்புக் கழகத்தலைவர் தோழர் வேல் வெள்ளைச்சாமி அவர்கள் சொற்பொழிவுநிகழ்த்தினர். அது மற்றொருபக்கம் பார்க்க.

———

### இலக்கணம் அழிக.

### இலக்கியம் தோன்றுக.

[3-ம்பக்கத்தொடர்ச்சி]

நாசத்துக்குக் காரணமென்று காந்திபாபு கூறுகிறார். இது வாஸ்தவமானால் மதுரையில் உண்டாகும்போலிருந்த பூகம்பம் மலையாளத்தில் முதலில் உண்டாகியிருக்க வேண்டும் பார்க்காதே! நடக்காதே!! தொடாதே!!! என்ற வழக்கத்தை உண்டாக்கியவர்கள் அப்படியே இருக்கிறார்கள். இக்கொடுமைக்கு மீண்டும் பாலிஷ் கொடுக்கிறவர்கள் தினம் பலவிடத்துக்குச் சென்று செத்துப்போன வைதீகத்தை நிலை நிறுத்திக்கொண்டு இருக்கிறார்கள். இந் நிலையில் காந்தியாபு சொல்வது எப்படிப் பொருந்தமாக இருக்க முடியும்? இந்து மதக்கொடுமைதான் தீண்டாதார்களுக்கு—தீண்டாதார்கள் சாபம்தான். ஹிந்துக்களுக்கு என்பது வாஸ்தவமாக இருக்கும்பட்சத்தில் காந்தியாருடன் அடிக்கடிபேசும் ஹிந்துக்கடவுளர்களும் அக் கடவுளர்களின் ஆசைப் பிள்ளைகளான பிரபுக்கள் பூசாரிகள்மாத்திரந்தான் அப் பூகம்பப் பிரதேசத்தில் அழிக்கப்பட்டிருக்கவேண்டுமேதவிர அவர்களுடன் எவ்விதத்தும் சம்பந்தமில்லாத மற்ற மக்கள் அழிபடாமலல்லவா அப்பிரதேசத்தில் இருக்கவேண்டும்?

ஃ ஃ

ஹிந்துமதச் சாமிகளின் கொடுமையைச் சகிக்காது வேறு மதங்களான முஸ்லீம்மதத்திலும், கிருஸ்தவமதத்திலும் ஓடித் தஞ்சமடைந்த-ஆதிகாலத்துப் பிள்ளைகளின் சந்ததியார்களான கிருஸ்தவர்களும், முஸ்லீம்களும் இவர்களின் சாமிகளிடமும், தொழுகை இடமும் அங்கு விட்டு வைக்கப்படவில்லையே. இதைப்பற்றி காந்தி மகாத்மா கூறும் சமாதானம் என்ன? இவைகளைச் சுயமரியாதைக்காரன் யோசித்துப் பார்க்கச் சொல்கிறான். நமது தோழர் இராமசாமியார் உலகிலுள்ள மற்ற அறிவாளிகள் கூறியதைப் போலவே பெண்களுக்குக் கோஷா உதவாது என்றார். பூகம்பப் பிரதேசத்தில் வீடுகள் ஆடும் சப்தமும், அதிர்ச்சியும் கேட்டதும் கோஷாப் பெண்கள் கோஷாவைவிட்டு மூடர்களால் இடப்பட்ட முகமூடியை கிழித்துவிட்டுக் உள்ளிருந்து வெளியே ஓடிவருவதா? கோஷா போய்விடுமென்று பயந்து வீட்டினுள் இடிந்துவிழும் சுவற்றுக்குள் சிக்கி உயிர்துறப்பதா? என்று இச்சிந்தனை முடியும்வரை பூமி அதிர்ச்சி காத்திருக்கவில்லையே. கோஷாப்பெண்கள் இருந்த மாளிகைகள் பூகம்பத்தால் இடிந்துவீழ்வதுடன் அதனுள்ளிருந்த பெண்கள் குழந்தைகுட்டிகளுடன் மாண்டார்களென்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இது நாகரீக உலகில் உண்டாவென்றுதான் நாம் கேட்கிறோம்.

ஃ ஃ

இவர்கள்தான் இப்படியென்றால் அழிந்தபிரதேசத்திலுள்ள நமது பரமண்டலத்திலுள்ள பரமபிதாவின் பரிசுத்த கன்னிமேரியின் குழங்கள், கன்னியாபெண்கள் இருக்கிறார்களே இவர்கள் நிலை என்ன? இவர்களையாவது கர்த்தரோ, மதப்போக்கு என்றுகத்தும் மெயில் பத்திரிகை ஆசிரியரோ காக்கவில்லையே, இதையெல்லாம் விட்டுவிட்டு பூகம்ப அதிர்ச்சியினால் நிரபராதிகளான பதினாயிர மக்கள் மடியவும், அவ்விபத்தின் முழு விபரங்கூடத் தெரியமுடியாத நிலையிலிருக்கும்போது ஹிந்துமதச் சாபத்தீடு, ஹரிஜனபாவம் பூகம்பமாகத் தோன்றுகிறதென்றால் இது காந்தியடிகள் உண்மையாகச் சொல்கிறார்களா? வேண்டுமென்று சொல்கிறாரா வென்பதை சிந்திக்கும்படிசெய்தது தான் தோழர் இராமசாமியின் வேலையாகும்.

மதமழிக என்று புதியதோர் அறிக்கையை காந்திபாபுவிடம் கொடுத்தாராம் ஒருவர். அப்படத்தில் சரோஜனியும், திருவனந்தபுரம் ராணியும் இருந்துங்கூட மதமழிக என்ற சொல்லிருந்ததற்காக காந்திபாபு அதைப் பெற்றுக்கொள்ள மறுத்ததாக இவ்வூர் பத்திரிகை செய்தி கூறுகிறது. அப்படத்திலுள்ளவர்களிடம் காந்திபாபுவுக்குள்ள ஆசையையும், மதமழிக என்பதிலுள்ள கோபத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால் படத்திலுள்ளவர்களிடம் அவருக்குள்ள அன்பின் அளவைவிட அவ்வார்த்தையிலிருந்து அவருக்குள்ள வெறுப்பே அதிகமென்பதை அச் செய்தி நமக்கு காட்டுகிறது. இத்தகைய மிகப் பலமான மதப் பிடிவாதமுள்ள ஓர் பாபுஜி, நாம் மதமழியவேண்டுமென்று இராப் பகலாகப் பாடுபடும்போது எதிராகப் பிரசாரம் செய்துவருகிறார். இதுகாறும் "ஆமாம் சாமி;" போடும் மக்கள் நாட்டில் இருப்பதால் இவைகளுக்கெல்லாம் நாடு கொடுக்கும் முறையில் உங்கள் வேலைகளைத் தவறாது செய்யுங்களென்ற வழியைத்தான் நமது தலைவர்களான அண்ணனும் தங்கையும் செய்துகாட்டி சிறையில் இருக்கிறார்கள். ஆதலால் நாமும் நம் கடமையைச் செய்யத் தவரக்கூடாதல்லவா?

பிப்ரவரி மாதம் 11-ந் தேதி சுயமரியாதை நாள். அன்று தமிழ்நாடெங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்துங்கள். ஒவ்வொரு "புரட்சி" சந்தாதாரரும் புதிதாக ஓர் சந்தாதாரர் விகிதமேனும் புதிதாகச் சேருங்கள். புதிய சங்கங்களை ஏற்படுத்துங்கள். பழைய சங்கங்களைப்பலப்படுத்துங்கள். அன்று அந்தந்த சங்கத்தார்கள் சக்திக்கியன்ற அளவு வசூலித்து பீகார் பூகம்ப நிதிக்கு அனுப்புங்களென்று வேண்டுகிறேன்.

———

### சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

———

ஷை மன்றத்தின் வாராந்திரக்கூட்டம் 28-1-34 ஞாயிறு பிற்பகல் 2மணிக்கு தோழர் சி. தங்கராஜ் தலைமையில் 221 தங்கசாலை வீதியில் கூடிற்று. அதுசமயம் தோழர்கள் டி. ராதா கிருஷ்ணன், டி. சம்பந்தம் எம் எஸ். முத்து, சி. ஆர். தினத்யாலு முதலியோர் 'இந்தியாவும், மதமும்' என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். தவிர 21-1-34-ல் நடைபெற்ற நிர்வாக அங்கத்தினர்கள் கூட்டத்தில் புதுவை பாரதிதாஸன் அவர்களால் இயற்றப்பட்ட இரணியன் அல்லது இணையற்றவீரன் என்ற நாடகத்தை மார்ச்சுமாதத்தில் நடிக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

(காரியதரிசி)

——

### திருச்சங்கோடு தாலூகா ஆதிதிராவிட மகாஜன சங்கம்.

———

திருச்செங்கோடு தலூகா ஆதிதிராவிட மகாஜன சபையின் பொதுக்கூட்டம் 20-1-34 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செங்கோடு ஆதிதிராவிட பொதுமடத்தில் தோழர் எஸ். ஆர். ஸ்ரீரங்கன் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்நடந்தது. தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் கே. எஸ். கந்தசாமி கீதம் பாடினர். என். மாரிமுத்து, கே. மாரிமுத்து வி. ஆர். பொன்னுசாமி பி. சுந்தரம், வி. கந்தசாமி, எஸ். குப்புசாமி முதலியவர்கள் நீண்டநேரம் தீண்டாமைஒழிப்புஎன்பதுபற்றிஉபந்நியாசம் செய்தார்கள். பின் தலைவர் பின்னுரையாக சில விஷயங்கள் பேசிய பிறகு தலைவருக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 9-30மணிக்கு இனிது முடிவடைந்தது.

——

### துறையூர் தேவாங்கர் சமரச சங்கத் திறப்புவிழா

நாளது 10-11-2-34 சனி ஞாயிற்றுக்கிழமைகளில், சேலம் ஜில்லா போர்டு தலைவரும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான உயர்திரு திவான் பகதூர் எஸ் எல்லப்ப செட்டியார், எம். எல். சி. அவர்கள் தலைமையில் திறப்பு விழாவும், பல உபந்நியாசங்களும் நடைபெறும்.

(காரியதரிசி)

———

### ஏனாத்தூர்சேரிப் பிரசாரம்.

———

26-1-34 இரவு 7 மணிக்கு காஞ்சி தாலூக்கா 117 நெ. ஏனாத்தூர் சேரியில் காந்தி பஹிஷ்காரப் பொதுக்கூட்டம், நடைபெற்றது கூட்டத்திற்கு காஞ்சி தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்பசாமி அவர்கள் தலைமைவகித்து சிறிதுநேரம் பேசினர் பின் தோழர்கள் இராஜகோபால் சென்னைத் தோழர் வி. பி. எஸ். மணியம் ஆகியவர்கள் பேசினார்கள்.

"நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி.

## கலியாணசுந்தரமுதலியார் அவர்களால்

—:0:—

தமிழ் மணம், விடுதலை, பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிதல், சமரசம், சன்மார்க்கம் ஆகியவைகள் ததும்ப எழுதப்பட்ட அரிய அந்நூல்கள்:—

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை ... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் ... ... ... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு ... ... ... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் ... ... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... ... | 2 | 8 |
| என்கடன் பணி செய்து கிடப்பதே ... ... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் ... ... ... | 0 | 8 |
| சைவத்திறவு ... ... ... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் ... ... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... ... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து ... ... | 0 | 8 |
| நாயன்மார் ... ... ... | 0 | 3 |
| சைவ சமய சாரம் ... ... ... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் ... ... | 0 | 6 |
| தமிழ் நாடும் நம்மாழ்வாரும் ... ... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல் ... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் ... ... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபால் செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலித்தெரு, இராயப்பேட்டை, சென்னை.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | 0—6—0 |
| 5. | மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ... | 2—0—0 |
| 8. | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ... ... | 0—6—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |
| | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செப்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## அமுத சுரபி.

### சிறந்த தாதுவிருத்தி இலேகியம்

### உயர்ந்த காயகற்பகம்.

இஃது ஆண் பெண் இருபாலருக்கும் எவ்வகைக்காரணங்களினாலாவது இரத்தம் கெட்டு வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சியடைந்து இந்திரியக் கசிவு, வெட்டைச்சூடு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், விருப்பின்மை முதலிய துன்பங்களால் புத்திரப்பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி அமுதமயமான உடம்பையும், பலத்தையும், நல்லறிவையும் அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட்பேற்றையும், பொன்போன்ற மேனியையும் அமுத சுரபி தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

40-நாள் மருந்து ரூ. 3—8—0.
20-நாள் மருந்து ரூ. 1—14—0.

மானேஜர்:—

பண்டிட் ஆனந்தம்வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

சுகவழி கேட்லாக் இனாம்.

## வியாதியா?

### பயப்படவேண்டாம்.

எங்களிடத்தில் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த பஸ்ப செந்தூர வகைகள் கிடைக்கும். 30 வருஷகாலமாக அனுபோக முள்ளது. உத்திரவாதமுள்ளது. ஆண் பெண், வயது, வியாதி, உற்பத்தி காலம், தெரிந்தவரையில் எழுதி மருந்தை வரவழைத்துச்சாப்பிடுங்கள்; சுகமாகும்.

தாம்பரபஸ்பம் குஷ்ட மேகங்களுக்குஅனுபானத்துடன் ½ மண்டலம் பாதி விலைப்படி ரூ. 12—8—0.

தாளக பஸ்பம் க்ஷயரோகங்களுக்கு அனுபானத்துடன் மண்டலம் ரூ. 12—8—0.

ஆர். எம். நாராயணசாமி,
தன்மவந்திரிஔஷதசாலை பழனி.S.I

## "குடி அரசு" புதிய வால்யூம்.

—*—

நமது "குடிஅரசு" பத்திரிகையின் 8வது வருஷ மலர்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு புதிய வால்யூம் மிக்க அழகாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

உடனே முந்துங்கள்.

விலை ரூபாய் நான்கு

"புரட்சி" சந்தாதார்களுக்கு, விலை ரூபாய் மூன்று.

தபால் செலவு வேறு.

பணம் முன்னதாக அனுப்பி விடவேண்டும். இல்லாவிட்டால் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

## தீராத வெட்டை நோய்க்கு

### உத்திரவாதம்.

11-நாட்களில் குணமாகும். 22 மாத்திரை கொண்ட மருந்து பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0. (வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்) எவ்வித பத்தியமும் கிடையாது.

விலாசம்:— நா. நமசிவாயம், (கேட்டிவ் டாக்டர்)
தெக்ஷிணாமூர்த்தி தமிழ் வைத்தியசாலை,
திருக்கோஷ்டியூர், (ராமநாதபுரம் ஜில்லா)

# குடி அரசு பதிப்பக புஸ்தகங்கள்.

**மதமும், லெனினும்.**
விலை அணு 0—4—0

**கைவல்யம் அல்லது கலைக்கியானம்.**

**பொதுவுடமைத்தத்துவங்கள்,**
விலை அணு 0—3—0.

**இராமாயண ஆராய்ச்சி.**
முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணு. 0—8—0

**ஞானசூரியன்.**
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

**ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.**
இதன் விலை அணு. 0—2—0.

**தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.**
இதன் விலை அணு 0—3—0

**பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.**
இதன் விலை அணு 0—4—0

**மேயோகூற்று மெய்யா? பொய்யா?**
இதன் விலை அணு 0—3—0

**அகத்தியர் ஆராய்ச்சி.**
இதன் விலை அணு 0—2—0

**ரஷ்யாவைப் பற்றி பெர்னுட்ஷா.**
விலை அணு 0—1—0

**கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?**
இதன் விலை அணு 0 2—0

**கடவுளும், பிரபஞ்சமும்.**
இதன் விலை அணு 0—4—0.

**சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?**
விலை பை. 0—0—3

**இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.**
விலை பை. 0—0—6

**இந்தியாவின் குறைபாடுகள்.**
டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணு. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—8—0

**இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.**
விலை அணு. 0—2—0

**சுயமரியாதைப்பாடல்.**
விலை அணு 0—2—0.

**கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)**
விலை அணு 0—2—0

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

**பெண் ஏன் அடிமையானாள்?**

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும்.

விலை அணு 5.

**முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.**

—இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்த ககாட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 5.

**நான் ஏன் கிறிஸ்தவனல்ல?**

இந்நூல் பேர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்சசி நூல்.

விலை அணு 3.

**மதம் என்றால் என்ன?**

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 2.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

விலாசம:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், ஈரோடு.**

## முன்னேற்றம்.

பிரிட்டிஷ் மலேயா நாடுகளில் முதன்மை வாய்ந்த நமது சுயமரியாதை இயக்கப்பத்திரிகை.

மலாய் நாட்டிற்கு வருட சந்தா ஷில்லிங். 5—0—0.

வெளிநாடுகளுக்கு ரூ. 8-0-0

## 'பிரசண்ட மாருதம்'

சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சிறந்த மாதப்பத்திரிகை

உள்நாடுவருடசந்தா ரூ. 1—0—0
வெளிநாடு ........ ரூ. 1—8—0
தனிப்பிரதி $1\frac{1}{2}$ அணு

விலாசம்:—
மானேஜர்.
பிரசண்டமாருதம் ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.